வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 புரட்டாதி திங்கள் 4-ம் நாள் (20—9—1964) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ்வல் 13 | இதழ் 17

## திருமலை கோணேசர் கோட்டையுள்

# பௌத்த பாடசாலை நிறுவ முயற்சி?

## புனித நகராக்க முட்டுக்கட்டை

திருகோணமலையிலுள்ள பிரெட்றிக் கோட்டையை புனித நகரமாகப் பிரகடனப் படுத்த வேண்டு மென்று கிளர்ச்சிகள் நடைபெற்று வரும் இவ் வேளையில், இக் கோட்டைக்குள் ஒரு பௌத்தமத பாடசாலையினை நிறுவுவதற்கான முயற்சிகளும் நடைபெற்றுவருவதாகச் செய்தி கிடைத்துள்ளது. இது திருமலை இந்துசமயப் பெரியார்களுக்கு திருமலை அரசாங்க அதிபர் கொடுத்ததாகக் கூறப்பட்ட வாக்குறுதியை மீறும் செயலாகும். திருகோணமலை வாழ் இந்துக்கள் மட்டுமல்லாமல், இத்தீவு எங்குமுள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பிரெட்றிக் கோட்டையுள் பௌத்த பாடசாலையையோ, வேறு சமய சம்பந்தமான நிலையங்களையோ நிறுவும் முயற்சியை எதிர்த்துக்கிளர்ச்சி செய்வார்கள் என்று நம்பப்படுகிறது. ஏனெனில் அத்தகைய நிலையங்கள் அங்குநிறுவப்படுவதால் புனித நகராக்கும் முயற்சிக்குக் குந்தகம் ஏற்படலாம். புனித நகரானபின்னர் அவற்றை அங்கிருந்து அப்புறப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் வேறு ஏற்படுமென்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

திருகோணமலையில் கோணேசப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் பிரெட்றிக் கோட்டையை இந்துக்களின் புனித நகரமாகப் பிரகடனப் படுத்தும்படி. அகில இலங்கையிலுமுள்ள இந்துமத நிறுவனங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. திருகோணமலை வாழ் சைவ சமயப் பிரமுகர்களும் இது விடயமாக பெரு முயற்சி எடுத்துவருகின்றனர்.

பிரிட்டிஷாரின் ஆட்சி காலத்தில் இக்கோட்டை பிரபலமான இராணுவத் தளமாக இயங்கிவந்தது. பிரிட்டிஷ் துருப்புக்கள் அகன்றபின்னர் இலங்கை அரசின் உடமையாகிய இக் கோட்டை, இலங்கை இராணுவத்தின் சில பிரிவுகளுக்கான உறைவிடமாகவிருந்து இப்பொழுது சில அரசாங்க காரியாலயங்களும் இங்கு மாற்றப்பட்டிருக்கின்றன. இங்குள்ள சில வீடுகளில் அரசாங்க ஊழியர்கள் வசித்து வருகின்றனர். இங்கிருந்த இராணுவத்தினரும் இப்பொழுது இடம் பெயர்ந்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

இப் பிரதேசத்தை புனித நகரமாகப் பிரகடனப் படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் புறக்கணித்து வருவதாகவே கூறப்படுகிறது. திருமலை சைவப் பிரமுகர்கள் இது பற்றி அரசாங்க அதிபரைப் பேட்டிகண்டபோது, கோட்டைக்குள் காலியாகும்இடங்களை இந்துக்களல்லாத வேறு எவருக்கும் வழங்கப் போவதில்லை என்று கூறினாராம். புனித நகராகப் பிரகடனப்படுத்துவதற்கு அரசுக்கு ஆலோசனை கூறுவதாகவும் அதிபர்வாக்களித்ததாகக் கூறப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் தாய்மொழி ஆங்கிலமா?

அஞ்சல் திணைக்கள சீர்திருத்தம்பற்றி அத் திணைக்களத்தைச் சேர்ந்த தொழிற் சங்கங்களிடம் தபால் அமைச்சர் திரு. ஆர். எஸ். பெல்பொல அபிப்பிராயம் கோரியிருந்ததும், பல தொழிற்சங்கங்கள் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

அமைச்சரின் கோரிக்கையை ஏற்று மொழி வழித் தொழிற்சங்கங்களிலொன்றான அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம்அமைச்சரைப் பேட்டி கண்டு பலதரப்பட்ட கருத்துக்களை விளக்கிக் கூறிய

(9-ம் பக்கம் பார்க்க)



தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் தமிழுக்கு ஈந்த பெரியார், எல்லாம் தமிழென வாழ்ந்த ஏந்தல், வண் தமிழர் வாழ்விடத்தைக் காத்த செம்மல், அறவழி அரசியல்கண்ட அண்ணல், சிங்கள அரசு அளித்த சிறை வாழ்வைச் சிரித்த முகத்துடன் ஏற்ற பெரியார், கோப்பாய் தந்த கோமான் அமரர் கு. வன்னியசிங்கம்.

**தோற்றம்: 13-10-1911** **மறைவு: 17-9-1959**

## முன்னாள் நிதி மந்திரிக்கு தகவல் தந்தது யார்?

"டாக்டர் என். எம். பெரேராவுக்குச் சொந்தமான அரிசி மில் பற்றிய பிரச்சினையைக் கிளப்பும்படி முன்னாள் நிதி மந்திரி ஒருவருக்கு இரகசியமாகத் தகவல் கொடுத்தவர் சமசமாஜக் கட்சியின் ஒரு பெரும் புள்ளி என்பது நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது" என்று 'சியரட்ட' பத்திரிகையின் அரசியல் நிருபர் 11-9-64 திகதி இதழில் எழுதியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது:-

"டாக்டர் என். எம். பெரேராவை நாடும் தொழிலாளர் வர்க்கம் இப்பொழுது வெறுத்து ஒதுக்குவதால்

(9-ம் பக்கம் பார்க்க)

## தலைவர்கள் நினைவு விழா

மறைந்த தமிழரசுத் தலைவர்களான அமரர் வன்னியசிங்கம், ஏகாம்பரம், கந்தையா, இராசவரோதயம் ஆகிய பெரியார்களை நினைவு கூருமுகமான இத்திங்கள் 20ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துக்குற்ற இடர் களைய இன்னுயிரீயவும் தயாரேன

## வாழ்ந்து வானுறைந்த வன்னியசிங்கம்



கட்டுரையாசிரியர்

"எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு சீரழிந்து, காலப்போக்கில் ஒழிந்து போவதைப் பார்க்கிலும், நான் தேசத் துரோகி என்று குற்றஞ்சாட்டப்பட்டு, தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படுவதையே என்றும் மன மகிழ்வோடு வரவேற்கிறேன்." எத்தனை வீரம் செறிந்த வார்த்தைகள். ஆமாம், 'சிறைச் சாலையா! அது பூங்குயில் கூவிடும் பூஞ்சோலை; தூக்குக் கயிறு? அது துயில்கொள்ள எனையழைக்கும் பஞ்சணை' என்ற கோதாவிலே மேற் கூறியவாறு கூறிய பெம்மான் வேறு யாருமல்ல, கோப்பாய், தமிழர்களுக்குத் தந்த கோமான் தான். ஆம், தமிழர் வரலாற்றில் தனியிடம் வகிக்கும் வன்னியசிங்கம் தான்.

நொந்த உடலத்திலிருந்து, வெந்த மனத்திலிருந்து வந்த இந்தச் சொற்களைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாதாரண ஒரு அரசியல்வாதியிடமிருந்து சட்டென வந்து விழும் வார்த்தைகளா இவைகள்! இல்லை. 'தமிழ் இனமே மூச்சு, தமிழ் மொழியே என் பேச்சு, அவை அழிந்தால் நான் இருந்தென்ன ஆச்சு' என்று எண்ணிடும் ஏற்றமுடை ஒரு தமிழ் மகனின் தனிப்பெரும் மனத்திலிருந்து வரும் தகைமை சான்ற வார்த்தைகள் அல்லவா இவைகள்? ஆமாம். இவ்வார்த்தைகளை வாசித்தவுடன், பாட்டுக்கோர் புலவன் பாரதி பாடியவொரு பாடற் பகுதியே ஞாபகம் வருகிறது. தேசிய இயக்கப் பாடல்களில் ஓர் இடத்தில் அப்பாவலன் கூறுகிறான்:

> தாய்த் திருநாட்டைத்
> நகர்த்திடு மிலேச்சரை
> மாய்த்திட விரும்பான்
> வாழ்வுமோர் வாழ்வுகொல்?
> மானமொன்றிலாது
> மாற்றலர் தொழும்பராய்
> ஈனமுற்றிருக்க எவன்
> கொலோ விருப்புவன்?
> தாய் பிறன் கைப்படச்
> சகிப்பவனாகி
> நாயென வாழ்வோன்
> நமரிலிங் குளனோ?

நம் பண்டிதர் வன்னியசிங்கனார் கூறியதைத்தானே பாவலன் தனக்கேயுரிய மொழியில் கூறியுள்ளான். ஏன்! தன் இனத்துக்காகவும் மொழிக்காகவும் அழிந்துபட்டுப் போகக் கூடச் சித்தமாக இருந்த ஒரு செம்மல் பற்றி நாம் வேறு என்ன கூறவேண்டியிருக்கிறது. அவர் விட்ட ஒவ்வொரு மூச்சும் தமிழ் மூச்சாகவிருந்தது என்றால் மிகையாகுமா, என்ன? இல்லையே!

### சொன்னதைச் செய்தார்

எல்லாந் தமிழ் என்று எக்காளமிட்ட இப்பெருந்தகை 1911ம் ஆண்டு ஐப்பசித் திங்கள், பதின்மூன்றும் நாள் பிறந்து, தமது இளம் பருவமாம், நாற்பத்தெட்டாம் வயதில் புகழின் உச்சிதனையடைந்து, வள்ளுவன் குறளுக்கோர் எடுத்துக்காட்டாய் விளங்கி, 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினேழாம் நாள் பரமன் பதமடைந்தார். அப்படிப்பட்ட ஓர் உத்தமரை நாம் ஆண்டுதோறும் நினைவு கூர்கின்ரும் என்றால் அதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டும். சொல்லுக்குப் பவர் சொல்லி அதனைச் செயலில் காட்டாதபோது அவர் நல்லவராணலும் ஆண்டுகள் சில போக மக்கள் மனதில் இல்லாதவராகவே போய்விடுகிறார். அப்படியெனில், கோப்பாய்க் கோமகனார் சொன்னார். ஆம் செய்தார் சொன்னதைச் செயலில். ஆதாரம் உண்டோ என்றால், ஏராளம் உண்டே!

ஈழ நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் வானில் புதியதொரு திருப்பத்தைக் கொணர்ந்தவர் இவர் என்று கூறலாம். அது எப்படியெனில், ஒரு சிலரின் பொழுது போக்காக, ஒரு சிலரின் ஏகபோக உரிமையாயிருந்த அரசியலை மக்கள் சக்தியின் பிரதிபலிப்பாக மாற்றியமைத்த இயற் பெருமை இவரைச் சார்ந்தது என்றால் மிகையாகாது.. தமிழ் அரசியல் வானைப் பொறுத்தமட்டில் ......ஆம், ஈழத்தைப் பொறுத்த மட்டில் தமிழரின் அரசியல், மக்கட் சக்தியாக ஆக்கப்படாத பட்சத்தில் ஆக்கம் இல்லை என்பதனை நன்குணர்ந்தார்,

**ஏ. வி. பி. கோமஸ் பி. ஏ.**

இரண்டொருவர் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாயிருந்து அரசியலாரிடம் இரந்து மன்றாடுவதை விட, மக்கள் சக்தியே ஒரு கட்சியாக மாற வேண்டும் என்ற எண்ணங்கொண்டார். எண்ணம் செயலானது. அதையே அண்ணல் செல்வா கூறுகிறார் இப்படி. அதாவது, திரு. செல்வநாயகம் ஒரு முறை வன்னியசிங்கத்தைப் பற்றிக் கூறும்போது சொன்னார் இப்படி. ஆம். 'திரு. வன்னியசிங்கம் இல்லாமல் தமிழரசு இயக்கம் உற்பத்தியாகியிருக்காது; இன்றைய நிலைக்கு அது உயர்ந்துமிருக்காது. அவர் பெருந் தியாகி.' ஏன், 1948ம் ஆண்டு முதல் உருவாகி இன்று ஓர் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாகமாற்றமடைந்திருக்கும் இவ்வியாட்சிக் கட்சி; சமஷ்டிக் கட்சி யார் உழைப்பால் உருவானது; யார் தியாகத்தால் வளர்ந்தது? நாம் ஏன் கூறுவான்; இன்றையத் தங்கத் தமிழ் நாட்டின் சேய்நாடாம் ஈழத் திருநாட்டின் தனிப்பெருந் தமிழ்த் தலைவனே பகர்கின்ருரே பதில், 'வன்னியசிங்கமே வழிகாட்டி' யென்று.

### மூத்ததமிழுக்கே மூன்றும்......!

மலைநாடு வாழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது; அவர்களின் வாக்குரிமை நீக்கப்பட்டபோது; தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தலைகாட்டியபோது; ஏன்! 1956ம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டம் தலைவிரித்தாடியபோது பாராளுமன்றத்தின் உள்ளேயும், பரிதவித்தோர் நடுவிலும், வீரான்பவர்கள் சிறையில் தள்ளியபோது வாராத துன்பங்கள் வந்துற்றபோதும்; நேரான சிந்தனையுடன் சீராகப்பேசி மக்களைத் தட்டியெழுப்பிய செம்மல் யார்?' என்னத்தில் தெளிவு, எடுத்துக் கொண்ட கருமத்தில் உண்மை கலந்துறவாடும் போது, அவன் செயல் என்னத்தில் குறைவுபடப்போகிறது. ஆம். வன்னியசிங்கம் மனத்துக்கண்மாசிலனுயிருந்தார். தன் உடல், பொருள் ஆவி மூன்றையும் உற்ற தமிழுக்காக, உயர்ந்த இனத்துக்காகத் தத்தம் செய்தார். ஆம். தத்தம்தான் செய்தார்!

மேலும் வடக்கும் கிழக்கும் வளமார்ந்த தமிழர் கையிலிருக்க வேண்டும் என்பது அவரது தணியாத ஆவல். பிறர் குடியேற்றம் நம் இறப்புக்கு வழிதேடும் என்பதை நன்கறிந்திருந்தார் அவர். ஆதலிற்தான், செட்டிகுளம், பாவற்குளம், முதலிக்குளம் போன்ற இன்பத் தமிழர் இருப்பிடங்களை வேற்று இனத்தவர் எட்டிப்பிடிக்க எண்ணியபோது சீறியெழுந்தார்; கணை தொடுத்தார். வெற்றியும் கண்டார். ஆகையால் தானே இன்று அவரை 'வாழ்விடத்தைக் காத்த வன்னியசிங்கம்' என்று வாயாரப் புகழ்கிறோம். அல்லாமலும்......

### அவர்பணி தொடர்வோம்

இனம் வாழவேண்டுமெனில் மொழி வாழவேண்டும்; மொழி வாழவேண்டுமெனில் தனித்தன்மை வேண்டுமென்பதை நன்குணர்ந்திருந்தார் இவர். தனித்தன்மை காக்கப்பட்டால்தான் மொழிவாழும், மொழி வாழ்ந்தால் தான் இனம் வாழும் என்று நன்குணர்ந்து அதன் பொருட்டு 'எல்லாந் தமிழ் இயக்கத்தை' இயக்க ரீதியில் வளர்த்த பெருமை இவரையல்லவா சார்ந்தது! தனித்தமிழ் இயக்கம்பற்றி நாம் முன்னுலேயே கேள்விப்பட்டிருந்தாலும் 'எல்லாந் தமிழ் இயக்கம்' ஈழத் திருநாட்டின் இன்பத் தமிழர்களுக்குக் கொஞ்சம் புதிதாகத்தானேயிருந்தது. ஆகையால் அவர் நாமம் நம்மிடை வாழவேண்டுமெனில், அவர் தொடங்கிவைத்த பணியைத் தொடர்ந்து நடத்துதல் நந்தமிழர் மகத்தான கடமையன்றோ. இன்னும்......

### சாதியைச் சாடினர்

தமிழர்களின் சாபக்கேடு சாதி சமய வேறுபாடாக இருந்து வந்தது என்பதை நாம் அறிவோம். அந்நிலை மாற்றி நன்னிலை கொணரப் பாடுபட்டவர்கள் பல்லோர் ஆவர்; அதிலும் வாய்ப்பந்தல் போட்டோர் தான் ஏராளம், ஏராளம். ஆனால் வன்னியசிங்கத்தார் அப்படியல்ல. தாழ்ந்த சாதியினர் என்று அழைக்கப்பட்ட அந்தத் 'தமிழர்களைத்' தன்னில்லத்துக்குள் அழைத்துச் சரியாசனம் கொடுத்திருக்கிறார். ஏன். சரியாசனத்திலிருந்து நற்போசனம் கூடச் செய்துள்ளார். அப்படிச் செய்வது பாவம் என்று அறியவர்களைக் கண்டு எள்ளி நகையாடினர்; உண்மையை எடுத்துக் கூறினர். 'சாதிகள் இல்லையடி பாப்பா,' என்ற சாதா[illegible] அதுதவர்களுக்கு [illegible] சொல்லித்தான் என்ன பிர

(13-ம் பக்கம் பார்க்க)




## தலைவா! உன்மீது ஆணை

—கோவை மகேசன்—

> வானவெளி வீதியிலே வன்னியரைக் கண்டேன்
> வைத்த விழி வாங்காமல் பார்த்தபடி நின்றேன்
> கார்வண்ணத் தலைவனென்னை அன்புடனே நோக்கி
> கனிவுடனே 'தம்பி' என அழைத்த குரல் கேட்டேன்.
>
> வேறு
>
> நான்:
> எங்கள் தலைவா! எப்படி நலமா?
>
> வன்னியர்:
> வாடா தம்பி! வாழிய செந்தமிழ்!
>
> வஞ்சகர் வலையினில் வீழ்ந்து சிதறிய
> வடக்கையும் கிழக்கையும் மலைநாட்டினையும்
> சேர்த்தேன் ஒன்றாய் செல்வரின் ஆணையில்
> செத்தது அன்றே சிறுமதி வேற்றுமை,
> என்தமிழ்த்தாயின் எழிலைக் குறைக்க
> எண்ணிய எத்தரை எதிர்த்தேன் வென்றேன்.
> இன்றோ,
> தன்மானத்தின் தவத்தால் எழுந்த
> தகர்த்திட முடியா தனிப்பெருங் கோட்டையை
> சின்ன பின்னமாய் சிதறடித் தொழித்திட
> சீறிவருகிறார் சிங்கள வெறியர்!
> காட்டிக் கொடுக்கும் கயமை மேவிட
> காணிக்கை பெற்றும், காவடி சுமந்தும்
> எதிரியின் காலடி எச்சிலை மென்றும்,
> எட்டப்பன் வேலையை ஏற்றியும் போற்றியும்
> திரண்டு விட்டனர் தீச்செயல் ஆற்றிட
> தீந்தமிழ் அன்னையின் மானத்தை விற்றிட
> அதோபார்! தம்பி அவனும் நீயும்,
> அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்கள்
> உன்னையும் உந்தன் அன்னை தன்னையும்
> அன்னியன் தனக்கே அடிமையாக்கிட
> உன்னுடன் பிறந்த, உன் சோதரனே
> பின்னடையாமல் முன்னே வருகிறான்.
> என்னடா செய்வேன்? இத்தமிழர்க்காய்
> வீணே உழைத்தேன்; விழலுக்கிறைத்தேன்;
> தென்னு! தமிழா! தீந்தமிழ்க்காவலா!
> தமிழைப் பழித்த தரங்குறைந்தோனை
> தாயே தடுத்து மறித்து நின்றாலும்,
> தயங்க வேண்டாம்! தறித்திடு தலையை!!!
>
> நான்:
> சிங்கத்தலைவா! சிந்தனை யொழிமின்!!
> உன்வழி நடந்து, உயிரையும் தருவோம்.
> உன்விழி எமக்கு உறுதியை வழங்கும்
> உன்முகம் எமக்கு உண்மையை விளக்கும்;
> இன்னல்கள் ஏற்பினும், ஈழத்தில் தமிழ்
> அன்னைக்கென ஒரு அரசு ஆக்குவோம்!
> காட்டிக் கொடுக்கும் கயமையாளர் மேல்
> காறியுமிழ்வோம்; காலால் உதைப்போம்
> எங்கும் தமிழே! எல்லாம் தமிழே!!
> இதுவே எங்கள் இதயமுழக்கம்!
> உன்மீது ஆணை! ஓராண்டுக்குள்,
> உரிமைகள் பெற்று அரசினைக் காண்போம்!!

## கோப்பாய்க் குலக்கொடி

—ஆரையூர்—அமரன்—

> கோப்பாய்க் குலக்கொடி தந்த மகன்—பகை
> கொல்லும் மறக்குடி வந்தமகன்
> கொள்கை குலையாத சின்னமவன்—தமிழ்
> கோமகன் வன்னிய சிங்கமவன்.
>
> ஆண்மைக் இலக்கணம் போன்றவனாய்—தமிழ்
> அன்னையைக் காத்திட நின்றவன் காண்
> ஆணி தலையிலறை தலைப் போல—சொல்
> அம்புகள் வீசியே வென்றனன் பார்.
>
> சூட்சிச் சுயநல வேட்கையிலே—தமிழ்
> நாட்டுத் தலைவர்கள் வீழ்கையிலே
> ஆட்சி அதிர்ந்திடு பேரிடியாம்—தமிழ்
> ஆட்சி செய் கட்சியைத் தோற்றியவன்.
>
> காட்சிக் கெளிமையாய்த் தோற்றினவன் தமிழ்
> மீட்சி பெறவழி நாட்டினவன்
> ஆட்சிப் புலமையின் ஆற்றலினுல்—பலர்
> போற்றும் செயல் பல ஆற்றியவன்.
>
> சொல்லும் செயலையும் கூறிவந்தான்—தமிழ்
> சொந்த மிலார் நிலை மாறு மென்ருன்
> பின்னைப் பெறுவது அன்னை யென்ருள்—பிறர்
> பெற்றுத் தருவது மில்லை யென்றன்.
>
> வன்னிய சிங்கனை வாழ்த்திடவே—அவன்
> எண்ணித் துணிந்தது ஈடேறும்
> சொன்ன பொன் வாக்கிலே ஆழ்ந்திடவே—நமைச்
> சூழ்ந்த பகையெலாம் வீழ்ந் தோடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி. கே. செல்வம்,
அல்வெட்டித்துறை

கே: தமிழரசுக் கட்சியிலிருந்து ராஜினுமா செய்த சிவசுந்தரத்தின் எதிர்காலத் தேர்தல் வாழ்வு யாது?

ப: திறைசேரிக்கு ரூ. 1000 இலவசமாகக் கொடுப்பார் என்பது எனது ஆருடம்.

ஃ

தம்பி, அல்வாய்

கே: என்னை இரு பெண்கள் காதலிக்கிறார்கள். ஒருத்தி நான் வேலை செய்யும் இடத்தில் இருப்பவள். நான் இவளையே விரும்புகிறேன். மற்றவள் எனது சொந்த மாமன் மகள், இவளை நான் விரும்பவில்லை. இவளோ நான் இல்லையேல் உயிர்விடுவதாகவும் பலவிதமாக வர்ணித்தும் கடிதம் எழுதுகிறாள். இவளுக்குக் கடிதம் போடலாமோ? யாரைத் திருமணம் செய்வது?

ப: நீங்கள் விரும்பும் பெண்ணையே மணம் செய்யுங்கள். நீங்கள் விரும்பாத பெண் கடிதங்கள் எழுதினாலும் பதில் எழுதாதீர். பதில் எழுதினால் சிக்கல்கள் ஏற்படலாம்.

ஃ

தமிழரசு மைந்தன்,
மஸ்கெலியா

கே: ஒருவர் ஒருமுறை காங்கிரசுகளில் சேர்ந்துவிட்டால், அவர் அவற்றிலிருந்து விலகினாலும் அல்லது உலக வாழ்க்கையையே மறந்தாலும் அங்கத்தவர்கள் பட்டியலில் இருந்து அந்த பெயர் அகற்றப்படமாட்டாதாமே, இது உண்மையா?

ப: இல்லையேல், 3 லட்சம் 4 லட்சமென்று அங்கத்தினர் தொகை ஏறமுடியுமா?

கே: ஐக்கிய தேசியக் கட்சி தமிழரின் உரிமைகளை முற்றிலும் அசட்டை செய்துவிட்ட போதிலும் பல நடுத்தர வகுப்புத் தமிழர் அக் கட்சிக்கு வால் பிடிப்பதன் மர்மம் என்ன?

ப: அது பணத்துக்குப் பஞ்சமில்லாத கட்சி. வாலைப் பிடிக்கப் பிடிக்கச் சொந்தப் பை நிரம்புமல்லவா?

ஃ

தமிழன்பன், மஸ்கெலியா

கே: "இலங்கை இந்தியர் பிரச்சினையை தீர்க்க திரு. தொண்டமானிடம் ஒரு திட்டம் இருக்கிறது. அதை ஏன் அரசாங்கம் கேட்டு வாங்கக் கூடாது" என்று ஒரு பத்திரிகை கேட்டுள்ளதே!, அது என்ன?

ப: ஓ! அதுவா? அது ஒரு சிதம்பர இரகசியம். 'நாடற்றவர்" பிரச்சினை தீர்ந்தாலும் அது வெளியிடப்படமாட்டாதாம். ஏனெனில் அந்த இரகசியத்தைக் கொண்டுதான் இனித் தலைமையைக் காக்க வேண்டியிருக்கிறது.

ஃ

முகம்மது மகுரூக்,
பண்டாரவெளி

கே: மன்னார் பகுதிக்குச் சுகாதார மந்திரியார் ஏன் விஜயம் செய்தார்?

ப: அடுத்த தேர்தல் நெருங்குவதால் நோட்டம் பார்க்கவாம்.

ஃ

தமிழரசு மைந்தன்,
மஸ்கெலியா

கே: இ. தொ. கா. மாநாட்டுக்குச் சென்று திரும்பிய சில தமிழர்கள் சில சிங்களக்காடையரின் வெறிக்குப் பலியாகினராமே!

ப: எல்லாம் கோணரின் வாலாட்டம்தான். வாலை ஒட்ட நறுக்க அநேகர் அடுத்த தேர்தலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

ஃ

தமிழன், இளவாலை.

கே: அரசாங்க 'அம்புலன்ஸ்' காரில் 'சௌவுக்கிய சேவை' என்று எழுதி இருப்பது சரியான தமிழ்ச் சொல்லா?

ப: பிழை—'சௌக்கிய சேவை' என்ற இரு சொற்களும் வடமொழிச் சொற்களே. "சௌவுக்கிய" என்பது தமிழ் சொல்லுமல்ல—வடமொழிச் சொல்லுமல்ல, அது "சிங்களத் தமிழ்" சொல்.

கே: இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பு இரவு ஒன்பது மணிக்குப் பிறகு தெளிவாய்க் கேட்பதில்லை. காரணம் என்ன?

ப: காரணம் வானொலி மந்திரியும் உதவி மந்திரியும் இரவு 9 மணிக்கு மேல் நித்திரைக்குச் சென்றுவிடுவதுதான்.

ஃ

வி. கருப்பையா, பட்டியகாமம்

கே: எழுத்தாளர் சிலர் மற்ற எழுத்தாளர்களைத் தாக்கித் தாங்கள் பெரிய எழுத்தாளர்கள் என்று பறை சாற்றுகிறார்களே?

ப: அவர்களில் இரு சாரார்களுண்டு. பிறரைத் தூற்றுவதின் மூலம் பெரிய எழுத்தாளர்களாகப் பெயரெடுக்கலாம் என்று எண்ணுபவர்கள் ஒருசாரார்; பிறரைப் போற்றுவதின் மூலம் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்கிறவர்கள் மற்றொருசாரார்.

ஃ

சுதந்திரவீரன்,
ஏழாலை மேற்கு.

கே: சிறு கோஷ்டியை ஆதரிக்கும் சன்னுக்கும் குமாரசிறிக்கும் பிளவு இருப்பதாக அறிகிறேன், உண்மையா?

ப: அக் கட்சிக்குள் தமிழ்-சிங்களப் பிளவாம். சன் தமிழராக இருந்து செயலாளராயிருப்பது சிங்களவரின் கண்களை உறுத்துகிறதாம். அவருக்கு எதிராக பீகிங் தெய்வங்களிடமும் புகார் செய்யப்பட்டதாம். இது பற்றிய செய்தியொன்றினை சுதந்திரன் 5-4-64-ல் வெளியிட்டு இருந்தது.

கே: பத்திரிகைகளில் வரும் அரசியல் செய்திகள் எல்லாம் பொய்யானவை என்று அரசியல்வாதிகள் கூறுகிறார்களே, அப்படியானால் நாம் விஷயம் அறிய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

ப: வடிகட்ட வேண்டும். இல்லையேல், வெளிவரும் செய்திகளின் நேர் எதிரான விஷயங்களை உண்மைச் செய்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஃ

எம். ராமசாமி, தெல்தொட

கே: நிதி மந்திரியின் மாவரிக்கு ஏராளமான பிக்குகளும் பல ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. களும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே, முடிவு என்ன ஆகும்?

ப: இரு மாதக் குழந்தையான மரவரிக்குக் குழி தோண்டி வைத்துள்ளனர். அதைப் புதைப்பதற்குக் குழந்தையைப் பெற்ற தந்தை ஜப்பானிலிருந்து வரும்வரை காத்திருக்கின்றனர். குறைமாதக் குழந்தை உயிர் பிழைக்காது என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

ஃ

'சுதந்திர ரசிகன்', மூதூர்

கே: மூதூர் முத்தமிழ் விழாவில் உலகத் தமிழர் மகாசபைத் தலைவருக்கு இடமளிக்காதது ஏன்?

ப: இது வேண்டுமென்றே செய்யப்பட்டதென்றும், விழாக்குழுவினரின் போக்கு பலருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதென்றும், மற்றும் சில ஒழுங்கீனங்கள் பற்றியும் பேச்சு அடிபடுகிறது. இவ்விழாவுக்கு உலகத் தமிழ் மன்றத் தலைவர் விஜயம் செய்யாதது ஒருவகையில் நன்மையே.

ஃ

குமாரச் செல்வன்,
ஏழாலை மேற்கு,

கே: உலகவங்கி, அம்மையார் திருக் கூட்டத்திற்குக் கடன் கொடுக்க மறுத்துவிட்டதாமே!

ப: பிச்சை எடுக்கச் சென்றால் ஏச்சுப் பேச்சு மட்டுமின்றி அடி, உதைகளையும் வாங்கித்தான் ஆகவேண்டும். உதைபட்ட பிறகும் தன் மானத்துடன் நிமிர்ந்து நிற்காமல் காலில் விழுந்து மீண்டும் மீண்டும் கெஞ்சினால் தான் ஓரளவாவது பலன் கிடைக்குமாம். பாவம்! அதைத்தான் இலங்கை நிதி மந்திரியும் செய்ய வேண்டியதாயிற்றும்.

ஃ

தங்கவேல், பனுவத்தை

கே: என்னுடைய தாய் மாமன் என்னைப்பற்றிச் சிந்திப்பதில்லை, நினைப்பதுமில்லை. இப்போது நான் வேறிடத்தில் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். மாமனார் தடை செய்வாரா?

ப: நிச்சயம் மாட்டார். உங்களைப் பற்றியே சிந்திக்காதவருக்குத் தடைசெய்ய வேண்டிய அவசியமில்லை. உங்களைக் கைகழுவிவிட்டதால்தான் உங்களைப்பற்றி அவர் நினைப்பதில்லை. ஆனால் மாமன் மகள் எப்படியோ?

லூட்டி, அவுஸ்கோன், ஏருவூர்.

கே: "சோஷலிசம்"என்பது பற்றித் தெளிவான கருத்து எதுவும் கொண்டிராத போதிலும், ஓயாமல் சோஷலிசம் சோஷலிசம் என்று சொல்லிக்கொண்டேயிருக்கும் சில அரசியல்வாதிகளைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

ப: அவர்கள் சோஷலிஸத் தொற்று நோய்க்குப் பலியானவர்கள். ஜனநாயக சோஷலிஸம், விஞ்ஞான சோஷலிஸம் ஒருபுறமிருக்க இலங்கையில் கசிப்பு வகைகளைப் போல சோஷலிஸங்களும் பல தினுசுகள் உண்டு. தொம்பே சோஷலிஸம், ஹேவாஹட்ட சோஷலிஸம் முதலியவை.கசிப்புத் தொல்லையைப் போன்றதே சோஷலிஸத் தொல்லையும்.

## உறுதி கொள்வோம்

—நாவலூர்க்கேசரி—

அச்சமதை அகற்றிடுவோம் அகிலமெல்லாம்
அணையாத தமிழொளியைப் பரப்பிநிற்போம்
துச்சமென மதித்திடுவோம் துவசம்செய்வோம்
துன்பமெனும் பெருந்நோயை இன்றேநாங்கள்
இச்சகத்தில் இன்பமுடன் வாழ்வோம்நல்ல
இதற்கென்றே பலதிட்டம் வகுத்துநிற்போம்
பிச்சைதனை எடுத்திங்கே உண்ணமாட்டோம்
பிறர்க்கடிமையாக இனி வாழமாட்டோம்.

கன்னல்தரும் தேன்சாறு கசக்குமிங்கே
கலைகள்தரும் தமிழ்ச்சாறு என்னும்பாகால்
செந்நெலொடு தேன்கலந்தாற் போலேஇன்பம்
சேர்த்துவிடும் அதைச்சுவைத்து வாழ்வோம் நாங்கள்
மின்னலொடு முகில்கலந்தாற் போலேஎங்கள்
மேன்மையுறுதமிழ்மொழியில்இன்பந்தேங்கும்
இன்னல்தனை அகற்றிவிடும் இணையில்லாத
இகலோகந் தனில்காணு இன்பம்நல்கும்.

நாட்டினிலே பலகலைகள் சமைப்போம்நாங்கள்
நல்லதமிழ் பயின்றிடுவோம். கலைகள்தேங்கும்
பாட்டினிலே சுவையறிந்து வாழ்வோம். தமிழ்ப்
பாவலரைக் கரங்குவித்து வணங்கிநிற்போம்
வீட்டினிலே அடைபட்டுக் கிடந்துவாழ்வை
வீணாக்கிக் கொள்ளாமல் இன்றேவாரீர்
நாட்டமுடன் எழுந்திடுவோம் நாட்டைக்காக்க
நல்லதொரு சமயமென் றுறுதிகொள்வோம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டி யனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனிக்கப்படும்.

விரைவில்
எதிர்பாருங்கள்

நிலத்தில் 3,000 மைல்களும்,
நீரில் 2,000 மைல்களும்,
வானத்தில் 10,000 மைல்களும்
பயணம் செய்து

மலேயா, பர்மா,
சிங்கப்பூர், தாய்லாந்து,
பிசித் தீவுகள்,
இந்தியா

உட்பட தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்தும் சென்று, அந் நாடுகளில் வாழும் தமிழர் நிலையினை நேரில் கண்டு சேகரித்த விபரங்களை விளக்கும் பிரயாணக் கட்டுரை

"தமிழ் தந்த பயணம்"

உலகத் தமிழ் மன்றத் தலைவர்
பேராசிரியர்
கா. பொ. இரத்தினம்
எழுதுகிறார்.

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

"உங்களுடைய வேப்பர் கிறீம் அளிக்கும் நிவாரணம் காரணமாக, தடிமனால் பீடிக்கப்பட்ட போதும் எனது மகனால் இரவில் அமைதியாக நித்திரை கொள்ள முடிகிறது."

—திருமதி ஐ. டி. எஸ்.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டு வாங்குங்கள்.

எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுத் தலைவருக்கு பிரதமர் அழைப்பு

## மலையகத் தமிழர் பிரச்சினை பற்றி விவாதிப்பர்

நாடற்றவர்கள் எனக் கூறப்படும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றித் தன்னைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துமாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களைப் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கேட்டுக்கொண்டுள்ளார் என்று அறியப்படுகிறது.

தமிழரசுக் கட்சித் தலைவருக்குப் பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில் அடுத்த செவ்வாய்க்கிழமை (22-9-64) பகல் 12 மணிக்கு இப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்குத் தன்னைச் சந்திக்குமாறு தெரிவித்துள்ளாராம்.

இந்திய வெளி விவகார மந்திரி திரு. ஸ்வரன்சிங்குடன் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினை குறித்துப் பிரதம மந்திரி பூர்வாங்கப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அடுத்த மாதம் பிரதமர் புதுடில்லியில் இந்தியப் பிரதம மந்திரியைச் சந்தித்து இது பற்றி இறுதிப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறாராம்.

இதற்கு முன்பு இப்பிரச்சினை பற்றித் தமிழரசுக்கட்சி கொண்டுள்ள கருத்தைத் தெரிந்து கொள்வதோடு, அது பற்றி திரு. செல்வநாயகம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவுமே பிரதமர் அவரை அழைத்துள்ளார் என்று அறியப்படுகிறது.

## இரத்தினபுரியில் பாரதி விழா

இரத்தினபுரி செப். 16.

இரத்தினபுரி வள்ளுவர் மன்றத்தின் சார்பில் நகர மண்டபத்தில் 19-ந் திகதி மாலை 4-30 மணி முதல் பாரதியார் விழா நடைபெறுகிறது. மலை நாட்டு எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவர் திரு. ஜே. அந்தனி தலைமை தாங்குகிறார்.

## முதல் தியாகத்தை ஏற்பதில் பெருமைப்படுகிறேன்

### எழுது வினைஞர் மாநாட்டில் கோடீசுவரன் முழக்கம்

'தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் எதிர்காலம் பிரச்சினை நிறைந்ததாகவே உள்ளது. எத்தனையோ இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் எதிர் நோக்க வேண்டிய சோதனை மிகுந்த காலம் நம் முன்னேயுள்ளது. நமது உறுப்பினர்கள் எத்தகைய தியாகத்திற்கும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். உரிமைகளைப் போராடித் தான் பெற வேண்டுமென்றால் அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். எமது உரிமைப் போராட்டத்தில் முதல் தியாகத்தை ஏற்றுக் கொள்ள நான் என்றும் தயாராக உள்ளேன்- அதில் பெருமையும் அடைகிறேன்.' இவ்வாறு அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் நடப்பு வருடத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. செ. கோடீசுவரன் பி. ஏ. தமது தலைமையுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த 12-ம் திகதி சனிக்கிழமை ஸ்லேவ் ஐலன்ட் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் ஆண்டு அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் சங்கத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான திரு. மு. தம்பிமுத்து அவர்கள் பேசுகையில் 'சங்க உறுப்பினர்களில் சிலருக்கு அரசியல் மோகம் இருப்பதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பதை' வன்மையாகக் கண்டித்தார். சங்கத்தில் கருத்து வேறுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லாது இருக்கையில், சங்க உறுப்பினர் மத்தியில் பலத்த மோதுதல் ஏற்பட்டிருப்பதாக வதந்தி கிளப்பி பொய்ச் செய்திகளை வெளியிட்ட தினசரிப் பத்திரிகைகளையும், வாரப் பத்திரிகைகளையும் கண்டித்ததுடன் அத்தகைய வதந்திகள் உருவாவதற்குத் துணை நின்றவர்களையும் கண்டித்தார்.

நல்லதோர் இலட்சியத்திற்காகச்சங்கம் உருவாக்கப்பட்டதென்றும் அந்த இலட்சிய ஈடேற்றத்திற்கு ஒவ்வொரு உறுப்பினரும் அயராது உழைக்க வேண்டுமென்றும், கடந்த ஆண்டு சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றிய திரு. இ. பாலசுப்பிரமணியத்தின் சேவையைப் பாராட்டியும் பேசினார். ஆண்டு அறிக்கையை ஆதரித்து வேறு சில உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்த பின்னர், அறிக்கை ஒரு மனதாகச் சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

#### நமது பிரச்சினை

திரு. கோடீசுவரன் தனது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:

'எனக்கு அரசியல் மோகம் இருப்பதாகச் சிலர் வதந்திகளைக் கிளப்பி விட்டுள்ளார்கள். அப்படி எத்தகைய அரசியல் ஆசையும் எனக்கு இல்லையென்பதைப் பகிரங்கமாகக் கூறிக் கொள்கிறேன். அந்த வதந்தியைப் பொய்ப்பித்து சந்தேகத்தை நீக்குவதாயின் நான் பொது வாழ்விலிருந்து நீங்க வேண்டும். தமிழ் பேசும் அரசாங்க ஊழியரின் இன்றைய அவல நிலையில் நான் பொது வாழ்விலிருந்து நீங்குவதா?

தமிழ் பேசும் மக்கள் மீது திட்டமிட்டு நடாத்திவரும் இனவொழிப்பு நடவடிக்கைக்கு தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களே தடையாக இருக்கின்றனர். எனவேதான் மொழி வழித் தொழிற்சங்கங்களைத் தடை செய்ய வேண்டுமென்ற கருத்து உதயமாகியிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.



திரு. செ. கோடீசுவரன்

நமது நிலை தொடர்ந்து பிரச்சினைகளை எதிர் நோக்குவதாகவே உள்ளது. நமது பிரச்சினை சம்பளப் பிரச்சினையல்ல, இனப் பிரச்சினையேயாகும். இதை எந்த நேரத்திலும் நாம் மறந்து விடக் கூடாது. நாம் இவற்றை அணுகும் முறையே தவறானதாகும்.

தமிழ் பேசும் மக்கள் அடிமைகள் அல்லர். நாம் என்றுமே யாருக்கும் அடிமையாக இருக்கப் போவதுமில்லை. தமிழ் பேசும் மக்கள் மத்தியில், தமிழ் பேசும் அரச ஊழியருக்கு தனியிடமுண்டு. நமது உரிமைப் போராட்டத்திற்கு அவர்களின் ஆதரவு என்றும் அத்தியாவசியமாவது.'

திரு. ஆ. இராசரத்தினம் பேசுகையில் நம்மத்தியில் சிறுமையுணர்ச்சிக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றும் தமிழ் பேசும் மக்கள் என்ற பரந்த அடிப்படையில் செயல்பட வேண்டுமென்றும் கூறினார்.

#### எதையும் தாங்கும் இதயம்


திரு. வே. தங்கவேல் பேசுகையில், பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி பாராட்டிவிட்டு, எத்தகைய இன்னல்களையும் தாங்கும் சக்தியை உறுப்பினர்கள் பெற வேண்டுமென்று கூறினார்.

எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும் எப்பகுதியிலிருந்தும் தாராளமாகவும் ஏராளமாகவும் தான் வரவேற்பதாகவும், அவற்றைத் தாங்கும் ஆற்றலும், தியாக உள்ளமும் தனக்கு உண்டு என்றும் பலத்த கரகோஷத்தின் மத்தியில் கூறினார்.

திருவாளர்கள் இ. பாலசுப்பிரமணியம், இ. இராமநாதன் உட்பட பல உறுப்பினர்கள் தீர்மானங்கள் மீது கருத்துத் தெரிவித்து உரை நிகழ்த்தினார்கள்.

பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(9-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அரசு அளித்த சிறையை சிரித்த முகத்துடன் ஏற்றார்

## தியாகியாக வாழ்ந்து அமரரான அண்ணல் வன்னியசிங்கம்

அமுதத் தமிழர் நாட்டிலே பேச்செல்லாம் தமிழ் ஒலிக்க மூச்செல்லாம் தமிழ் மணக்க செயலெல்லாம் தியாகம் என்றே வாழ்ந்து அமரத்துவம் எய்திய கோப்பாய் தந்த பெருந்தகை இன்று நம்மை விட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகளாகி விட்டன. ஆனால் நினைவு பசுமையாகமேலும் மேலும் அவரை நினைத்து உருகவைக்கின்றது. நமக்குள்ளே இருக்கும் கோடரிக் காம்புகளின் செயலினால், மேலும் மேலும் நாம் நசுக்கப்படுகின்றோம். இந்த நேரத்திலே தலைவர்கள் பலர் நமக்குள்ளே பிளவை யுண்டாக்கி வேடிக்கை பார்க்கின்றனர். இந்தநேரத்திலே தான் கோப்பாய் கோமான் இல்லையே என்ற எண்ணம் நெஞ்சைப் பிளக்கின்றது.

### கட்சியின் உதயம்

தமிழரசுக் கட்சி பிறந்த கதையே ஒரு பெரிய கதை. மலைநாட்டுத் தமிழ்மக்களின் உரிமையை அபகரிக்கபெரிய சேனநாயகா 'காங்கிரஸ் பெரியார்' பொன்னம்பலத்தையும் அழைத்தார். அந்த அழைப்பைஏற்றுக்கொண்டு தமிழர் பலம் குறைக்க உடன்பட்ட காங்கிரசை விட்டு, தமிழர் தம் உரிமை காக்க விரைந்தனர் தந்தை செல்வாவும் தலைவர் வன்னியரும். முடிவு, தமிழரசுக் கட்சி உதயமானது.

1952ம் ஆண்டுத் தேர்தலிலே கோப்பாய் மக்களும், திருமலை மக்களும் தமிழரசின் தத்துவத்தை முதன் முதலில் உலகறியச் செய்தனர். ஆம்! வன்னியசிங்கமும், இராசவரோதயமும் வடக்கிலும், கிழக்கிலும் இரு கற்றூண்களாக பாராளுமன்றத்திற்குக் — கன்னித் தமிழ் காவலர்களாகச்சென்றார்கள். இன்று அந்தமானம் காத்த மாவீரர்களிருவருமே நம்மிடையே இல்லை.

### தமிழகத்தின் திருவிளக்கு

உரிமை பெறுமுன் உழைப்பின் களைப்பினால் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள் இருவருமே. பாரதி 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்' என்றார்; அதுபோல் ஈழத்துப் பாரதி ஒருவன் இருந்தால் 'யாமறிந்த தலைவரிலே வன்னியர்போல் வரோதையர் போல் கந்தையாபோல் ஏகாம்பரம்போல்இல்லையே' என்று இவர்களை யெல்லாம் சேர்த்துப் பாடியிருப்பான்.

வன்னியனாரைப்பற்றிக் கூறுவதானால் 'தமிழகத்தின் திருவிளக்கு' என்றுதான் கூற வேண்டும். குணத்திலே குன்று, ஒழுக்க சீலன், மான வீரன், கொண்ட கொள்கையினின்றும் நிறை திறம்பாப் பெருவீரன். குற்றங் குற்றமே யென்று வாதாடும் நக்கீரன் பரம்பரை இவை



திருவாட்டி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

யனைத்தையும்ஒன்றுசேர்த்து உருவாக்கிப் பார்த்தால், வன்னியனாரை அதிற் காணலாம். வள்ளுவர் கூறியபடி பகுத்துண்டு பல்லுயிரோம்பி வாழ்ந்த பெருந்தகை, பாரதி கூறியபடி சாதிக் கொடுமைக்குச் சாட்டையடி கொடுத்த வீரர். தெய்வீக ஒளிவீசும் திருவுருவம்.

### கரும வீரன்

தமிழரசுக் கட்சி எடுத்த இயக்கங்களிலெல்லாம் தந்தை செல்வாவின் கட்டளையை நிறைவேற்றும்மூத்த புதல்வனாகக் கோப்பாய் தந்த கோமான் இருந்தார். எத்தனையோ இயக்கங்களை இரவுபகல் பாராது திட்டம் தீட்டி நிறைவேற்றிய பெருமை தந்தையின் மூத்த மைந்தனுக்கே சாரும்.

'மெய்வருத்தம் பாரார்
பசிநோக்கார் கண்துஞ்சார்
கருமமே கண்ணாயினார்'' என்ற பாடலுக்கு ஒரு நாயகனாகவிளங்கியவித்தகன் இவனே.

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து காலிமுகக் கடற்கரையிலே சத்தியாக்கிரகம் நடந்துகொண்டிருந்த நேரத்தில் கடுமையாகத் தாக்கப்பட்டவர்களில் அமரர் வன்னியசிங்கமும் ஒருவர். ஆனால் எதையும் ஒரு விகடமாக்கி எந்தத் துன்பத்தையும் சிரிப்போடு சேர்த்துத்தரும் பாணியை யாரிடத்திலும் காணமுடியாது. எவ்வளவு பணியையும் பெரும் பாரமாகக் கருதாமல் மற்றவர்களுக்கும் அலுப்புத் தட்டாமற் பார்ப்பதிலே ஒரு தனித் தன்மை இருந்தது அவரிடத்திலே.

பல இடங்களுக்கு அவரோடு செல்லும் வாய்ப்பு எனக்கும்கிடைத்தது. கார்ப் பிரயாணமாக இருந்தால் கார் நிறைய திருவாசகத் தேன் சொட்டும். விகடத் துணுக்குகள்விழுந்துகொண்டிருக்கும். இவையெல்லாம் இன்று கிடைக்கவில்லையே.

### சிறை வாழ்வு

ஆனி 5ம் திகதியில் காலிமுகக் கடற்கரை மைதானத்திலே காடையர்களால் நோயுற்ற அவர் உடல் தாக்கப்பட்டது. ஆத்ம பலம் உடற்பலத்தை வென்றது. அது மட்டுமா, பண்டாரநாயகா கொடுத்த தடுப்புக் காவற் கைதிஎன்ற விலங்கை அன்னை தமிழின் விலங்கொடிக்க மகிழ்வோடு ஏற்றுக் கொண்டார். நான்கு மாதங்கள் இதனுள் அவர் நோயால் பிடிக்கப்பட்டு வருந்தினார். உடற் பலத்தை அங்கே கொடுத்து விட்டு உளத்தின் பலத்தோடு வெளியே வந்தார். 'சிறி' போராட்டம் திரும்பவும் அவரை அழைத்தது. மறியலுக்குச் சென்று யாழ்ப்பாணக் கோட்டையையே தன் தூய உள்ளத்தின் புனிதத்தால் தூய்மைப் படுத்தினார். வாத நோய் கொண்ட பாதங்கள் திருமலை நோக்கி வீறுநடை போட்டன. களைக்காமல் சலைக்காமல் அன்னை தமிழை அரியணை ஏற்ற அரும்பாடுபட்டு உழைத்தார் அண்ணலவர்கள்.

### அரசியலில் மாதர்

தமிழரசுக் கட்சியின் மாதர் முன்னணியை அமைப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் அமரர் வன்னியசிங்கமவர்கள். 'அன்னமூட்டிய தெய்வ மணிக் கைகள் ஆணை காட்டினலை விழுங்குவோம்' என்ற பாரதி கூற்றுக்கமைய பெண்களை அரசியலில் பங்கு கொள்ளச் செய்த பெருமை அவருக்கே உரியது. இதற்குக் காரணம் திருமதி வன்னியசிங்கம் என்றால் யாவருமே ஒப்புக் கொள்ளுவர். பல அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். ஆனால் பூரணமாகச் சேவை செய்ய அவர்களால் முடிவதில்லை. காரணம், அவர்களுடைய இல்லத்தரசிகள் சுயநலமற்ற சேவை செய்ய அவர்களை விடாது தடைபோட்டு விடுவார்கள்.

ஆனால் கோமதியவர்களோ......

''காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கை கொடுத்து'' அரசியல் வாழ்விலே அமரர் வன்னியசிங்கத்தின் அருகிலிருந்து பணி புரிந்த உத்தமி வீட்டுப்பணியை மட்டுமன்றி நாட்டுப் பணியையும் ஊக்கத் தோடாற்றிய பெருமை கோமதியவர்களையே சாரும். கணவருக்கு அரசியல் வாழ்வில் வலது கரமாக விளங்கினார். இன்று அவர்களில்லாத மாதர் முன்னணியை ஊக்குவித்து திறம்பட செயல் புரியவைக்க எம் மத்தியிலேயுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவில்லையே என்று குறை கூற வேண்டித்தானிருக்கிறது. அமரர் வன்னியரை மட்டுமல்ல, அரசியலில் ஆர்வத்தோடு பங்குகொண்டெம்மை யெல்லாம் முதலிடம் பெற வைத்த திருமதி வன்னியசிங்கத்தையும் கூட நம் மத்தியிலே உலாவி வரச் செய்ய எம்மால் முடியவில்லையே.

### தியாகி அமரரானார்

அவரைப்பற்றி எழுத வேண்டுமானால் நிறைய எழுதிக்கொண்டே போகலாம். ஒரு சிறிய கட்டுரையில் எல்லாவற்றையும் எழுதிவிட முடியுமா? தனக்கென வாழாத பிறர்க்குரியாளன். அவர் தனக்காக வாழ்ந்திருந்தால் உண்மையில் அவர் தம் அருமைத் துணைவியும், அவர் முகம் காணாது ஏங்கும் அவர்தம் அருமைக் குழந்தைகளும் இன்று வழிகாட்டியின்றித் தவிக்க மாட்டார்கள்.

தமிழ் மொழியின் தவப்பேறாக வாழ்ந்தார். தமிழ் இனத்தின் விடுதலை விரும்பியாக வாழ்ந்தார். அதே கடின உழைப்பு, விடா முயற்சி, அவரைக் கூடிய கெதியில் நோய்வாய்படுத்தியது. தியாகி அமரரானார். அவர் வழி செல்ல இன்னும் பல தியாகிகள் முன்வர வேண்டும்.

நாமக்கல் கவிஞர் கூறியதைப் போல—

''தமிழருக்குக் கருணை
எண்ணம் தாயின் பாலில்
தந்தது
குமிழை யொத்த உயிரை
நல்ல கொள்கைக் கிய
முந்திடும்
அமுதமொத்த காந்தி மார்க்கம்
தமிழகத்தின் செல்வமாம்
நமது சேவை அதனை ஏந்தி
நாட்டிலெங்கும்
சொல்வதாம்''

## 'நீதியை நிலைநாட்ட நீதிமன்றம் செல்வோம்'

—— | ஃ | ——

## தமிழாசிரியர் அறை கூவல்

சிங்களத் தேர்ச்சி பெறாத, தமிழ்மொழி மூலம் கல்வி போதிக்கும் அதிபர்கள், உப அதிபர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியைகளுக்கு சம்பளப்படி நிறுத்தப்படும் என்ற 21-9 63ம் தேதி திறைசேரி வெளியிட்டுள்ள 618ம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய, 1964ம் ஆண்டு கல்விஇலாகா வெளியிட்டிருக்கும் 10ம் இலக்க சுற்று நிருபத்தினை 15-12-64க்கு முன் திரும்பப்பெறுவிட்டால் அ இ த ஆ சங்கம் நீதிமன்றத்தில் இப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடவேண்டும்.

5-9-64ல் நடைபெற்ற கிழக்கிலங்கை தமிழ் ஆசிரிய சங்க வருடாந்த மாநாட்டின் மூலம் அ. இ. தமிழாசிரியர் சங்க வருடாந்தமாநாட்டின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படுவதற்காக மட்டக்களப்பு தமிழாசிரிய சங்கப் பிரமுகர் திரு. டொ. சை. க. வணசிங்க மேற்கண்ட பிரேரணையை அனுப்பிவைத்தார். அப் பிரேரணை மேலும் கூறுவதாவது:

மேற்குறிப்பிடப்பட்ட சுற்று நிருபம் தமிழ்மொழி மூலம் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் அடிப்படை உரிமையையும் தன்மானத்தையும் பறிப்பதாகும். இச் சுற்றுநிருபத்தை கல்வி இலாகா திரும்பிப்பெற மறுப்பின், சட்டமன்றத்தில் தீர்வு காணுவதன்றி வேறு வழியில்லை.

திரு. வணசிங்கா அனுப்பியிருக்கும் மற்றுமொரு பிரேரணை வருமாறு:-

தமிழாசிரியர்களின் நலன் கருதி, இலங்கையிலுள்ள தமிழாசிரியர்கள் சகலரும் விரைவில் ஒரு சங்கத்தின் கீழ் இயங்கவேண்டுமென இச்சபை கருதுகிறது. இந்த இலட்சியத்தை அடைவதற்காக இலங்கையிலுள்ளபதிவு செய்யப்பட்ட தமிழாசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதொரு கூட்டுச் சபை ஒன்றினை வெகுவிரைவில் அமைத்து ஒரு சங்கமாவதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென இச் சங்கம் அ. இ. த. ஆ. சங்க வருடாந்த மாநாட்டின் மூலம் கோருகிறது.


உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும் மந்திர சக்தியினாலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.



வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்!

எம். ஏ. ஆர். எல். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்கம் வளர்த்தாலும் மொழிப்பற்றை மறவாத திரு. வி. க.

“மேனாட்டினர் மேல் நாட்டினராய் வருமுன்—அவர்கள் மரங்களிற் சுழன்று குரங்கு வாழ்க்கை நடாத்தியபோது நாம் நாடு கண்டு, அரசியல் உணர்ந்து அறிவொளி பெற்று செங்கோலோச்சினோம். வாழ்வுக்குரிய எல்லாத் துறைகளிலும் முன்னேறியுள்ளோம்” என்று பகிரங்க மேடையில் அஞ்சா நெஞ்சங் கொண்டு பேசும் துணிவு திரு. வி. க. வை விட வேறு யாருக்கு இருக்கும்? சொல்லும் செயலும் ஒரு நீர்மைத்தாய் இருப்பதை அவர் வாழ்க்கை முழுவதும் காணலாம். எனவேதான் வாலிபத் தோழர்களை “வித்தகம் பேசவேண்டாம், பணி செய்ய வாரீர்!” என அறை கூவி அழைத்தார்.

திருவாரூரைச் சேர்ந்த விருத்தாசலனாரின் ஆறுவது திருமகனாக 26-8-1883ல் கல்யாண சுந்தரனார் தோன்றினார். அக்கால நாகரிகத்திற்கேற்ப இவர் தமிழை வெறுத்தார். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திரு. நா. கதிரவேற்பிள்ளையிடம் பாடம் கேட்டதும் தமிழ்மீது பற்று வளர்ந்தது. “வேம்பெனக் கைத்த தமிழ்மொழி கரும்பென இனித்தது” என இவரே “வாழ்க்கைக் குறிப்புகள்” என்ற சுயசரிதையிற் குறிப்பிடுகின்றார். தமிழகம் தந்த பெருமகனை—தோழர்கள் நேசனை புடம் போட்ட தமிழ்த் தொண்டனாக மாற்றிய பெருமை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தது என்று எண்ணும்போது இறும்பூதெய்துகிறோம். ஆனால்இதே யாழ்ப்பாணத்தில் இன்று சில மொழிப்பற்று இல்லாத தோழர்கள் இருப்பதைக் கண்டு வெட்கப்படுகிறோம்; வேதனைப்படுகிறோம்.

## பதவிகள் துறப்பு

இவர் முதலில் வேலை பார்த்த இடம் ஸ்பென்சர் கம்பனியாகும். பின்னர் தான் பயின்ற வெஸ்லிக் கல்லூரியிலே தலைமைத் தமிழாசிரியரானார். நாட்டிலே தேசபக்தி கொழுந்துவிட்டெரிந்த காலம். இவர் உள்ளத்திலே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் விறிட்டுப் பாய்ந்தன. பதவியைத் துறந்தார். துடைத்தெறிய வேண்டும் இந்த அடிமை வாழ்வை என்ற ஒரே இலட்சியத்தோடு தேசத் தொண்டில் ஈடுபட்டார்.

## செந்தமிழ்ப் பேச்சு

அரசியல் என்றால் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும்—அது ‘டமிழிலே’ பேச வராது என்ற பாசி பிடித்துப் போயிருந்த காலமது. இக்கொள்கையைத் தகர்த்தெறிந்தார். தமிழ் மூலம் அரசியலைப் புரிந்து கொள்ள முடியும்—புரிந்து கொள்ள வேண்டும்—என எண்ணியவர் திரு. வி. க. மேடைப் பேச்சிலே புதுமையையும்—புரட்சியையும் ஏற்படுத்தினார். அவர் பேச்சிலே கலையிருப்; செந்தமிழ்த் தென்றல் வீசும்; அரசியல் தெளிவுறும்; காந்தீயம் மணக்கும். “தமிழ்த் தென்றல்” என்ற தலைப்பிலே வெளியான அவரது பேச்சுக்களின் தொகுப்பே ஒரு தனிக் காவியமாகும்.

எழுத்தின் சக்தியை உணர்ந்திருந்தார் திரு. வி. க. 1917ல் “தேசபக்தன்” என்னும் செய்தித் தாளைத் தோற்றுவித்தார். 1920ல் இவர் தொடக்கிய “நவசக்தி” என்ற வார இதழ் தமிழ் நாட்டிலே இருபது வருடங்களுக்கு மேலாக அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டியது; கலை வளர்த்தது; தேமதுரத் தமிழோசையை எங்கும் பரப்பியது.

## எழுதிய நூல்கள்

இவர் எழுதிய தமிழ் நூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அறிவுப் பெட்டகம்.

**மு. சிவானந்தன்**
**எம். ஏ.**

“பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை” என்ற நூலில் பெண்களை உயிர் கொடுத்த தெய்வமென்று—உலகமாதாவின் அவதாரங்கள் என்று வியந்து போற்றியுள்ளார். “காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்” என்ற நூலில் காந்தியத்தைத் தமிழில் வடித்துத் தந்துள்ளார்.



“முருகன் அல்லது அழகு” என்னும் நூலால் தமிழர் தெய்வம் முருகனே என நிறுவியுள்ளார், சமரச சன்மார்க்கத்தைப் பற்றியும் புராணங்களின் சிறப்புப் பற்றியும் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

## தொழிற் சங்கத் தொண்டு

தொழிலாளர் மடிகிறார்கள்—முதலாளிகள் கொழுக்கிறார்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் தற்காலத் தோழர்கள் போல வாழவில்லை. எளிய வாழ்க்கை; இடாம்பீகம் இம்மியளவும் இருக்கவில்லை. தனக்கெனப் பொருள் பண்டம் சேர்க்கவில்லை. பிரிட்டிஷ் சிங்கம் பிடரிமயிர் சிலுப்பி ஆட்சி செய்த காலத்திலே, வெற்றிகரமாக வேலை நிறுத்தங்களை நடத்தியவர். 1918ல் இந்தியாவின் முதற் தொழிற் சங்கமான சென்னைத் தொழிற் சங்கத்தை நிறுவிய பெருந்தலைவர்களில் இவரும் ஒருவர். இன்று சமத்துவம் பேசும் தோழர்கள் பலருக்கு மொழிப் பற்றில்லை; மொழிச் சமத்துவம் பேச நேரமில்லை. ஆனால் முதற் தொழிற் சங்கம் நிறுவி, வேலை நிறுத்தங்கள் பலவற்றை முன்னின்று நடாத்திய திரு. வி. க. வோ தமிழின் பெருமையுணர்ந்து அதைப் போற்றத் தவறவில்லை.

## வாழ்க்கை இறுதியில்

இத்தகைய பெருமை வாய்ந்த தேசத் தொண்டரை—தமிழ் முனிவரை—சென்னையிலே பேசவைக்கவும், பேச்சைக் கேட்கவும் எனக்கோர் வாய்ப்பு ஏற்பட்டது. 1953ல் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்ப் பேரவைச் செயலாளர்களில் ஒருவனாகப் பணி புரிந்து கொண்டிருந்தேன். அப்பேரவையிலே தோழர் ப. ஜீவானந்தத்தின் சொற்பொழிவுக்குத் தலைமை தாங்க வந்திருந்தார் திரு. வி. க.

## இறுதிச் சொற்பொழிவு

அவரைக் கண்டபோது என் உள்ளம் கலங்கியது. கூன் விழுந்து, எலும்போடு ஒட்டிய உடலோடு, கண்கள் இரண்டிலும் ஒளி மங்கிக் காணப்பட்டார். அவரால் நடக்க முடியவில்லை; இருந்தபடியே பேசினார். அந்தச் சிறிய உருவத்திலிருந்து செந்தமிழ் ஆறு பெருக்கெடுத்தோடியது. அவரது உடல் நலமின்மையைக் கண்டு கலங்கி, தெள்ளு தமிழைக் கேட்டு மயங்கியிருந்த என்னால் அன்று தெளிவாக நன்றியுரை கூற முடியவில்லை. அவரது மூச்சு நிற்பதற்கு முன் நிகழ்த்திய பேச்சு அதுதான் என்று எப்படி எனக்குத் தெரியும்? ஒரு சில நாட்களுக்குப் பின் அவர் மறைந்த செய்தி கேட்டுத் தமிழகம் கலங்கிய போது, தாம்பரத்தில் அவரது பேச்சுக் கேட்ட மாணவர்கள் அத்தனை பேரும் அதிர்ச்சியடைந்தார்கள்.

## நன்றியில்லாத தமிழ்ச் சாதி

வந்தாரை வாழவைக்கும் தமிழினம், தன் தலைவர்களை மதித்து, அவர்களின் வாழ்க்கைக்கு வசதிகள் தேடித் தருவதை மறப்பது சர்வசாதாரண நிகழ்ச்சி. பாரதி இருந்த போது போற்றாத நாம் இன்று தலையில் தூக்கி வைத்துக் காவடி ஆடுகிறோம். தொண்டுகள் பல செய்த திரு. வி. க. வின் இறுதி வாழ்வில் அவர் பட்ட துன்பங்கள் பல. பணி செய்து நலிந்த உடலைப் பிணி மேலும் நலிய வைத்தது; வறுமை வாட்டியது. டாக்டர் மு. வரதராசன் போன்ற ஒரு சில தமிழறிஞர்களைத் தவிர்ந்த ஏனையோர் திரு. வி. க. என்றொருவர் இருக்கின்றார் என்பதனையே மறந்து வாழ்ந்தனர். தவறிவிட்டோம். இனி மேலாவது அவரது புகழ் பாடி நன்றிக் கடன் செலுத்துவோமாக.

---

# திரு. வி. க. வின் தமிழ்ப் பணி

திரு. வி. கலியாணசுந்தரனார் 1883ம் ஆண்டிற் றோன்றி 1953ம் ஆண்டில் மறைந்தவர். அவர் தம் வாழ்வில் ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகள் தமிழுக்குப் பணியாற்றியவர். அன்னாரின் தமிழ்ப்பணியினை நாம் தமிழாசிரியர், செய்தித்தாள் ஆசிரியர், பேச்சாளர், நூலாசிரியர் என நான்கு சீரிய துறைகளிலே காணகிறோம்.

**ச. தனஞ்சயராசசிங்கம்**
**பி. ஏ. (ஆனர்ச), எம். லிட்.**

சுந்தரனார் 1910ம் ஆண்டில் வெசுலியன் உயர்நிலைப் பள்ளியொன்றிற் றமிழாசிரியர் வேலையைபெற்றார். அப் பள்ளி தாழ்ந்த குலத்தைச் சார்ந்தோர்க்கென நடாத்தப்பட்டு வந்தது சுந்தரனார் இழி குலத்தவரென்றும் ஏழையரென்றும் சமுதாயத்தினாற் புறக்கணிக்கப்பட்டவர்க்குத் தாயாகவும் தந்தையாகவும் ஆசிரியனாகவும் விளங்கினார். அவரை மாணவரும் உடன்பயிற்றும் ஆசிரியரும்உயர் கல்வி அதிகாரிகளும் ஒருமுகமாகப் பாராட்டினர். இவ்வாறு ஆறுண்டுகள் கடமையாற்றும் பொழுது அவர் வெசுலிகல்லூரித் தலைமை தமிழாசிரியர் வேலைக்கு விண்ணப்பஞ் செய்து அதனைப் பெற்றார். அக்கல்லூரியில் இயங்கிய தமிழ்ச் சங்கத்தின் தரத்தினை யவர் உயர்த்தினார். தம் மாணவரைத் தமிழ் மொழிப் பற்று, நாட்டுப்பற்று முதலியன கொண்டவராக்க முயன்றார். ஆனால் எவரும் எதிர்பாராதவாறு ஒன்றரை ஆண்டிற்குள் அவர் ஆசிரியர் பதவியினின்று தாமாகவே நீங்கினார். அக்கால அரசியற் கொந்தளிப்பு அவரை நாட்டுப் பணி செய்ய ஊக்கியதே அச் செய்கைக்குக் காரணமெனலாம்.

‘தேசபக்தன்’ என்னும் நாளிதழ் 1917ம் ஆண்டிற் வெளியிடப்பட்டது. அச் செய்தித்தாளுக்கு ஆசிரியராகத் திரு. வி. க. வைப் பொது மக்கள் தெரிந்தனர். சுந்தரனாரின் ஆசிரியக் கட்டுரைகள் ஆட்சியாளரின் தவறான போக்கினைக் கண்டித்தும் மக்களின் குறைகளைச் செவ்வனே முறையிட்டும் பணி செய்தன. பொது மக்கள் விளங்கக் கூடிய எளிய இலக்கிய நடையினைக் கையாண்டு செய்தித்தாளின் சுற்றோட்டத்தினைப் பெருக்கினார். இவரின் ஆசிரியக் கட்டுரைகள் ‘தேசபக்தாமிர்தம்’ என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. இச் செய்தித்தாளின் ஆசிரியராகமூன்றாண்டுகளே பணி செய்தார்.

திரு. வி. க. தமிழிலே ஒரு கடல். அரசியலில் ஈடுபட்ட முதல் தமிழ்ப் பண்டிதர். சமரச சன்மார்க்கத்தை வாழ் நாள் முழுவதும் வற்புறுத்தி வந்த பெருந்தகை. தொழிலாளர்கள் தலைவன். அவரின் நினைவு தினம் இத் திங்கள் 17-ம் நாளாகும்.

‘தேசபக்தன்’ ஆசிரியர் பதவியை இவர் துறந்ததை யடுத்து மக்கள் ‘நவசக்தி’ எனும் கிழமையிதழைத் தொடக்கியதற்கு இவரை யாசிரியர் ஆக்கினர். அவ் விதழ் ‘தேச பக்தனை’ப் போல் அரசியல், தொழிலாளர் நோக்குகள் மட்டுமின்றிப் பெண்ணுரிமை, தமிழின் பெருமை, தமிழர் கலை முதலிய பலதரப்பட்ட வியல்புகளைக் கொண்டு விளங்கியது. அதனால் அதன் சுற்றோட்டம் இலங்கை, பர்மா, சயாம், மலாயா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற பிற நாடுகளிற்கும் பரந்தது.

## பேச்சாளர்

திரு. வி. க அவர்கள் எழுத்தாற்றலுடன் பேச்சாற்றலையும் பெற்றவர். சென்னை மாகாணச் சங்கம், சென்னை மாகாணக் காங்கிரசு, சென்னைத் தொழிலாளர் சங்கம், மத்தியத் தொழிலாளர் சங்கம் முதலிய இயக்கங்களிற் தலைவர், உதவித் தலைவர், உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்துப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

சுந்தரனாரின் பேச்சுக்கள் அரசியற் கருத்துக்களைச் செவ்வனே தமிழில் உணர்த்தலாமென்பதற்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்தன. அவை அரசியல், பொருளியல், வரலாறு, சமயம் முதலியன பற்றிய விழுமிய கருத்துக்கள் பலவற்றைக் கொண்டன. அவை கேட்போரைப் பிணிக்குந் தகையன. கேளாதோரையும் கேட்கச் செய்யும் பெற்றி பெற்றவை. இவர் பல மணி நேரம் தங்குதடையின்றியும் கேட்போர் விருப்பம் குன்றுதவாறும் சொற்பெருக்காற்றினார். தான் கூறவந்த பொருளின் கருத்தினை பொரு பொழுதும் அடுக்கு மொழி, எதுகை, மோனை முதலிய ஓசைச் சிறப்புக்களுக்காகச் சிதைக்கமாட்

(13-ம் பக்கம் பார்க்க)

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாயா ஜோதி
ஊதுபத்திகளே
சுகந்த வாசனை
நிலைத்து எரியும் தன்மை
நியாயமான விலை
நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.
உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயாஜோதி இன்டஸ்றீஸ்,
125/3, வார்ப்பிளேஸ், கொழும்பு—7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு திங்கள் தொடர்ந்த சத்திய யுத்தம்

## சிங்கள ஆட்சி சிதைந்ததை பிரதமரே ஏற்றுக் கொண்டார்

## ஆட்சி பீடம் ஏறியதும் அளித்த வாக்குறுதியை மறந்தனர் ஆளும் கட்சிப் பிரமுகர்கள்

## ஐ. தே. கட்சியின் அரசியல் சாதுரியம் எம்முன் படுதோல்வியடைந்தது

### தமிழரசுத் தந்தையின் தலைமைப் பேருரை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### 1960 மார்ச் மாதம்

எந்த ஒரு கட்சிக்கும் தானாகவே அரசாங்கத்தை அமைத்துக்கொள்ளக் கூடியதான பூரண பெரும்பான்மை கிடைக்கவில்லை. தமிழ் பேசும் மாகாணங்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்த 15 உறுப்பினர்களை ஒருமுகமாகத் தேர்ந்தனுப்பியிருந்தன. இவர்களோடு எமது கட்சி மீது அனுதாபங் கொண்டுள்ளவர்களும் அனேகமாகப் பாராளுமன்றத்தில் எம்மோடு சேர்ந்து வாக்களிப்பவர்களுமான வேறு நால்வரும் இருந்தார்கள். எந்தக் கட்சி அரசாங்கத்தை அமைப்பது என்பதைத் தீர்மானிப்பது எமது பத்தொன்பது வாக்குகளையுமே பொறுத்திருந்தது. பூரண பெரும்பான்மையற்றிருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகக்கூடிய உறுப்பினர்களைக் கொண்டிருந்ததால் அரசாங்கமமைக்கும்படி மகாதேசாதிபதி அக்கட்சியின் தலைவரான திரு. டட்லி சேனநாயக்கர்வைக் கேட்டுக்கொண்டார்.

எமது கட்சியின் ஆதரவைச் சம்பாதித்திருக்க முடியுமானல் திருவாளர் டட்லி சேனநாயக்கா தாமமைத்த அரசாங்கத்தை நீண்ட காலம் கொண்டு நடத்தியிருக்க முடியும். எங்களோடு பேச்சுவார்த்தை நிகழ்த்தினர். 'எந்த மக்கள் எம்மைத் தமது பிரதிநிதிகளாய் நம்பித் தெரிந்தனுப்பினர்களோ அந்த மக்களின் அரசியலுரிமைகளுக்கு அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்கள் தீங்கிழைத்து வந்துள்ளன. அத்தீங்குகள் அகற்றப்படுவதைப் பொறுத்தே நாம் எந்த அரசாங்கத்துக்கும் ஆதரவளிக்க முடியும்' என்று கூறி எமது நாலு கோரிக்கைகள் கொண்ட ஒரு ஆவணத்தை அவரிடம் சமர்ப்பித்தோம். ஆனல் திரு. டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தை நாம் ஆதரிக்கக் கூடிய வகையில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. 1947ம், 48ம் ஆண்டுகளில் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதில் காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயக்கா சாதுரியமாகக் கண்ட வெற்றி போல 1960 லும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய ஆதரவாளர்கள் சிலர் தமிழ் பிரதிநிதிகளை வெற்றிகொள்ள முயற்சித்தார்கள். திருவாளர் டட்லி சேனநாயக்காவை நாம் ஆதரிக்க இசைந்திருந்தால் எம்மில் சிலருக்குப் பதவிகள் கிட்டலாம் என்றும் பேசப்பட்டது. ஆனல் நம்மவர்கள் அனைவரும் பட்டம் பதவி வகிப்பதைத் துச்சமாய் மதித்து, நசுக்கப்பட்ட எமது மக்களின் உரிமைகளை மீட்பது ஒன்றில் மாத்திரமே மும்முரமாக முழுமூச்சுடன் நின்றார்கள் என்பது பற்றி நாமனைவருமே பெருமைப்பட முடியும்.

### சுதந்திரக் கட்சியிடம் கொடுத்த ஆவணம்

திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் எமக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்துகொண்டிருந்த பொழுது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பிலும் தற்சமயம் அமைச்சர்களாயிருக்கும் நாலு உறுப்பினர்களான திரு. சி. பி. டி. சில்வா, திரு. மைத்திரிபால சேனநாயகா, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, திரு. ஏ. பி. ஜயசூரியா ஆகியோர் எம்மோடு பேச்சுவார்த்தை நடாத்தினர்கள். இதன் விளைவாக இரு சாராருக்குமிடையில் ஒருவிதமான கருத்து ஒருமைப்பாடு ஏற்பட்டது. குறிப்பாக, மொழி விஷயத்தில் நாம் எழுத்திற் கொடுத்த கோரிக்கைகளின் தாற்பரியத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தது.

எமது கோரிக்கை பின்வருமாறு அமைந்தது:

அரசியற் சட்டப்படியும் நிர்வாகத்துறையிலும் தமிழ் மொழி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் தேசிய மொழியென ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஆட்சி மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதே நேரம் இப்பகுதிகளில் வாழும் தமிழ் பேசாதோருக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இலங்கையெங்கும் வதியும் தமிழ்பேசும் மக்கள் தமது ஆரம்பக் கல்வி தொட்டு பல்கலைக் கழகக் கல்விவரை தமிழிலேயே கற்கும் உரிமை, தமிழில் நடத்தப்படும் போட்டித் தேர்வு மூலம் அரசாங்க ஊழியத்துள் புகும் உரிமை ஆகியன சட்டப்படி அங்கீகரிக்கப்பட வேண்டும். இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழும் தமிழர் அரசாங்கத்துடன் தமது அலுவல்கள், தொடர்புகள் ஆகியவற்றைத் தமிழிலேயே வைத்துக்கொள்ளச் சட்டப்படி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள், அரசாங்கப் பிரசுரங்கள், அறிவித்தல்கள், பத்திரங்கள் எல்லாம் தமிழிலும் இருக்க வேண்டும்.

1957ல் எம்மோடு பண்டாரநாயக்கா ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் அவர் கருத்தில் கொண்டிருந்த பிரதேச சபைகளைப் போன்றதான மாவட்ட சபைகளை நிறுவுவதாகவும், சுதந்திரக்கட்சியின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திய இந்நால்வரும் மேலும் ஒப்புக்கொண்டனர்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்பட்ட கருத்து ஒருமைப்பாட்டின் விளைவாகவும் திரு. டட்லி சேனநாயக்காவுடன் எவ்வித ஒப்பந்தமும் ஏற்பட முடியாமற் போனது காரணமாகவும், திரு. சேனநாயக்காவின் அரசாங்கத்துக்கெதிராகச் சிம்மாசனப் பிரசங்க விவாதத்தின்போது, நாம் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தோம். அடுத்த நாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் ஆலோசனைப்படி மகாதேசாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார். 1960 யூலை மாதம் மீண்டும் ஒரு தேர்தல் நடந்தது. அப்பொழுதுத் தேர்தலின் முடிவுகளுக்கு இரண்டு விஷயங்கள் காரணமாய் அமைந்தன. அவற்றுள் ஒன்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் லங்கா சமசமாஜக் கட்சிக்குமிடையே ஏற்பட்ட தேர்தல் ஒப்பந்தம். இரண்டாவது, தமிழரசுக் கட்சியுடன் சுதந்திரக் கட்சி கருத்தொற்றுமை கொண்டுள்ளதென்று கூறி ஐக்கிய தேசியக் கட்சி காரசாரமாக வகுப்புவாதம் கக்கித் திரிந்தமை. வெற்றி இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ என்பதை நிர்ணயிக்கக்கூடிய அளவு தொகையில் தமிழ் வாக்காளர்கள் மலைநாட்டுத் தொகுதிகளில் இருக்கும்போது ஐக்கிய தேசியக் கட்சி இத்தகைய பிரசாரத்தில் ஈடுபட்டது பெருஞ் சாதுரியத் தவறாகி விட்டது.

### 1960 யூலை 20

மேலும் சுதந்திரக் கட்சியோடு எமக்கு ஏற்பட்ட கருத்தொற்றுமையை முன்னிட்டுத் தமிழ் வாக்காளர் சுதந்திரக்கட்சி அபேட்சகர்களுக்கே தமது வாக்குகளை அளித்தார்கள். இதன் விளைவாக 1960 யூலைத் தேர்தலில் 75 தொகுதிகளைச் சுதந்திரக்கட்சி தீர்க்கமாக வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 30 ஸ்தானங்களையே பெற முடிந்தது.

எதிர்பாராவகையில் இந்தப் பிரமிப்பான வெற்றியைக் கண்டதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் தமது வாக்குறுதிகளை முற்றாக மறந்தார்கள். இதையொட்டி எமக்கு அவர்கள் செலுத்தவேண்டிய கடமையை நினைவூட்டி நான் மீண்டும் மீண்டும் எழுதிய பல கடிதங்களுக்குக் குறைந்தபட்சமாக ஒரு பதில்தானும் கிடைக்கவில்லை. சுதந்திரக் கட்சியினர் தமது இந்த நடத்தையின் மூலம் எம்மோடு ஏற்பட்ட கருத்தொற்றுமையை வெட்கித் தலை குனியும் வகையில் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். 1960 மார்ச் மாதம் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாகப் பாராளுமன்றத்தில் வாக்களிக்கும்படி இறுதி நேரத்தில் எம்மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட்டபோதிலும் நாம் எமது வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறக்கூடாது என்பதற்காக ஏற்கனவே ஒத்துக்கொண்டபடி சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து வாக்களிக்கத் தவறவில்லை. ஆனல் யூலை 1960ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ எதிர்பாராவகையில் அதிகாரத்துக்கு வந்ததும் — அதுவும் எமது ஒத்துழைப்பால் அதிகாரத்துக்கு வந்ததும் - எமக்களித்த வாக்குறுதியையும் அதன் மூலம் தனது நாணயத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் தவறிவிட்டது.

### சிங்கள ஆட்சி சிதைந்தது

சுதந்திரக் கட்சி அரசாங்கம் இவ்வாறு எம்மை நடத்[illegible] வேண்டியது [illegible] என்பதைத் தீர்மானி[illegible]க்கவேண்டியவர்களானேம்.

மூன்று வழிகள் எம்முன்னே தோன்றின. முதலாவதாக என்றென்றுமே எமது மொழியுரிமை ஏனைய உரிமைகள் அனைத்தையும் கைவிட்டுச் சரணாகதியடைவது. இதை நாம் நினைத்துப் பார்ப்பதற்கும் இல்லை. நாம் சரணாகதியடைந்திருந்தால் தமிழ் பேசும் மக்களுக்குத் தீராத வடு இழைத்தவர்கள் ஆவோம். இரண்டாவதாக நாம் பலாத்கார வழிகளில் எமது போராட்டத்தைத் தொடர்ந்திருக்கலாம். ஆனல் இவ்வழி முதலிலே தார்மீகமற்றது, எமது பண்புக்குப் புறம்பானது. இரண்டாவதாக இது நடைமுறைச் சாத்தியமானதுமல்ல. எனவே, எம்முன்னே இருந்த மூன்றாவது வழி சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் செய்வதேயாகும். இந்தக் காந்திய வழியைப் பின்பற்றிப் போராட்டத்தைத் தொடருவதென நாம் தீர்மானித்தோம். போராட்டத் திட்டத்தின்படி ஒவ்வொரு தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையிலும் ஒவ்வொரு நாளைக்கும் அவ்வத் தொகுதியிலிருந்து திரட்டப்பட்ட தொண்டர்கள் கச்சேரி வாயில்களின்முன் உட்கார்ந்திருந்து அரசாங்க உத்தியோகத்தர் எவரும் உள்ளே போக முடியாதபடி தடுப்பதெனத் தீர்மானித்தோம். 1961 பெப்ரவரி 20ந் திகதி எனது தொகுதித் தொண்டர்களுடன் சென்று நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

அன்று ஒரு வாயிலிலிருந்து பலாத்காரமாகத் தொண்டர்களை அப்புறப்படுத்தப் பொலீசார் வெறுமனே உட்கார்ந்த சத்தியாக்கிரகிகள் மீது வெட்கக்கேடானமுறையில் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தார்கள். இது எமது இயக்கத்துக்குப் பலத்த பிரசித்தமளிப்பதாய் இருந்தது. எமது தொண்டர்களின் திட வைராக்கியத்தை மேலும் அதிகரிப்பதாய் முடிந்தது. இதைக் கண்ட அரசாங்கம் சத்தியாக்கிரக இயக்கத்தில் தலையிடாதிருப்பதன் மூலம் இயக்கத்தைப் புசு புசுக்கச் செய்யலாமெனக் கனவு கண்டது. ஆனல் தமிழ் பேசும் மக்கள் இயக்கத்தைத் தளர விடுவதுக்குப் பதிலாக மேலும் மேலும் தீவிரமாக்கினர்கள்.

பெப்ரவரி 20ந் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த இயக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னர் ஆகிய இடங்களுக்குப் பரவிற்று. சாதி சமய வேறுபாடு மாத்திரமல்ல, அரசியல் வேறுபாடுகளைக் கூட மறந்து தமிழ் பேசும் மக்கள் இயக்கத்தைப் பிரமிக்கத்தக்க வகையில் வெகுசனக்கிளர்ச்சியாக மாற்றிவிட்டார்கள். 1961 ஏப்றில் 17ந் திகதி நள்ளிரவில் அரசாங்கம் அந்தரநிலைப் பிரகடனம் செய்து நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளுக்கெதிராக இராணுவத்தை ஏவிவிடும்வரை 56 நீண்ட நாட்களாகத் தீவிரமாகத் தொடர்ந்தது இயக்கம். வட கிழக்கு மாகாணங்களில் சிங்கள அரசாங்கத்தின் அதிகாரம் சிதறுண்டு விட்டதெனப் பகிரங்கமாகவே தெரிவித்தார் பிரதமர் சிறிமாவோ, மூதவையில்!

(அடுத்த இதழில் முடியும்)



ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கன்னை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே சண்டிக்கும்.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சிளுப் பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணெயும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்.

15 நாள் டின் ரூபா 3-00

30 நாள் டின் ரூபா 5-75

தபால் செலவு /-95

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 செப்டம்பர் மாதம் 20-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## மலைநாட்டு மக்கள் பிரச்சினை

மலைநாட்டுத் தமிழர் பிரச்சினைபற்றி மீண்டும்பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. இந்திய அயல் நாட்டு மந்திரி இங்குவந்து பேசிவிட்டுச் சென்றுள்ளார். அடுத்து, இருநாட்டுப் பிரதமர்களும் புதுடில்லியில் அடுத்த மாதம் சந்திக்கின்றனர்.

மலையகமக்களின் பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் கண்டுபிடித்துள்ள தீர்வு மிக விந்தையானது. நாடற்றவர்களென கூறப்படும் 'சுமார் 10 இலட்சம் மக்களும் இந்தியர்களே—அவர்களை இந்தியா திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்துகிறது அரசாங்கம்.

இத் திட்டம் பிரச்சினைக்கான தீர்வன்று. இது செயல்படுத்த முடியாதது. உண்மைக்குப் புறம்பானது. நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கக்கூடியது. தேச விரோதமானது.

இத்திட்டத்தை இந்தியா ஏற்றுக்கொண்டு, 10 இலட்சம் மக்களும் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டால் தேயிலைத் தோட்டங்களின் கதி என்ன? அவர்கள் வெளியேறிவிட்டால் அந்த வேலையைச் செய்ய 10 இலட்சம் பயிற்சிபெற்ற சிங்களத் தொழிலாளர்கள் தயாராயிருக்கிறார்களா?

கொழுந்தெடுக்க ஒருநாள் பிந்தினாலும். தேயிலையின் தரம் கெட்டுவிடுமே! கல்யாணம், மரணம், கோவில் விழா என்றெல்லாம் அடிக்கடி வேலைக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு, சுற்றித்திரியும் சோம்பல் மனப்பான்மைகொண்டவர்களல்லவா சிங்களத் தொழிலாளர்கள்? அவர்கள் அந்தக் கடும் குளிரையும், அட்டைக் கடியையும் தாங்கக்கூடியவர்களா?

கள்ளிறக்கும் தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திரும்பியதால், அந்தத் தொழிலே இன்று இங்கு ஸ்தம்பிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. சிங்களவர்களிடையே கள்ளிறக்குவதற்கு 500 தொழிலாளர்கள் கூட கிடைக்கவில்லையே! தோட்ட வேலைக்கு 10,000,00 தொழிலாளர்களை எங்கே தேடுவது?

1000 கள்ளிறக்கும் தொழிலாளர்களை அனுப்பி உதவுமாறு இந்தியாவைக் கேட்கும் நிலைக்கு வந்து விட்டது இலங்கை அரசாங்கம். தோட்ட மக்கள் விஷயத்திலும் இதுதான் நடைபெறும் என்பதை ஆட்சியாளர் உணரவேண்டும். தோட்டத் தமிழர் இங்கிருந்து வெளியேறிவிட்டால், மீண்டும் அவர்களை இங்கே கொண்டுவர மன்டியிட்டு மன்றாட வேண்டிய நிலைதான் அரசாங்கத்துக்கு ஏற்படும்.

அரசாங்கத்தின் கண்மூடிக் கொள்கையால் தேயிலைத் தோட்டங்களை மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென எச்சரிக்கின்றோம். 'தோட்ட மக்கள் கள்ளத்தோணிகள் அவர்களை விரட்டுங்கள்' என்று இராஜரத்தினங்களும் ஆர். ஜி.க்களும் கூச்சலிடுகின்றனர். அவர்களுக்குப் பயந்து அதே வெறிக் கூச்சலை அரசாங்கமும் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பது மதியீனமாகும். நாட்டைப் பொருளாதாரப் படுகுழியிற் தள்ளும் நாசகரமான தேசத் துரோகச் செயலாகும்.

ஆகவே நாட்டின் நலனைக் கருதியாவது மலைநாட்டு மக்களைப் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை முற்றாக மாற்றப்பட வேண்டும். 'நாடற்றவர்கள்' எல்லோரும் இந்தியர்கள் என்ற ஒளிப்பிள்ளை மந்திரத்தை அடியோடு கைவிட வேண்டும்.

இதனைத் தேசியப் பிரச்சினையாகக் கருதி எதிர்க்கட்சித் தலைவர்களின் கருத்தை அறிய பிரதமர் முயன்றிருப்பது நல்ல அறிகுறியே. பிரதமர் தமது தவறான கொள்கையை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். அவர் தம் கொள்கையை மாற்றிக்கொள்ள மாற்றுக் கட்சிகளின் கருத்துக்கள் அவருக்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் செவ்வாய்க் கிழமை பிரதமரைச் சந்தித்து இப்பிரச்சினை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவாரென்று ஒரு செய்தி கூறுகிறது. அப்பொழுது இது பற்றி கட்சியின் திட்டத்தையும் அவர் பிரதமரிடம் சமர்ப்பிப்பாரென்றும் பிரச்சினைக்குத் தீர்வு காண அத்திட்டம் வழிவகுக்கக் கூடியதென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மலையக மக்கள் உட்பட ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பாக திரு. செல்வநாயகம் பேச்சு வார்த்தை நடத்துவாரெனினும், தோட்ட மக்களிடையே இரு பெரும் தொழிற் சங்கங்களை நடத்தும் திரு. தொண்டமான், ஐனாப் அசீஸ் ஆகியோரையும் பிரதமர் கலந்தாலோசிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். பிரதம மந்திரி அவர்களையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்துவது பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காண பெரிதும் உதவியாயிருக்கும்.

தோட்ட மக்களின் இரு பெரும் தொழிற் சங்கத் தலைமையைப் புறக்கணித்து இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று எண்ணுவது மடமை. இரு அரசாங்கங்களும் கூடிப் பேசி எந்த முடிவைச் செய்தாலும், காங்கிரஸ் தலைவர்களின் ஒத்துழைப்பின்றி அதனை அமுல் நடத்த முடியாதென்பதைப் பிரதமர் உணரவேண்டும்.

பிரச்சினைக்குத் தீர்வு டில்லியில் இல்லை—இங்குதான் இருக்கிறது என்பதைப் பிரதமர் உணர்ந்து கொண்டால் சிக்கல் இலகுவில் தீர்ந்துவிடும். மலைநாட்டுத் தமிழர்கள் மனிதர்கள். அவர்களின் பிரச்சினையும் மனிதர் பற்றிய பிரச்சினை. எனவே மனிதாபிமான உணர்ச்சியுடன் தான் இப்பிரச்சினையை அணுக வேண்டும்—அணுக வேண்டும் என்பதையும் பிரதமர் உணர்ந்து விட்டால் தீர்வு கைமேல் வந்து விடும். நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதியைத் தேடிக் கொடுக்கும் பாட்டாளி மக்கள் உரிமைகளின்றி அடிமைகளாக உழலுவதை, இனி மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

இதே மாதிரி, மொழிப் பிரச்சினை உள்ளிட்டு தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் இதர பிரச்சினைகளையும் தேசிய பிரச்சினைகளாகக் கருதி [illegible] தலைவர்களுடன் கலந்தாலோசிக்க [illegible] முன்வந்தால், பிரச்சினைகளை இலகுவில் தீர்க்க வழி பிறக்கும் என்பதையும் அவருக்குச் சுட்டிக் காட்டுகின்றோம்.

---

# ★ பிரதமர் மகள் பெற்ற சலுகை தமிழ் மாணவருக்குப் பயன்படுமா?

—o—

# ★ மொழி வழித் தொழிற் சங்க சம்மேளனம் வர்த்தக ஊழியர் துயர் துடைக்க முன்வருமா?

**இலங்கைப் பிரதமரின் மகள் உயர்தரக் கல்வி பெறுவதற்காக ஒக்ஸ்போட் செல்கிறார். ஆனால் தமிழ் பேசும் மாணவர்களோ அருகிலுள்ள இந்தியாவிற்குத் தானும் சென்று தமது கல்வியைப் பெற முடியாது தடுக்கப்பட்டுள்ளனர். பிரதமரின் மகளுக்காகத் தளர்த்தப்பட்ட சட்டம் தமிழ் பேசும் மாணவர்களுக்கும் பயன்படுமா?**

இலங்கைப் பிரதமரின் மகள் செல்வி சுனேத்திரா ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்திற்குச் செல்வது உறுதியாகிவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வெளிநாடு சென்று இலங்கையர் கல்வி கற்பது சம்பந்தமாக இலங்கை அரசு விதித்திருந்த சகல கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுவிட்டன.

இலங்கையிலே பெறக்கூடிய கல்வித்துறையில் பயிற்சிபெற எந்த இலங்கை மாணவருக்கும் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது என்ற இலங்கை அரசின் சட்டமும் இதனால் தளர்த்தப்பட்டுவிட்டது. வெளிநாட்டிலுள்ள எந்தத்தனிப்பட்டவரிடமோ அல்லது பொது நிலையங்களின் உதவியுடன் தானும் இலங்கை மாணவர்கள் வெளிநாடு சென்று கல்வி கற்க முடியாது என்ற இலங்கை அரசின் கொள்கையும் செயலற்றுவிட்டது.

நாட்டின் தேவைகளை உணர்ந்தே அரசு இத்தகைய கட்டுப்பாடுகளை விதித்தது என்ற விளக்கம் இன்று தேவையற்றதாகிவிட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசு இத்தகைய ஒரு சட்டத்தை அமுல் நடாத்த முற்பட்டதனால் பெரும்பான்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மாணவர்களே.

இலங்கைச் சர்வகலாசாலையில் குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே இடவசதியுண்டு. இலங்கைச் சர்வகலாசாலையை விட மேலதிகமாக உள்ள வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களில் தமிழ் பேசும் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இதனால் பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை வகுப்பை முடித்துக்கொண்டு சென்னை, கல்கத்தா போன்ற பல்கலைக் கழகங்களை நாடினார்கள்.

நீண்ட நெடுங்காலமாக இலங்கைத் தமிழர்கள் இந்தியா சென்று கல்வி கற்று வந்துள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரி இலங்கையைச் சேர்ந்த திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்ற மாணவர்கள் தனியே பட்டப்படிப்பை மட்டும் பெறவில்லை. அறிவியல், பொறியியல், மருத்துவவியல் போன்ற துறைகளிலும் பயிற்சியும் பட்டமும் பெற்றுத் திரும்பினார்கள்.

ஆனால் 61 ம் ஆண்டு விதிக்கப்பட்ட சட்டம் இந்தியா செல்லும் இலங்கை மாணவர்களைப் பெரிதும் பாதித்தது. 62 ம் ஆண்டு முதல் புதிதாக எவருமே இந்தியா சென்று கல்வி கற்கமுடியாத நிலையில், மலேயா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும், இந்தியாவிலும் வாழும் சிலர் அவர்களின் உறவினர்களாக உள்ள இலங்கை மாணவர்களுக்குப் பொருள் உதவி செய்ய முன்வந்தார்கள். இந்தியாவில் கல்வி கற்கும் காலத்தில் ஏற்படக் கூடிய சகல செலவினங்களையும் ஏற்பதாக வாக்குறுதி கொடுத்தனர். அத்தகையவர்களின் வாக்குறுதியை எழுத்து மூலம் பெற்று பல தமிழ் மாணவர்கள் இந்தியா செல்ல இலங்கை அரசிடம் விண்ணப்பித்தனர். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

### சுதந்திரன் அரசியல் திருப்

இன்று பிரதமரின் மகள் ஒக்ஸ்போட்டில் கல்வி கற்பதற்கு ஏற்படும் செலவை இங்கிலாந்திலுள்ள அவரின் உறவினர்கள் பொறுப்பேற்பதால், அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே இரண்டாண்டுகளுக்கு முன்னர் இதே வழி முறைகளைப் பின்பற்றி இந்தியா சென்று கல்வி கற்க விண்ணப்பித்த தமிழ் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பிரதமரின் மகளுக்கு எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டதோ, அதே அடிப்படையில் இன்று தமிழ் மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் இது பற்றிப் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பதோடு, தமிழ் மாணவர்கள் பிறநாடு சென்று கல்வி பயிலுவதற்கான அனுமதியையும் பெற்றுத் தருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைச் சட்டங்கள் பிரதமரின் குடும்பத்தைப் பாதிக்கும் என்பதால் தளர்த்தப்படுகிறதா? நாளை இது போன்று—இன்று சிறுபான்மையினரை சித்திரவதைப்படுத்தும்—பல சட்டங்கள் தளர்த்தப்படுமா?

### சிங்கள மயம்

1965 சனவரி மாதம் முதல் தனியார் துறையிலும் இலங்கையர் மயம் தீவிரமாக அமுல் நடாத்தப்படப் போகிறது. இறக்குமதி வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்குவது என்ற அரசாங்கத்தின் முடிவும் உறுதியாகிவிட்டது. இதனால் தனியார் வர்த்தகத் துறையில் கடமையாற்றும் சிங்களவரல்லாதார் வேலை இழக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது.

இலங்கைப் பிரசைகள் நூற்றுக்கு நூறு வீதம் பங்குகள் வைத்திருக்கும் இலங்கையர் வர்த்தக நிலையங்களுக்கே இறக்குமதி வர்த்தகத்தை அனுமதிப்பது என்று அண்மையில் அரசாங்கம் முடிவு செய்துள்ளது அறிந்ததே.

நூறு வீதம் இலங்கை ஊழியர்களைக் கொண்ட வர்த்த நிலையங்களுக்கே இனிமேல் இறக்குமதி வர்த்தக அனுமதி வழங்கப்படும். இதனால் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் சிங்களவர் அல்லாத ஊழியர்களை ஆட் குறைப்பு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. சிங்களவர் அல்லாத ஊழியர்கள் தமது பிரசா உரிமையை நிரூபிக்க வேண்டும். இதனால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தமிழர்கள், முஸ்லிம்கள், மலாயர்களாவார்கள். இவர்கள் குடியுரிமையை நிரூபிக்க தமது தகப்பனார் பாட்டனார் ஆகியோரின் பிறப்புப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். அவர்களிற் பெரும்பாலோர் இப் பத்திரங்களையெல்லாம் தேடிச் சேகரிக்கும் நிலையில்லை.

அடுத்த மாதம் தேசியமயமாக்கப்படவிருக்கும் காலித் துறை முகத்தில் இலங்கையர் மயக் கொள்கையை நூறு வீதம் அமுல் நடாத்தும் படி போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்கா விற்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளதாம். இதனால் காலித் துறை முகத்தில் கடமையாற்றும் பெரும்பான்மையான சிங்களவரல்லாத ஊழியர்கள் வேலை இழக்கப் போகிறார்கள்.

இப்பொழுது ஆரம்பமாகியிருக்கும் ஆட்குறைப்பு நடவடிக்கை 1965 ம் ஆண்டு சனவரியில் பூரணமாக அமுல் நடாத்தப்படும். சிங்களவரல்லாத ஊழியர்கள் பல்லாயிரக்கணக்கில் தொழிலின்றி தவிக்க வேண்டிய நிலை உருவாகப் போகிறது.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு சிங்கள வரல்லாத வர்த்தக ஊழியர்களைக் கொண்ட தொழிற்சங்கமொன்று உடனடியாக உருவாக்க வேண்டும். சகல துறைகளிலும் கடமை யாற்றும் சிங்களவரல்லாத ஊழியர்கள் பற்றிய புள்ளி விபரங்களைத் திரட்ட வேண்டும்.

ஒன்றுபட்ட இயக்கத்தின் கீழ் நின்று போராடினாலே ஆட்சியாளரின் இந்த இனவொழிப்புத் திட்டத்தை முறியடிக்க முடியும்.

சிங்களவரல்லாத வர்த்தக ஊழியர்களைக் கொண்ட இப்புதிய தொழிற் சங்கத்தை உருவாக்க மொழி வழித் தொழிற் சங்க சம்மேளனம் உடன் நடவடிக்கை எடுக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகளின் ஊழல்களை வெளியிட

# ஒரு புதிய பத்திரிகை

## சிங்கள வார ஏடு தரும் தகவல்

பத்திரிகைகளின் ஏகபோக உரிமையை அகற்றும் தினத்தன்று ஒரு புதிய பத்திரிகை பிரசுரிக்கப் படுமென்றும், அந்தப் பத்திரிகையில் தினசரிப் பத்திரிகைக் காரியாலயங்களில் இதுவரை நடை பெற்ற பல ஊழல்கள் வெளியிடப்படுமென்றும் 'சமசமாஜய' 11-9-64ந் திகதி இதழில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நடுநிசியில் பத்திராலயங்களில் நடைபெற்ற சதிகள் பற்றியும் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் மரணத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே ஒரு சிங்களப் பத்திரிகை திரு. தகநாயக்கா பிரதமராவாரென்று ஆருடம் கூறியதாகவும், அவ்விடயம் அப்பத்திரிகைக்கு எப்படித் தெரிய வந்தது என்பது பற்றியும் இப்புதிய பத்திரிகை செய்தி வெளியிடுமென 'சமசமாஜய' மேலும் கூறுகிறது.

தினசரிகள் பற்றிய மற்றும் பல இரகசியங்களை இப் பத்திரிகை வெளியிட இருப்பதாகவும் இச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 32 பேர்களில் மூவர்தான் சிங்களவர்

'அப்போத்திக்கரி பரீட்சைப்பெறுபேறு இருவாரங்களுக்கு முன்பு வெளியாயிற்று. சித்தி பெற்ற 32 பேர்களில் மூன்றே மூன்று பேர்கள் தான் சிங்களவர்கள்' என்று 'மகஜன எக்ஸத் பெரமுண' 12-9-64ந் திகதி எழுதியுள்ளது.

'இந்த 32 பேர்களிற் பெரும்பாலோர் தமிழர்கள். எஞ்சியவர்கள் இதர சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள்.

சனத்தொகையில் 80 சத விகிதம் பேர் சிங்களர்களைக் கொண்ட இந்த நாட்டில் அப்போத்திககரிப் பரீட்சை போன்ற முக்கியமான பரீட்சையொன்றில் 3 சிங்களவர்கள் மட்டும் சித்தி பெற்றிருப்பது ஏதோ ஒரு இரகசிய ஏற்பாட்டின் எதிரொலியா என்ற கேள்வி எழுப்பப்படுவது நியாயமே.

விடைத்தாள்களைப் பார்ப்பதில் அநீதிகள் நிகழ்ந்ததுண்டா? இல்லையேல் சிங்களவர்களில் ஒரு சிலர்தான் இப்பரீட்சை எழுதினார்களா? ஒரு சிலர்தான் பரீட்சைக்குத் தோற்றினார்களெனின் அப்போத்திக்கரிப் பயிற்சிக்காக முதலில் தெரிவு நடைபெற்ற பொழுது அநீதி எதுவும் நடந்திருக்குமா?' என்று கேட்கும் மகஜன எக்ஸத் பெரமுண இது பற்றிப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி கவனம் செலுத்தவேண்டுமென்றும் கோரியுள்ளது.

## விஷமிகளின் அட்டகாசம்

### இ. தொ. க. கண்டனக் கூட்டம்

இம் மாதம் 12-ந் திகதி இரவு இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வளர்ச்சியைக் கண்டு பொறாமையடைந்த யாரோ, கழகத்தின் தலவாக்கொல்லை அலுவலகத்தில் உள்ள பொருட்கள், கடிதக் கோப்புகள் ஆகியவற்றின் மேல் பெற்றோல் ஊற்றித் தீ வைத்துள்ளனர் என்று அறியப்படுகிறது.

இந் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாக இம்மாதம் 27ம் திகதி காலை 10 மணிக்கு தலவாக்கொல்லையில் ஓர் பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

அன்று மாலை 3 மணிக்கு மஸ்கெலியாவில் மாவட்டக் குழுத் தெரிவின் பின் ஒரு பொதுக் கூட்டம் மஸ்கெலியாவில் நடைபெறும்.

இவ்விரு கூட்டங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மொழிவழித் தொழிற் சங்கங்களின் முக்கியஸ்தர்கள், தமிழ்ப் பெரியார்கள் பங்கு பற்றுவார்கள்.

## பௌத்த பாடசாலை நிறுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பௌத்த விகாரை

இதற்கிடையில் இக்கோட்டைப் பிரதேசத்துள் ஒரு பௌத்த விகாரை ஒன்றினை நிறுவுதற்கும் சில பௌத்த சங்கங்கள் முயற்சித்ததாகவும் தெரியவருகிறது. திருகோணமலை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பினால் இம்முயற்சி இதுவரை நடைமுறைக்கு வரவில்லை.

இப்பொழுது இப் பிரதேசத்துக்குள் பௌத்த மத போதனைக்கான பள்ளிக்கூடம் ஒன்றினை நிறுவுவதற்கு பெரு முயற்சிகள் நடைபெறுவதாக அறிகிறோம். மதப்பாடசாலை நிறுவுவதனால் அதற்கு எத்தகைய எதிர்ப்புகளும் ஏற்படாது என்று சில பௌத்த நிறுவனங்கள் வற்புறுத்தியதன்பேரில் இம்முயற்சி செயற்பட ஆரம்பித்திருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது.

இச்செய்தி திருகோணமலை வாழ் இந்துக்களுக்குமட்டுமல்லாமல் அகில இலங்கையிலுமுள்ள இந்துப் பெருமக்களுக்கும் பெருங்கவலையை அளிப்பதாயிருக்கிறது. இம் முயற்சியினை இந்துமத நிறுவனங்களும், தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களும் வன்மையாக எதிர்க்கும் என்று கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து திருகோணமலை பிரெட்றிக் கோட்டையைப் புனித நகராகப் பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை எங்களும் கிளர்ச்சிகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் சுதந்திரனுக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

## தமிழர்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் ஒரு மகஜரையும் கொடுத்திருந்தனர். அம் மகஜரை நகல் எடுத்து தபால் அமைச்சைச் சேர்ந்த சகல பகுதிகளுக்கும் அமைச்சர் அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது.

சங்கம் சமர்ப்பித்த மகஜரில்தெரிவிக்கப்பட்டிருக்கும் அம்சங்களை அமுலாக்குவது பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கும் வண்ணம் சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர்களிடம் அமைச்சர் கேட்டிருக்கிறாராம்.

அஞ்சல் திணைக்களம் ஒரு வருவாய் தரும் பகுதியென்றும் நாட்டிலுள்ள சகல இன மக்களும் தொடர்பு கொள்ளும் திணைக்களமென்றும் அம்மகஜரில் குறிப்பிட்டு சகல மொழிபேசும் மக்களும்தொடர்புகொள்ள வசதியாக திணைக்களம் மும்மொழியிலும் இயங்கவேண்டுமென்றும் சங்கம்கருத்துத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆளடையாள அட்டை, சேமிப்பு பத்திரங்கள் முதலானவற்றை உடன் மூன்று மொழியிலும் வழங்கும்படி சங்கம், அமைச்சரை வற்புறுத்தியிருந்தது. சங்கத்தின் வேண்டுகோளின்பேரில் அமைச்சர் சிங்களமொழி பேசாத மக்களுக்கு வழங்கப்படும் ஆளடையாள அட்டைகள் அனைத்தையும் ஆங்கிலத்தில் வழங்கும்படி உத்தரவிட்டிருப்பதாக அறியப்படுகிறது.

சங்கம் மும்மொழியிலும் அலுவல்களை நடாத்தும் வண்ணம் வேண்டியிருக்கும் பொழுது, அமைச்சர் சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் மட்டும் அமுல் நடாத்த உத்தரவிட்டிருப்பது சிங்களம் பேசாத சகல மக்களினதும் தாய்மொழி ஆங்கிலமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

## முதல் தியாகத்தை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் வருவோர் நடப்பு ஆண்டுப் பதவிபாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்: திரு. செ. கோடீசுவரன், பொதுச் செயலாளர்: திரு. வே. தங்கவேல், பொருளாளர்: திரு. சு. தர்மலிங்கம், துணைத் தலைவர்கள்: திருவாளர்கள்: செ. ஜீவராசா, மு. முருகுப்பிள்ளை, துணைச் செயலாளர்கள்: திருவாளர்கள்: ஆ. இராசரத்தினம், செ. செல்வநாதன், துணைப் பொருளாளர்கள்: திரு. சு. குமாரசாமி, திரு. சி. பாலசுந்தரம்.

செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: இ. இராமநாதன், மு. தம்பிமுத்து, வே. சுதந்திரலிங்கம், வீ. வேலாயுதன், ப. வே. தேவராசா, த. காசிநாதன், க. நவரத்தினம், சு. சோதிலிங்கம், கா. கணேசரத்தினம், சி. வாசுதேவன், க. முருகுப்பிள்ளை, இ. சண்முகராசா, த. மகேந்திரன், நா. சச்சிதானந்தன், பொ. [illegible] இ. [illegible] [illegible] கணேசன், க. கணேசன், டி. வித்தியானந்த சர்மா.

## மூன்றுள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமசமாஜக் கட்சியின் தலைமைப் பதவிக்கு உடனடியாக டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவை நியமிக்க வேண்டுமென பிரபல கட்சி உறுப்பினர்கள் திட்டமாகக் கூறிவருவதாக அறியப்படுகிறது.

டாக்டர் என். எம். ஜப்பானுக்குப் புறப்படமுன்பு அவரது இல்லத்தில் நடத்திய இரகசிய அரசியல் கூட்டம் என்ன?

தான் வெளிநாட்டிலிருந்து திரும்பியதும், சுதந்திரக் கட்சியின் கோட்டைகளைத் தகர்ப்பதற்காகப் பின்னணி தயார் செய்து வைக்குமாறு நிதிமந்திரி இக் கூட்டத்தில் கூறினாராம். பத்திரிகைகளைத் தேசிய மயமாக்கிய பிறகு தான் சுதந்திரக் கட்சி நொறுங்கிவிழக்கூடியதாகத் தாக்குதலைத் தொடுக்க வேண்டுமென்று அவர் இக் கூட்டத்தில் மேலும் தெரிவித்தாராம்.

'கள் இறக்கும்' திட்டத்தைக் கொண்டு வந்ததின் மூலம், சுதந்திரக் கட்சிக்குச் சாதகமாயிருந்து வந்த பௌத்த ஒத்துழைப்பைத் தான் நாசமாக்கிவிட்டதாகவும், பத்திரிகைகளைத்தேசிய மயமாக்குவதைத் துரிதப் படுத்துவதின் மூலம் நாட்டின் முழு எதிர்ப்பையும் சுதந்திரக் கட்சியின் பால் தான் திருப்பிவிட்டதாகவும் நிதிமந்திரி இக் கூட்டத்தில் கூறியதாக அறியப்படுகிறது."

## தலைவர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் திருவாளர்கள் சி. மூ. இராசமாணிக்கம், அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, வ. நவரத்தினம், வீர. சுப்பிரமணியம், மசூர் மௌலானா, கரவைக் கிழான், கரிகாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

வல்லைநெசவாலையில் செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியின் மூவர்ணங்களையும் கொண்ட துவாய் விற்கப் படும். கோணேசர் ஆலயம் சம்பந்தமான சிறு நூல்களும், புகைப்படங்கள் முதலியனவும் இக் கூட்டத்தில் விற்கப்படுமென்று அறியப் படுகிறது.





மொண்ட் பிளாங்
இலங்கையின் பிரீதிகரமான
கட்டிப்பால்

தேநீர், கோப்பிக்கு முன்னெப்பொழுது மில்லாத நித் திப்பான ருசியை அளிக்கிறது!




தேநீர், கோப்பிக்கு உண்மையில் நிகரில்லாத ருசியை அளிக்கவல்ல பால்தான் இந்த மொண்ட் பிளாங். ஆகையாற்றான் இலங்கையிலுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும், பிள்ளையும் இதை பெரிதும் விரும்பி தெரிவு செய்கின்றனர்.

போலிகளை ஏற்காதீர்கள்
இன்றே கேட்டு
வாங்குங்கள்
மொண்ட் பிளாங்

வர்த்தக விசாரணைகளுக்கு
அப்துல்ஹுசெய்ன் ஜவெர்ஜீ
192, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விடத்தையும் வண்டமிழையும் காத்த செம்மல் வன்னியசிங்கம்

'நாயினும் கீழாய் நம் தமிழ் மக்கள் நலிவதை நான் கண்டும் ஓயுதல் இன்றி அவர் நலம் பேணி உழைத்திட நான் தவறேன்' என பாரதிதாசன் பகர்ந்த மெய்க்கமைய தமிழ் இனத்தின் நிலையான நலன் கருதி அல்லும் பகலும் ஓயாது உழைத்த பெரும் மகன் வன்னியசிங்கம் அவர்கள்.

தமிழின் தொன்மை, பெருமை, இனிமை, பண்டைத் தமிழரின் வளம் செறிந்த வாழ்வு இவை பற்றியெல்லாம் பக்கம் பக்கமாய் எழுதி பலமணி நேரம் மேடைகளில் பேசி தமிழ் மக்களுக்கு உணர்ச்சியூட்டும் பேச்சாளர்களை, எழுத்தாளர்களை எம் இனம் நிறையத் தோற்றி வித்துள்ளது. இன்னும் இத்தகையோர் தோன்றவும் கூடும். ஆனல் வெறும் பேச்சோடோ எழுத்தோடோ நில்லாது இரவு பகலாகத் தமிழினத்தின் தாழ்ந்த நிலையைப் போக்க உழைத்த வன்னியசிங்கம் போன்ற ஒரு உண்மைத் தொண்டனை எம் இனம் இனித் தோற்றுவிக்குமோ என்பது ஒரு பெரும் கேள்வியாகவே விளங்குகின்றது.

கவர்ச்சியூட்டும் பேச்சும் கட்டுரை வன்மையும் அறிக்கை வெளியிடும் ஆற்றலும் எம் இனத்திற்கு விடிவையோ விடுதலையையோ தரும் என்று எண்ணுவது தவறு. திரு. வன்னியசிங்கம் போன்று உடலினல் முழு நேரம் உழைக்க முன்வரும் ஒரு சிலரினுல்தான் எம் இனம் விடுதலை பெறமுடியும்.

திரு. வன்னியசிங்கம் மறைந்தபோது, அன்னவர் பற்றி இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் கூறிய பின்வரும் கூற்று எம் சிந்தனைக்குரியது. 'உலகம் பல கல்விமான்களைப் பெறுதல்கூடும். பல செல்வம் படைத்தவரைப் பெறுதல் கூடும். பாவலரையும், வேந்தரையும் பெறுதல் கூடும். ஆனல் ஒரு சில தொண்டரைப் பெறுதல் அரிதிலும் அரிது. எமது நாட்டுத் தொண்டர் ஒரு

வாழ்த்து என்ற வளமிகு கூற்று எழுந்தது போலும்.

1958ல் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது தென் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் வடக்கும் கிழக்கும் ஓடி தஞ்சம்புகுந்த நிகழ்ச்சியைக் குறித்த வன்னியசிங்கம் அவர்கள், எமக்கென்று ஒரு மரபுவழித் தாயகம் இருந்ததினுல் அன்ருே எம்மை நாம் காப்பாற்ற முடிந்தது என்று இடித்துரைத்த கருத்து, எம் பரம்பரைப் பிரதேசம் பறிபோகாது இருப்பதில் திரு. வன்னியசிங்கம் காட்டிய அக்கறையை எமக்குத்



தமிழ்ப் பெண்மையின் திருவுருவாகத் திகழும் கோமதி வன்னியசிங்கம்

தெளிவுற எடுத்துக் காட்டுகிறது. அவர் இறப்பதற்கு சில காலத்திற்கு முன் திருமலையைப் பாதுகாக்க ஒரு கூட்டு நிறுவனத்தை நிறுவி தொழில் வசதிகளைத் தமிழ்

சில பட்டதாரிகள் போல் புத்தகப் பூச்சியாகவோ, பல வழக்கறிஞர்போல் வழக்கு மன்றத்திலேயே தன் காலத்தையோ அவர் செலவழிக்கவில்லை. மாருகத் தன் மக்களுக்குப் பணியாற்றுவதை தன் முதற் கடமையாகக் கொண்டிருந்தார்.

### ஈழவேந்தன்

தமிழ் அரசுக் கட்சி போராட்டத்தில் இறங்க வேண்டும் என்று தீர்மானித்தபோது முதன் முதலாகத் தன் நீதிமன்ற வேலைகளைத் துறந்த பெருமை வன்னியசிங்கத்தைச் சாரும். வழக்கமாக ஒரு சாதாரண வேட்டியோடும் ஒரு மேற்சட்டையோடும் தான் காட்சியளிப்பார். வள்ளுவர் மொழிந்த மெய்க்கமைய காட்சிக் கெளியராயும் கடும் சொல் அற்றவராயும் அவர் விளங்கினர். அவர் மறைந்தபோது கண்ணீரும் கம்பலையுமாகத் திரண்டிருந்த மக்கட் கூட்டம், மக்கள் உள்ளத்தில் அவர் பெற்றிருந்த ஒப்பற்ற இடத்தை உலகிற்கு எடுத்து ஓம்பியது.

### மலைநாட்டுத் தமிழரின் நலத்தில் நாட்டம்

திரு. வன்னியசிங்கம் அவர்கள் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரிடத்தில் தனிமதிப்பும் தனிப்பற்றும் கொண்டிருந்தார். அவர்கள் குடியுரிமை, வாக்குரிமை பெற்று வடகிழக்கில் வாழும் ஏனைய தமிழ் மக்களோடு உள்ளம் ஒன்றிவாழ வேண்டும் என்பது அவர் கண்ட கனவு.

மலைநாட்டுத் தமிழ்க் குழந்தைகள் வடகிழக்கில் உள்ள கல்லூரிகளில் பயிலும் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தவர் வன்னியசிங்கம் அவர்களே. "இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டு, அதன் வருவாயின் நூற்றிற்கு அறுபது சதவீதத்தை நல்கும் தமிழ்த் தொழிலாளர்களது குடியுரிமை, வாக்குரிமைக்குப் போராடி அவர்களது அடிமை நிலையைப் போக்குவது தேசத்துரோகமென்ருல் அந்தப் பட்டத்தையும் மகிழ்ச்சியோடு ஏற்று, போர்க்குரல் எழுப்புவேன்" என்று அவர் மொழிந்த வீரவுரை அவரின் உள்ளக் கிடக்கையை இனிது எடுத்துக் காட்டுகிறது.

மொழி, இனம் கடந்த நிலையில் தொழிலாளர் நலம் கருதி யாம் பணி புரிகிருேம் என்று கூறும் இலங்கை இடதுசாரிக் கட்சிகள் ஏன் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளிகளுக்காகப் போராட்டம் நடாத்தவில்லை என்று அன்று வன்னியசிங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு இது வரை இடதுசாரி இயக்கம் தக்க பதில் கூறவில்லை. மாருக அவர்களின் வெளிவேடம் கலையத் தொடங்கி விட்டது.

### தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்பு, எல்லாம் தமிழ் இயக்கம் ஆகிய எம்மை யாம் தூய்மைப் படுத்தும் இயக்கங்களில் திரு. வன்னியசிங்கம் அவர்கள் காட்டிய அக்கறை எல்லையற்றது. வைதிக நெறி

தழுவிய தடித்த சாதி உணர்ச்சியுடைய குடும்பத்தில் தோன்றிய வன்னியசிங்கம் அவர்கள் தாழ்ந்த சாதி என்று கருதப்பட்ட எல்லோரையும் தனது உடன் பிறந்தோராகக் கருதி கோயில்களில் வழிபாடு செய்யவும், தேநீர்க் கடைகளில் எல்லோருடனும் சமமாக விருந்து தேநீர் அருந்துகின்ற உரிமையையும் வழங்கியவர் எம் வன்னியர். தாழ்ந்த வகுப்பினர் என்று கருதப்பட்டோருடன் உடன் இருந்து உணவருந்தி உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதி வெறிக்கு முற்றுப்புள்ளியிட்டவரும் வன்னியசிங்கம் அவர்களே. அவரின் புரட்சி



கட்டுரையாசிரியர்

வெறும் சொல்லோடு நில்லாது செயலில் மலர்ந்தது.

### எல்லாம் தமிழ் இயக்கம்

எல்லாம் தமிழிற் செய்தே எம் வாழ்வாம் தமிழைக் காக்கத் துடித்த வன்னியசிங்கம் அவர்கள் தன் அலு

பொருந்தும். அவரின் பேச்சில் மக்களை உணர்ச்சிவயப்படுத்தும் அடுக்குமொழியையோ சொல் அழகையோ காண முடியாது மாருக அவரின் வளம் செறிந்த மூளையில் பட்டுத்தெறித்த சிந்தனைக் கருத்துக்களையே நிறையக் காணலாம். அவரின் பேச்சில் ஏற்ற இடங்களில் இலக்கிய மேற்கோள்கள் குறிப்பாக திருக்குறள், தேவாரம் முதலிய நூல்களில் இருந்து எடுத்தாளப்படும் கருத்துக்கள் நிறைய இடம்பெறும். இவற்றைவிட மக்களின் உள்ளத்தைத் தொடும்முறையில் பழமொழிகள், உவமைகள், உவமானங்களை நகைச் சுவையோடு கிண்டலும் கலந்து அவர் பேசும்போது மக்கள் சுவைத்து மகிழும் காட்சி ஒரு தனிக் காட்சி.

'எனக்கு வன்னியசிங்கத்தின் பேச்சுக்கள் மிகப்பிடிக்கும். காரணம் அவரின் ஆழ்ந்த தமிழ் அறிவை அவை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக மக்கள் எழுப்பும் ஐயங்களுக்கும் மாற்ருர் விடுக்கும் சவால்களுக்கும் அவர் கொடுக்கும் பதில் அவரின் நுண் அறிவை வெளிப்படுத்துகிற' தென்று அடிக்கடி தமிழ் அரசுத் தந்தை கூறி மகிழ்வது உண்டு. உண்மையில் கேள்வி-பதிலை ஒருகலையாக்கியபெருமை வன்னியருக்குரியது.

பொது மேடைகளில் இப்படித் திகழ்ந்த வன்னியசிங்கம் அவர்கள் பாராளுமன்ற சட்ட நுணுக்கங்களை நன்குணர்ந்து புள்ளி விபரங்களுடன் தமிழ் உரிமைக்காக வாதிட்ட திறனையும் யாம் எளிதில் மறக்கமுடியாது. அவரின் உரைகளின் உயர்வை பாராளுமன்ற குறிப்பேடுகள் (Hansards) பறைசாற்றி நிற்கின்றன.

### வன்னியருக்கு வாய்த்த வாழ்க்கைத் துணைவி

திரு. வன்னிய சிங்கத்தின் வாழ்வு பல துறைகளில் வளம்பெற்று விளங்கியதற்கு காரணங்கள் பல. ஆனல் அவற்றுள் குறிப்பிடத்தக்கது அவருக்கு வாய்த்த வாழ்க்கைத் துணைவி.

## கேள்வி பதிலைக்கலையாக வளர்த்த பெரியார்

வர் பிரிந்தார். புற உடல் மறையும்வரை தொண்டு, தொண்டென தொண்டையே நினைந்து, தொண்டையே பேசி, தொண்டையே செய்து வாழ்ந்த பெருந்தகையை, தியாக மூர்த்தியை இழந்து விட்டோம்! இவரின் கூற்று வெறும் புகழுரை இல்லை என்பதை வன்னியரின் வாழ்வை ஊன்றிக் கவனிப்போர் உணர்வார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் அருள் மொழி, உழைத்து உழைத்து உருக்குலைந்த வன்னியர் வாழ்விற்கு முற்றும் பொருந்தும்.

### தாயகப் பாதுகாப்பு

பதவிக்குளம் பறிபோகிறது. பாவற்குளம் பறிபோகிறது. திருமலைக்கு பெருந்திங்கு ஏற்படுகிறது. மூதூரை முற்றுகையிடுகிருர்கள். வவுனியாவின் எல்லையிலே எதிரிகளின் எண்ணிக்கை பெருகுகிறது என்று பலர் சிங்களக் குடியேற்றத்தினுல் எம் வாழ்விடத்திற்கு ஏற்படும் பேர் இடர்களை அழகு தமிழிலே, அடுக்கு மொழியிலே, மேடையிலே முழங்குவர். ஆனல் எம் வன்னியசிங்கம் அவர்கள் வெறும் மேடைப்பேச்சோடு நில்லாது பதவிக்குளம், பாவற்குளம், முதலிக்குளம் என்று ஓடோடி எங்கெங்கு சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் அவற்றைத் தடுத்து நிறுத்தி எம் தமிழரைக் குடியேற்றி எம்தாயகத்தைக் காப்பாற்றினுர். இதனுல்தான் வாழ்விடத்தைக் காத்து, வண்டமிழை வாழ்வித்த, வன்னியசிங்கத்தை

இளைஞர்களுக்கு ஏற்படுத்த முயன்ருர். இத்துறையில் அவர் வெற்றிகாணு முன் அவரைக் காலன் கவர்ந்து சென்றது தமிழ் இனத்தின் சாபக்கேடு என்றே கூற வேண்டும்.

### மக்கள் உள்ளத்தோடு ஒன்றிய உள்ளம்

திரு. வன்னியசிங்கம்அவர்கள் ஒரு பட்டதாரியாகவும் வழக்கறிஞராகவும் விளங்கியபோதும் தன் நாட்டுப்புற (கிராம) வாழ்க்கையை துறக்கவில்லை. அவர் கொல்லங்கலட்டி என்ற சிற்றூரில் பிறந்து கிராமச் சூழ்நிலையிலேயே வளர்ந்து பின் கோப்பாய்த் தொகுதியின் தெரிவையாளராக (பிரதிநிதியாகத்) திகழ்ந்தார். இதனுல் அவர் கிராமப்புற மக்களின் வாழை, புகையிலை, வெங்காயம், கமம் முதலிய தொழில்களின் தன்மையை நன்கு உணர்ந்திருந்தார். அத்தோடு வெவ்வேறு கிராமங்களின் மண்ணின் தன்மை என்ன வென்ன பயிர்ச் செய்கைகளுக்கு உதவும் என்பதையும் தெளிவுற அறிந்திருந்தார். நாட்டுப்புற மக்களின் உள்ளத்தோடு அவர் உள்ளம் ஒன்றியிருந்ததால், அவர்களின் பிரச்சினைகளை ஏனைய பிரதிநிதிகளிலும் பார்க்கத் திறம்படத் தீர்க்கும் ஆற்றலை அவர் பெற முடிந்தது.

## சுதந்திர ஈழம் பற்றியும் எச்சரித்துள்ளார்

வல்கள் அனைத்தையும் தமிழிலேயே செய்தார். 1958ல் வீட்டிற் காவலில் வைக்கப்பட்ட வன்னியர் நிரந்தர செயலாளரிடம் தனக்குத் தயிர் வேண்டுமென்று தமிழில் எழுதிப்பெற்றவர். இவரிடம் கையொப்பம் பெற வரும் பலர் ஆங்கிலத்திலேயே விண்ணப்பத் தாள்களை நிரப்பி வருவது வழக்கம். இவர் அவர்களை 'திருப்பி அனுப்பித் தமிழில் நிரப்பி வாருங்கள் கையெழுத்திடுகிறேன்' என்று உறுதியாகக் கூறிவிடுவார். இவரின் இச் செய்கை சிலரைக் கோபம் அடையச் செய்தது உண்மை. ஆனல் பலருக்குத் தமிழ் உணர்ச்சியை ஊட்டித் தன்மானத்துடன் வாழச் செய்தது.

(இக் கட்டுரையாளர் வெளியிட்ட தமிழ் இயக்கக் கடித உறைகளை ஆயிரக் கணக்கில் வாங்கி எம் முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த இப் பெருமகனை இன்று நினைக்கும் போதும் கண்களில் நீர்பெருகுகிறது.)

### வன்னியரின் பேச்சுவன்மை

வன்னியசிங்கம் அவர்களை மிகச் சிறந்த சொற்பொழிவாளர் என்று கூறமுடியாது. ஆனல் ஆழ்ந்த கருத்துக்களை அள்ளி வழங்கும் பொருட் பொழிவாளர் என்று கூறுவது

பல தமிழ்த் தலைவர்களுக்கு கிடையாத இந்த அரும் பேற்றை திரு. வன்னியசிங்கம் பெற்றிருந்தார்.

கட்டிய கணவரின் கருத்தை ஏற்று அவரின் பணிகள் யாவிலும் பங்குகொண்டு துணைபுரியாவிடிலும் உபத்திரவம் செய்யாதுவிட்டால் அதுவே பெரும் ஆறுதலாய் இருக்கும். திரு. வன்னியசிங்கம் பல தடவை தன் அன்பு மனைவியையும் பெற்றெடுத்த அரும் குழந்தைகளையும் மறந்து ஊர் ஊராகத் திரிந்து தமிழ் இனத்திற்காக உழைத்தார். இந்த வேளைகளிலெல்லாம் மறந்தும் தன் கணவர் உள்ளம்புண்படாது அவர் பணியினை ஊக்குவித்த பெருமை அவரின் மனைவி கோமதி வன்னியசிங்கத்திற்கு உரியது.

1958ல் இனக்கலவரத்தை யடுத்து பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்த திரு. வன்னியசிங்கம் தன்வீட்டிலிருந்து புறப்படும்போது யானும் அவர் வீட்டில் நின்றேன். அவர் புறப்படுமுன் தன் மனைவியைப் பார்த்து 'யான் இனித் திரும்பி வருவேனே தெரியாது' என்ருர். உடனே அவரின் மனைவி இரக்க உணர்ச்சியுடன் ஏன் அப்படிக் கூறுகிறீர்கள் என்று வினவினுர். அவர் தனக்கு இயல்பாய் அமைந்த புன்சிரிப்புடன் என்னை அரசாங்கம் சிறையில் அடைப்பது உறுதியென்ருர். உடனே கோமதி அவர்கள் உதட்டில் புன் முறுவல் பூத்து அதற்

(13-ம் பக்கம் பார்க்க)

## இடதுசாரிகளிடம் அன்று கேட்ட கேள்விக்கு இன்று வரை பதில் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்துக்குத் தனி நாடு இல்லாததுதான் நமது நலிவுக்குக் காரணம்

## அண்ணா பாரதத்தின் மற்றொரு ஜின்னாவா?

மகாத்மா என்றால் அது உலகப் பெரியார் உத்தமர் காந்தியைத்தான் குறிக்கும்.

பெரியார் என்றால் ஈரோட்டுவீரர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரைத்தான் குறிக்கும்.

அறிஞர் என்றால் அது காஞ்சிதந்த சிந்தனைச் செம்மல் அண்ணாவைத்தான் குறிக்கும்.

பலரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதினால் போதும். சிலரைப்பற்றி ஒரு புத்தகம் எழுதினால் போதும். அறிஞர் அண்ணாவைப்பற்றி எழுத வேண்டுமென்றால் பல புத்தகங்கள் எழுத வேண்டும்.

### சகல கலா வல்லவன்

சிறந்த எழுத்தாளராக இருக்கலாம். ஆனால் அவர் சிறந்தபேச்சாளராக இருக்க மாட்டார். சிறு கதை எழுத வரும். ஆனால் நாவல் எழுத மாட்டார். நாவல் எழுதுவார். ஆனால் நாடகம் எழுத மாட்டார். நாடகம் தீட்டுவார். ஆனால் திரைகதை—வசனம் எழுத வராது.

அறிஞர் அண்ணாவை பொறுத்தமட்டும் அவருக்கு இவையெல்லாம் கைவந்த கலைகள். அதுமட்டுமல்ல இந்த ஒவ்வொரு துறையிலும் அண்ணாவின் முத்திரையைக் காணலாம்.

அண்ணா இன்றைய தமிழ் நாட்டின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவரல்ல. தலைசிறந்த பேச்சாளர் அவர் ஒருவரேதான். நுழைவுக் கட்டணம் பத்து ரூபா வைத்தாலும், மண்டபம் நிரம்பி வழியும் அண்ணாவின் சொற்பொழிவைசெவிமடுக்க. பல ஆண்டுகளுக்குமுன் அவர் பேசிய 'ஏ தாழ்ந்த தமிழகமே' —மேடைப் பேச்சுக்கு இன்றும் ஒரு இலக்கணம்.

'ரொட்டித்துண்டு' அண்ணா எழுதிக் குவித்த பல சிறு கதைகளில் ஒன்று. ஆனால் இந்த ஒரு சிறுகதையே போதும் அவர் சிறந்த சிறு கதைஎழுத்தாளர் என்பதை எடுத்துக்காட்ட.

'ரங்கோன் ராதா', 'பார்வதி பி. ஏ' அண்ணா தீட்டிய சமூக நாவல்கள். முன்னது திரைப்படமாகவும் வெளிவந்தது. சந்திரமோகன், வேலைக்காரி, ஓர் இரவு—அண்ணாவின் தலைசிறந்த நாடகங்கள். ஓர் இரவைப் பார்த்துவிட்டுத்தான் மறைந்த 'கல்கி' சொன்னார்: 'தமிழ் நாட்டு பேனட் சோ அண்ணா' வென்று.

### புதிய சகாப்தத்தை உருவாக்கியவர்

தமிழ் மொழிக்கு இனிமையை கூட்டியவர்களென்றும், வீரத்தை ஊட்டியவர்கள் என்றும் பலர் பலவாறு போற்றப்படுகிறார்கள். ஆனால் அண்ணாவின் எழுத்தையும் பேச்சையும் படித்தவர்கள் அண்ணா ஒருவரேதான் தமிழில் இனிமையோடும், வீரத்தோடும் எழுதமுடியும், பேசமுடியும் என்று முதல் முதல் நிரூபித்துக்காட்டியவர் என்பர்.

ஆனால் அண்ணா அவர்கள் எழுத்துத்துறையில்—பேச்சுத்துறையில் ஈட்டிய வெற்றியைவிட, அவரை வருங்காலச் சந்ததி பெருமையுடன் நினைவில் வைத்துப் போற்றும் வண்ணம் வேறொரு துறையில் அவரது பணி விளங்குகிறது. அது தான் திராவிட—தமிழின மறுமலர்ச்சிக்கு வித்திட்டு ஒரு புதிய சகாப்தத்தைத் தொடக்கிவைத்த சிறப்பு.

தமிழ் இனம் தனது வரலாறு மறந்து, புகழ் இழந்து, இலக்கிய—இலக்கணச் சிறப்பு மறந்து, நாகரிகம் இழந்து, எல்லாவற்றிற்கும் மேலாகப் பிறந்த பொன் நாட்டை மறந்து, வேற்று மொழி நாகரிக மாயையில் சிக்கிச் சிரழிந்து கிடந்த வேளையில், தமிழினத்தின் உயர்வையும்— சிறப்பையும் மீண்டும் உலகுக்கு உணர்த்திய பெருமை அண்ணா உடையது.

உடையால், உணவால், பழக்க வழக்கத்தால், பேசுகின்ற மொழியால் திராவிட இனம் தனித்தன்மை வாய்ந்ததென்றும், அந்த இனத்துக்குரிய நிலப்பரப்பு திராவிடம் என்றும், அந்த நாடு சுதந்திர நாடாக உலகில் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்றும் முதலில் குரலெழுப்பியவர் அண்ணாதான்.

1944ம் ஆண்டு சேலத்தில் கூடிய ஜஸ்டிஸ் கட்சிமாநாட்டில் தான், கட்சியின் பெயரை திராவிடக்கழகம் என மாற்றுவதென அண்ணாவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் பெரியாரால் ஆதரிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஜஸ்டிஸ் கட்சியின் சேலம் மாநாடும், அண்ணாவின் திராவிடர் கழக தீர்மானமும் தென்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒருமுக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

### தி. மு. கழகம்

1949ல் திராவிட கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்த பின் திராவிடநாட்டுப் பிரிவினை கடுமையாக வற்புறுத்தப்பட்டு வந்தது. 1957, 1962ம் ஆண்டுகளில் நடந்தபொதுத் தேர்தல்களில் அதை மக்கள் முன் ஒரு பிரச்சினையாக வைத்து கழகம் போட்டியிட்டது. 1962ம் ஆண்டு தேர்தலில்கழகம் 142 இடங்களில் போட்டியிட்டு 50 இடங்களை கைப்பற்றியது. கழகத்துக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 34 இலட்சம். 1957ல் கழகம் 15 தொகுதிகளைமட்டும் கைப்பற்றியிருந்தது.



அறிஞர் அண்ணா

இந்தியா ஒரு நாடல்ல. அது ஒரு துணைக் கண்டம். வெள்ளையர் ஆட்சி ஏற்படு முன் இன்றைய இந்தியா ஒரே ஆட்சியின் கீழ் ஒரு பொழுதும் இருந்ததில்லை.

### தாமரைமணாளன்

எனவே வெவ்வேறு இன மக்களை செயற்கையாக வெள்ளையர் ஒட்ட வைத்த பொழுது பிறந்தது தான் இந்தியா.

தென்நாடு திராவிடநாடு வடநாட்டு அரசுகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது கிடையாது. அலெக்சாந்தர் சரி, அக்பர் சரி, அசோகன் சரி யாருமே தென்நாட்டை வெற்றிகொண்டது கிடையாது.

1947ல் அரசியல் பரிமாற்றம் நடந்தபொழுது, அரசியல் ஆதிக்கம் வடநாட்டார் கைகளுக்கு மாறிவிட்டது. அதனால் தென்நாடு அடிமைப்பட்டு விட்டது.

எனவே தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் இந் நான்குமாநிலங்களும்மொழி வழி பிரிந்து இனவழி ஒன்று கூடி சுதந்திர திராவிட கூட்டாட்சிக் குடியரசாக மலர வேண்டும்.

இவையே திராவிட நாட்டுப் பிரிவினைக் கோட்பாட்டுக்கு அண்ணாவால் முன் வைக்கப்படும் வாதம்.

### இன உணர்வுக்கு வித்திட்டவர்

இந்த ஆண்டுதான் இந்திய அரசால் கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்ட பிரிவினை தடை சட்ட மசோதாவினால் கழகம் தடைசெய்யப்படுவதை தடுக்கு முகமாக, கழகம்தனது அமைப்பு விதிகளைத் திருத்திப் பிரிவினை கோரும் விதிகளை நீக்கியிருக்கிறது. இது முற்றிலும் அரசியல் இராஜதந்திரத்தை முன்னிட்டு செய்த ஏற்பாடு என்பது தெளிவு. சூழ்நிலை மாறும் பொழுது மீண்டும் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை கழகம் வற்புறுத்தலாம்.

எது [illegible] சுதந்திர திராவிடம் காண வேண்டும் என்ற எண்ண எழுச்சி, மக்கள் இதயங்களில் கடந்தஇருபது ஆண்டுகளாக மெல்ல மெல்ல, ஆனால் நிச்சயமாக, முளைவிட்டு இன்று 34 இலட்சம் மக்கள் ஆதரிக்கும் இலட்சியமாகிவிட்டதை மறைப்பதற்கில்லை.

எவ்வளவோ எதிர்ப்புக்கு மத்தியிலும், தூற்றலுக்கு மத்தியிலும்இந்தத்திராவிட நாட்டுப் பிரிவினைக் கோட்பாட்டுக்கு உயிரும், ஊட்டமும், ஆக்கமும் அளித்து வளர்த்த பெருமை அண்ணாவைத்தான் சாரும். அவரது நேரம், நினைப்பு, அறிவு, ஆற்றல், உழைப்பு இவையாவும் இந்தப் பணிக்கு முழுக்க முழுக்க கடந்த முப்பது ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஏன், அவர் தனது வாழ்க்கையையே முற்றாக இந்த இலட்சியத்துக்கு அர்ப்பணித்து விட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

அண்ணா ஊட்டி வளர்த்து விட்ட இந்த இலட்சியப் பற்றின் பிரதிபலிப்புத்தான் அவர்பின் இன்று நிற்கும் இலட்சோபலட்சம் தம்பிமார்களின் அணிவகுப்பு. அவர்களின் உள்ளங்களில் மட்டுமல்ல, நான்குகோடி தமிழர்களது உள்ளங்களிலும் இன அடிப்படையில் கொற்றமும் கோலும், கொடியும் முடியும் மலர வேண்டுமென்ற எண்ணம்வேரூன்றிவிட்டது. ஒரு நாடின்றி அரசியல் அனாதைகளாக நாட்டுக்கு நாடு அனாதைகளாக அலைந்த யூத இனம் உலகத்தின் உள்ளங்கையளவு பூமிப் பிரதேசத்தில் சுதந்திரமக்களாக கொற்றம் நிறுவி அரசோச்சமுடியுமென்றால் பண்டு ஆண்ட இனம் மீண்டும் கோலோச்ச எண்ணுவது விந்தையல்லவே.

### அண்ணா இன்னொரு ஜின்னாவா?

பர்மாவில், இலங்கையில், ஆபிரிக்காவில் மற்றும் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் உதைபட்டும், வதைபட்டும் கேவலமாக நடாத்தப்படுகிறார்களென்றால் அதற்கு அடிப்படைக் காரணம் தமிழினத்துக்கு உலகின் எந்த மூலையிலும் சொந்தமாக சுதந்திரநாடொன்று இல்லையென்பதே. இருந்திருந்தால், அந்தத் தமிழநாடு அப்படிப்பட்ட நாடற்ற தமிழர் சார்பாக உலகமன்றங்களில் நிச்சயமாக குரல் எழுப்பி இருக்கும்.

இந்தக்குறையைத் தீர்த்துவைப்பதுதான் அண்ணாவின் திராவிடநாட்டுக் கோட்பாடு.

திராவிடம் தீரா 'விடம்' என்று தலையங்கம் தீட்டிய கல்கி ஏடு இன்று திராவிடம் சார்பில் குரலெழுப்புகிறது. 'ஸ்ரீமான் அண்ணாத்துரை' என்று அழைத்த இராஜாஜி, 'அறிஞர் அண்ணா' என்று செல்லமாக இன்று அழைக்கிறார். இது அண்ணாவுக்கு அவரது வாழ்வில் கிடைத்த மாபெரும் வெற்றி.

'எமது வாழ்நாளிலேயே சுதந்திர திராவிடம் பிரிய வேண்டும். அறிஞர் அண்ணாவை இதன் முதல் ஜனாதிபதியாக்கி மகிழவேண்டும்' என்று அடிக்கடி சொல்லி வருகிறார் கலைஞர் கருணாநிதி.

அண்ணா பாரதத்தின் இன்னொரு ஜின்னாவா? என்பதை நாமும் காத்திருந்து பார்ப்போம்.

### அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தனிப் பெருந் தலைவரும் தென்னாட்டு மேதையுமாகிய அறிஞர் அண்ணா அவர்களின் 56-வது பிறந்த நாளையொட்டி இத் திங்கள் 20-ம்நாள்கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். யாழ் கலை அரங்கச் செயலாளர் திரு. வேலணை வீரசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ். கலை அரங்கம், எம். ஜி. ஆர். மன்றம், கதிரவன் கலைக்கூடம் ஆகியவற்றின் ஆதரவில் நடைபெறும் இப் பெரியாரின் பிறந்த நாள் விழாவில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் பி. ஏ, மட்டுநகர் முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை, சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம், பேராசிரியர் கா. பொ. இரத்தினம், ஊடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம், அன்பர் பூட்டிதாசன், செல்வி தமிமா ஏ. பசீர், திரு. ஏ. என். மணவைத்தம்பி, குறட் செல்வன் குமாரசாமி, திரு. கலையன்பன், திரு. கம்பனை தாசன் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள்.

நடிகவேள் வ[illegible] மணி குழுவினரின் [illegible] விருந்தும் இடம்பெறும்.

### புதிய தலைவர்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கிளிநொச்சிக் கிளைத் தலைவராக திரு. சிவ. கந்தையா ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சிங்களக் காசோலையை ஏற்க மறுத்த எழுத்தாளர்

## வானொலிக் கணக்காளருக்கு திருப்பியனுப்பினார்

இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட நாடகத்துக்கான சன்மானத் தொகையின் காசோலை சிங்களமொழியிலிருந்ததை ஆட்சேபித்து, சங்குவேலி தெற்கைச்சேர்ந்த பொ. சண்முகநாதன் என்னும் வானொலி நாடக எழுத்தாளர் அக் காசோலையைத் திருப்பியனுப்பியுள்ளார்.

இலங்கை வானொலிப் பிரதம கணக்காளரிடமிருந்து அனுப்பப்பட்ட காசோலையையும் இணைப்புக் கடிதத்தையும் ஏற்க மறுத்து 'தனக்குப் புரியக்கூடியமொழியில் அவற்றை அனுப்பிவைக்கும்படி' திரு. சண்முகநாதன் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை வானொலிப் பிரதம கணக்காளருக்கு திரு. சண்முகநாதன் எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:-

இத்துடன் தாங்கள் அனுப்பிய காசோலையையும் கடிதத்தையும் திருப்பி அனுப்பியிருக்கிறேன். காசோலையிலும் சரி, கடிதத்திலும் சரி என்ன எழுதியிருக்கிறது என்று புரியவில்லை. இதுதானா உங்கள் அரசாங்கம் தமிழுக்குக் கொடுக்கும் உரிமை? யாராவது சூடு சொரணையற்றவர்கள் வேண்டுமானால் இந்த அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கையை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தன்மானமுள்ள தமிழன் இதைக் கடைசிவரை ஏற்றுக்கொள்ளமாட்டான். நானும் ஒரு தன்மானமுள்ள தமிழனதலால் இந்தக் காசோலையையும் கடிதத்தையும் திருப்பி அனுப்பியிருக்கிறேன்.

நான் இந்தப் பணத்தைப் பெற்றுத்தானாக வேண்டுமென்றால் எனக்குப் புரியக் கூடிய மொழியில் அதை எழுதி அனுப்பவும்.

## தேவை

பின் வரும் ஊர்களில் சுதந்திரன் விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

நம்பலகாமம்.
கல்லாறு
பேராதனை

நிர்வாகி,
சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளக் கடத்தல் முயற்சியில்

# மன்னார் எம். பி. அழகக்கோனின் மகன்?

## பொலீசாருக்குப் பயந்து தலைமறைவாகிறார்

மன்னார் எம்- பி. திரு. அழகக்கோனின் மகன் திரு. தேவன் அழகக்கோனை பொலீசார் துரத்திச் சென்றனர். அவர்களிடம் பிடிபடாமல் தப்பித்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினார். வல்வெட்டித்துறையிலிருந்து தங்கம் கடத்துவதற்கு இவர் முயற்சிக்கும் போதுதான் பொலீசார் இவரைத் துரத்தினர்.

மூலை முடுக்'குகளிலெல்லாம் ஓடி ஒளிந்து இறுதியாக ஒரு பெரிய வீட்டின் வாசலை அடைந்ததும், சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வீட்டுள் நுழைந்தார். அவ்வீட்டு வாசலில் மேஜர் சி. வரதராஜன் ஓ. பி.இ. என்ற எழுத்துக்கள் தென்படுகின்றன.

நாமும் உள்ளே சென்று என்ன நடைபெறுகிறது என்பதைக் கவனிக்கிறோம்.

வரதராஜனின் டிரைவர் ஈஸ்வரன் மோட்டார் சில்லுக்குக் காற்றடித்துக் கொண்டிருக்கிறான். இதற்கிடையில் அவ்வீட்டு வேலைக்காரி அங்கே வரவே அவளின் அழகைப் பருக ஆரம்பித்த ஈஸ்வரன் சில்லிலிருந்து காற்றடிக்கும் கருவியின் தொடர்பு விட்டதைக் கூடக் கவனிக்க முடியவில்லை.

'என்னைப்பா ஈஸ்வர் முடிந்ததா?' என்று வரதராஜன் கேட்கிறார்.

'முடியுதுங்க'.........என்று கூறிவிட்டு சில்லில் கருவியை மீண்டும் பொருத்துகிறான்.

வரதராஜன்: 'நீ முடிக்கிறதுக்குள்ளே நான் முடிஞ்சிடுவன்போலிருக்கே?

ஈஸ்வரன்: இல்லீங்க நீங்க முடியிறதுக்குள்ள நான் முடிச்சிடுவன்.

விபத்து......

சில்லுக்குக் காற்று நிரம்பியதும் பூங்கோதையும் ஈஸ்வரனும் வண்டிக்குள் ஏற எத்தனிக்கின்றனர். பொலீசாரால் துரத்தப்பட்டு வீட்டுக்குள்ளே சென்று ஒழிந்துகொண்ட தேவன் அழகக்கோன் அவ்வேளை ஓடி வந்து மோட்டாரில் ஏறிக்கொண்டு வண்டியை எடுக்கவும், தெருவிலிருந்து ஒரு வாடகைக்கார் உள்ளே நுழைந்து அழகக்கோனால் ஓட்டப்படும் வண்டியில் முட்டவும் சரியாவிருந்தது.

வாடகைக்கார் முட்டியதும் அழகக்கோன் குதித்தெழுந்து 'யூ டாம் பூள்' என்று முறைத்தார்.

வாடகைக்கார் சாரதியான அசோக், 'சார்' என்று கூற, அழகக்கோன் அவனை நெருங்கி,'என்னடா முறைக்கிறாய்? வண்டியைக் கொண்டு வந்துமோதிவிட்டு முறைப்பு வேறு?'

அசோக்: சார் உங்கமேல தப்பை வச்சிட்டு பழியை என்மேல சுமத்துகிறது அவ்வளவு நல்லாயில்ல' என்று கூறியதும், அழகக்கோன் அசோக்கின் கன்னங்களில் அறைந்துவிடுகிறான்.




வாடகைக்காருள் இருந்து வெளிவந்த அழகும் இளமையும் போட்டிபோடும் பாவையான பிரேமா தடுக்கிறாள். அப்போது அழகக்கோன்: 'பார் பிரேமா, தவறையும் செய்துவிட்டு வாய் வேறு காட்டுறான். இவனுகளையெல்லாம் சும்மாவிடக் கூடாது.'

பிரேமா! நல்லாயிருக்கு நியாயம். கண்ணை மூடிக்கிட்டு காரை ஓட்டினால் மத்தவங்களா பொறுப்பு?

இப்படி வாக்குவாதங்கள் தொடரும் போது உள்ளே இருந்து வரதராஜன் ஓடி வந்து ரகளையை ஒருவாறு தீர்த்து வைக்கிறார்.

'ஓகே' என்ற ஒலி நமது பின்புறத்திலிருந்து எழுகிறது. கோபமும் தாபமும் வெடிக்க ஒருவரை ஒருவர் முறைத்துக்கொண்டு நின்றவர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் தழுவி சினேகிதம் கொண்டாட ஆரம்பித்த பின்னர்தான் நமக்கும் நிலைமை புரிகிறது.

நுகேகொடையில் ஒரு பங்களா முன்புறத்தில் இக்காட்சிகளைத் தங்கமணி பிக்சர்சார் தயாரிக்கும் தமிழ் படமான 'டாக்சி டிரைவரு'க்காக டைரக்டர் சுண்டிக்குளி சோமசேகரனும், ஒளிப்பதிவாளர் எம். ஏ. கபூரும் படமாக்கினார்கள்.

கள்ளக்கடத்தல்கார சங்கராகத் தோன்றுபவர் மன்னார் எம். பி. அழகக்கோன் அவர்களின் மகன் தேவன் அழகக்கோன். அவருடைய சகோதரரான திரு. சத்தியவான் அழகக்கோன் இன்ஸ்பெக்டராக வருகிறார்.

வரதராஜராக வருபவர் 'சாணா' என்று இரசிகர்களால் பாராட்டப்படுபவரான திரு. எஸ். சண்முகநாதன். அவருடைய மகள் பிரேமாவாக மாலதிசொக்கநாதனும், அசோகனாக இராஜேஸ்வரனும், ஈஸ்வரனாக பாலகிருஷ்ணனும், பூங்கோதையாக இந்திரா இராசையாவும், கணக்கப்பிள்ளையாக ரொசைரோ பீரிசும் தோன்றுகின்றனர்.

பொங்கல் தினத்தன்று சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இப்படம் திரையிடப்படும்.

கே. கே. அந்தோனி, கௌரீஸ்வரி ஆகியோர் பாடிய இரு பாடல்களும் ஒலிப்பதிவாகியுள்ளன.



ஜெமினி தயாரித்துள்ள 'குங்கத்' என்ற ஹிந்திச் சித்திரம் இப்பொழுது கொழும்பு கெயிட்டியில் காண்பிக்கப்படுகிறது. ஆஷாபெரக், பினாராய், பிரதிப்குமார், பாரத்பூஷன், ரெஹ்மான், ஹெலன் முதலியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

## 7 பரிசுகள் பெற்ற பிமல்ராய் அளிக்கும் 'சுஜாதா'

பழமை ஆசார அநுட்டானங்களில் வழுவாத வைதிகப் பணக்காரரான சௌத்திரிக்கு ரமா என்ற ஒரே மகள். அத்துடன் சந்தர்ப்பவசத்தால் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த அனாதை சுஜாதா வந்து சேருகிறாள். கள்ளமில்லா உள்ளமுள்ள பிள்ளைப் பருவத்தின்போது ஏற்பட்ட ஆறாப்புண்களை உளத்தில் தேக்கிக்கொண்டே சுஜாதாவும் ரமாவும் அழகிய இளமொட்டுகளாக மலருகிறார்கள்.

எந்த வைதிகம் சுஜாதாவை வெறுத்து ஒதுக்க முனைகிறதோ, அதே வைதிகத்தின் வாரிசான அதிர் என்ற இளைஞனின் உள்ளத்தில் உறைந்துவிடுகிறாள் சுஜாதா. வைதிகமும் மூடக்கொள்கைகளும், அண்ணல் காந்தியின் அரும் போதனைகளிலும், புத்தனின் புனித உபதேசங்களின் முன்னும் செல்லாக்காசாகி விடுகின்றன. சுஜாதாவாக நூத்தானும் அதிராக சுனில்தத்தும் தோன்றுகின்றனர்.

பிரசித்திபெற்ற தயாரிப்பாளரும், இயக்குநருமான பிமல்ராய் தயாரித்தளித்துள்ள சித்திரமான சுஜாதாவை ஐந்துஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில்பார்த்தோம். இருப்பினும் பல ஆண்டுகள் உருண்டபின்னரும் இன்று மலர்ந்த மலர்போல சுஜாதா புது மணம் பரப்புகிறாள்.

எஸ். டி. பர்மன் அமைத்திருக்கும் இன்னிசை, இயக்குநர் ராயின் கருத்துக்குமட்டும் எழிலாக நின்றுவிடாமல், அழகிய மலர்த் தோட்டத்தின் வண்ணப் பூக்களையும், வளையும் கொடிகளையும், வளரும் செடிகளையும் ஆட்டம்போடவைப்பதைப் பார்த்து வியப்புறாதார் இருக்கமுடியாது. அவை இயற்கையோ செயற்கையோ! ஆனால் அது தெவிட்டாத விருந்து.

தொட்டாச் சிணுங்கிச் செடியினை இயக்குநர் ராய், சுஜாதாவின் துவளும் உள்ளத்துக்கு எடுத்துக்காட்டாக்கி விளக்குகிறார். இதே போன்று, கருத்துக்களைக் கொப்பளிக்கும் கற்பனையின் ஊற்றுக் கண்களை, இத்திரைப்படத்தினை உருவாக்க முன்வந்த கலைஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, திறந்துவிட்டுள்ளனர். கடல் மடை திறந்தாற்போல் கருத்துவெள்ளம்பாய்கிறது.

அற்புதமான இக்கலா சிருஷ்டியினை, மறைந்த பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு பார்த்துப் பாராட்டியுள்ளார். இப் படத்துக்கு பலவிதமான வரிச் சலுகைகளும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இப்படத்துக்கு தமாஷா வரியும் கிடையாது.

சிறந்த படம், சிறந்த கதை, நட்டுவாங்கத்தில் முதன்மை, சிறந்த நடிகை (நூத்தான் சமரத்), சிறந்த நடிகர் (சுனில் தத்), சிறந்த படப்பிடிப்பு, சிறந்த தயாரிப்பு ஆகிய துறைகளுக்கான ஏழுபரிசுகளைப்பெற்றதுடன் ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கமும் பெற்றது இப் படம்.இப்பொழுதுபொறளை 'ரிட்ஸ்' திரையில் காண்பிக்கப்படுகிறது.

—நாதன்

### அறிமுகப்படுத்துகிறோம்

இடமின்மையால் இம்முறை அறிமுகப்படுத்துகிறோம் பகுதி இடம்பெறவில்லை. அடுத்த வாரம் முதல் வெளியாகும்.



மிசிசிப்பி ஆற்றின் மீது தோணி மேல் சென்று சூதாடிப் பிழைக்கும் சிமாளுக கிறேகறி பெக், மெஜஸ்டிக் திரையில் காண்பிக்கப்படும் சினிரமாப் படமான '[illegible]' ஆங்கிலப் படத்தில், இப்படிக் காட்சி தருகிறார்.

### நடக்கவிருப்பவை

## பௌர்ணமி கலை விருந்து

யாழ். மாநகரசபை மாதா மாதம் அளிக்கும் பௌர்ணமி தின கலைவிழாவின் 6வது வரிசை 21-9-64 மாலை 7. மணிக்கு திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

செல்வி ஞானம்பிகை முருகேசபிள்ளையின் வயலின் இசை நடைபெறும். குமுக்கா கணபதி ஐயாபிள்ளை கஞ்சிராவும், ரி. பாக்கியநாதன் மிருதங்கமும் வாசிக்கின்றனர் நாவாந்துறை புனித மரியாள் கலைக் கழகத்தினரின் 'அகந்தையின் அழிவு' என்னும் சமூக நாடகமும் இடம்பெறும்.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11;


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாழ்விடத்தையும்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கென்ன எம் இனத்தின் நல்வாழ்விற்குத்தானே சிறை வாழ்வு என்ருர். அப்பொழுது திரு. வன்னியசிங்கத்தின் முகம் மலர்ந்த தன்மையை சொல்லில் அடக்குதல் எளிதல்ல, அன்றும் இன்றும் திருமதி வன்னியசிங்கம் தமிழ்ப் பெண்மையின் திருவுருவாகவே திகழ்கிருர்.

### அரசியற் கோட்பாடு

வன்னியரின்வாழ்வைத் தொகுத்து ஆராயும்போது பல எண்ணங்கள் எம் நெஞ்சில் மோதும். நேரத்திற்கு ஒரு கொள்கை, காலத்திற்கு ஒரு கோலம் என்று வாழும் அரசியல் வாதிகளிடையே நிலையான கொள்கைப்பற்ருேடு கட்சிக் கட்டுக்கோப்பைப் பாதுகாத்து தமிழ் மக்களை ஓர் அணியில் திரட்டி உரிமைக்குரல் எழுப்பிய அவர் பெருமை வரலாற்றில் இடம்பெறுவது உறுதி. திரு. செல்வா அரசியலில் காட்டும் எல்லையற்ற பொறுமையை வன்னியர் முற்ருக ஏற்கவில்லை. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு பொங்கி எழவும் தயங்கக் கூடாது என்பது அவரின் குறிக்கோள்.

வன்னியருக்கு சத்தியாக்கிரகத்தில் நிறைய நம்பிக்கையிருந்தது. ஆனல் வெறிநாய்களுக்கு முன் சத்தியாக்கிரகம் பயன் அளியாது என்பதையும் உணர்ந்தார். வெறி நாய்களின் வெறியை அடக்க வேறு வழிகளை யாம் கையாள வேண்டும் என்பதை அவர் இடைக்கிடை சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இளையாட்சி அரசியல் அமைப்பு ஈழத்திற்கு ஏற்றதென்று வலியுறுத்திய வன்னியசிங்கம் அவர்கள் 'திட்டமிட்டு தமிழரை அழிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமானல் சுதந்திர ஈழம் கேட்கும் நிலை வருமென எச்சரிக்கிறேன்' என்று பல தடவை இடித்துரைத்துள்ளார். மற்றுமோர் இடத்தில் 'இலங்கையில் இனி ஐக்கியம் இருக்க முடியாது. நாங்கள் வேறு நாடுகளுடன் சேரவில்லை. ஆனல் தமிழர்களை நசுக்கி ஒழிக்கும் படலம் தொடருமானல் மற்றநாடுகளின் உதவியை நாட வேண்டிவரும்: உலக மக்களின் ஆதரவுக்கு நாம் வேண்டுகோள் விடுப்போம்' என்று எம் சிந்தனையைப் புதிய வழிகளில் செலுத்தவும் வழி காட்டியுள்ளார்.

### பண்பு நலன்

வன்னியசிங்கம் அவர்கள் கொஞ்சம் முன்கோபக்காரர் அதற்கு அவரின் செங்குருதி அமுக்கமும் (Blood Pressure) ஒரு காரணம். ஆனல் அவரிடம் தோன்றும் கோபம் நிலைத்து நில்லாது தோன்றிய இடம் தெரியாது மறையும் தன்மையுடையது. கொள்கைப் பற்றுள்ளோரை அன்போடு போற்றும் வன்னியசிங்கம் அவர்கள் எம் இனத்துரோகிகளை ஈவு இரக்கமின்றி கண்டிக்கும் இயல்பு படைத்தவர்.

வள்ளுவரின்'சொல்லப்பயன்படுவர் சான்ருேர் கரும்புபோல் கொல்லப்பயன்படும் கீழ்' என்ற கூற்றில் முழு நம்பிக்கை வைத்திருந்தவர் வன்னியசிங்கம் அவர்கள். ஒரு முறை தமிழ் அரசுத் தந்தையவர்களைப் பார்த்து 'ஏன் இப்படி வன்னியசிங்கம் அவர்கள் அரசியல் எதிரிகளை மிக வன்மையாகத் தாக்குகிருர்? ஏன் உங்களைப்போல பொறுமையாக இருந்தால் என்ன?' என்று கேட்டேன். அதற்கு திரு. செல்வநாயகம் அவர்கள் தனக்கே உரிய புன்முறுவலுடன் "எல்லோரும் என்னைப்போல் இருந்து அரசியலை நடாத்த முடியாது. வன்னியசிங்கம் அவர்கள் கையாளு கிற வழிகளும் எமக்குத்தேவை' என்று கூறிப் பின் இந்திய விடுதலை இயக்கத்தை எடுத்துக் காட்டி காந்தி, நேரு, பட்டேல், கையாண்ட வெவ்வேறு வழிகள் பயன் அளித்த தன்மையையும் விளக்கினர்.

வேறு சொற்களில் விளம்பின், வன்னியரின் நேரடித் தாக்குதல் முறையும் எதிரிகளை முறியடித்து எம் இனத்தை உய்விக்க தேவையான வழியாக விளங்கியதை யாம் உணரத்தக்கதாய் இருக்கிறது.

### தொகுப்புரையும் எம் கடனும்

சுருங்கக் கூறின் பாடெல்லாம் தமிழுக்காய் பட்டினைத்த உடல் அவரின் உடல். பரிதவித்த தமிழ் இனத்தின் உள்ளுயிர்த்த மூச்சு அவரின் மூச்சு. நாடெல்லாம் இனிய தமிழ் மொழிந்த நா அவரின் நாக்கு. 'நல்ல தமிழ் அரசிற்கே தன்னை அளித்த நெஞ்சம் அவரின் தமிழ் நெஞ்சம்சோராதமதியோடு சொல்லோடு செயல் சேர்த்து ஓயாது உழைத்து வாழ்வின் வளமெல்லாம் துறந்தவர் வன்னியசிங்கம் அவர்கள்.

பாராளுமன்ற நெறி நன்கறிந்த இப் பெருமகன் பகைவரோடும் பாங்கோடு பழகும் பண்பு பெற்றிருந்தார். ஆளுக்கொரு கொள்கையென அலைந்து திரிந்த தமிழ் இனத்தை நேரான வழியில் இட்டுச் சென்று கூறு நூறு செய்யினும் ஒல்லுமோ நம் இலட்சியம் என்று உறுதி பூண்டு எமக்கு உரிய வழி தமிழ் அரசே என்று எடுத்துக் காட்டியவர் வன்னியசிங்கம் அவர்கள்.

காலத்தை வென்று ஞாலத்தில் நிலைத்து வாழும் நற்பணியாற்றிய இத் தமிழ்க் காவலனை நாற்பத்தெட்டாம் அகவையிலே கருணையற்றகாலன் கவர்ந்து சென்று விட்டான். வெண்ணெய் திரளுகையில் வெண்தாழி உடைந்த நிகழ்ச்சியை இது ஒக்குமெனினும் எம் எண்ணத்தில் ஏற்றம் பெற்று இவ் ஏந்தலின் நினைவை எம் நெஞ்சில் ஏற்று, சொன்னதைச் செயலிற் காட்டும் செம்மல்களாய் யாம் மாறின், வாழ்வுண்டு வளமுண்டு எம் வண்டமிழ் இனத்திற்கு என்று கூறி, வாழிய வன்னியர் புகழ் என வாழ்த்தி இனிது அமைப்பாம்.

# இனத்துக்குற்ற...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனம்! ஏன். அவர்ஏற்றி வைத்த தீபத்தை அணைய விடலாமா நாம். கூடாது தானே. ஆகையால்......

எடுத்தகருமத்தை முடிக்க எண்ணும்போது எதிர்ப்புகள் இருக்கலாம். ஆனல், ஒன்றைமட்டும் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, தாக்கம் ஏற்படும்போதுதான் ஊக்கம் பிறக்கும்; ஊக்கம் பிறக்கும்போதுதான் ஆக்கம் விளையும். எனில்—நம் முயற்சியில் தேக்கம் தேவையில்லை; தூக்கமின்றி உழைத்து அவர் நோக்கம் நிறைவேற வழிவகுப்போம். அதுவே! நாம் அமரரான வன்னியசிங்கத்தாருக்குஆற்றக்கூடிய அருமையான கைம்மாறு அன்றிநாம வேறு என்னதான் செய்யமுடியும்? ஞாபகார்த்த விழாக்கள் கொண்டாடினல் மட்டும் போதுமா? போதாதே! அவர் இட்டதைச் செய்து; அவர் தொட்டதை முடிக்க வேண்டும். யாவரும்சேர்ந்து அதனைச் செய்வோமாக.

# திரு. வி. க. வின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். சொற்கள் இவர்க்கு அடிமைப்பட்டு அவர் வகுத்த வழியே பொருளையீந்தன.

சமரச சன்மார்க்க மாநாடு, இயற்கை வைத்திய மாநாடு, தமிழர் மாநாடு, வட ஆர்க்காடு, தென்ஞர்க்காடு, திருநெல்வேலி, சாத்தூர், திருச்சிராப்பள்ளி முதலிய விடங்களில் நிகழ்ந்த மாநாடுகள் ஆகியவற்றிற்கு இதர் தலைமைதாங்கி நிகழ்த்திய பேருரைகள் 'தமிழ்த் தென்றல்' எனும் பெயரில் வெளிவந்துள்ளன. அவற்றில் இவர் ஓரிடத்தெனினும் உணர்ச்சிவசப்பட்டுப் பொருளற்ற சொற்களையும் ஒருமை பன்மை மயக்கம் முதலிய இலக்கண வழுக்கொண்ட வழக்குகளையும் பயன்படுத்தாதது இவரின் ஆழ்ந்த புலமைக்கு அறிகுறியாகும்.

'மேல்நாட்டுப் பொருள்கள் நமது நாட்டில் பரவுவதால், நமது நாட்டிலுள்ள பல தொழிலாளர் வறுமையால் பீடிக்கப்பட்டு வருந்துகின்றனர். நம்மவர் உண்ணும் உண்கலம் யாருடையது? உடுக்கும் உடை யாருடையது? உறங்கும் படுக்கை யாருடையது? எழுதும் கருவி எந்நாட்டினது? எழுதும் காகிதம் எந்நாட்டினது? எரியும் விளக்கு எந்நாட்டினது? குழந்தைப்பால் நம்முடையதாக இல்லையே! குடிக்கும் பாத்திரம் நம்முடையதாக இல்லையே! ஏறும் வண்டி நம்முடையதாக இல்லையே! நீர்க்குழாய் நமக்குண்டோ? சாக்கடைக் குழாய் நமக்குண்டோ? சர்க்கரை நமக்குண்டோ? மேலுங்கீழும் சுற்றும் முற்றும் உற்று நோக்கினல் நம் தாயைக் காணேம்! அயல்நாட்டு மாதர்களே தோன்றுகிருர்கள்' என்பது இவரின் பேச்சுத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

மேனுட்டுப் பொருள்களை இந்தியாவிற்கு இறக்குமதி செய்வதால் விளையும் கேட்டினைப் பொது மக்கள் நன்குணருமாறு விளக்களாகவே பேச்சின் பெரும் பகுதியினையமைத்துள்ளார். இப்பகுதி தாய்நாட்டின் நலனைக் குறிக்கோளாகக்கொண்டு வாழுங் குடிமகனெருவனின் ஏக்க நிலையைக் கேட்போர் உள்ளங்கவருமாறு சித்தரிக்கின்றது. காகிதம், பாத்திரம் போன்ற மிகச் சில பிறமொழிச் சொற்களே இப்பகுதியினை யணிசெய்கின்றன. அவை கூடத் தேவை நோக்கி வழங்கப்பட்டன. வாக்கியங்கள் பொருட்செறிவும் ஓசை நயமும் ஒருங்கே செறிந்தனவாகக் காட்சியளிக்கின்றன. வேற்று நாட்டுப் பொருள்களைப் பெற்று வாழும் மக்கள் நிலையினைத்தாயின் அணைப்பின்றி யயலாளின் தாய்மையையேற்று வளரும் பிள்ளை நிலைக்கு ஆசிரியர் ஒப்பிடுகின்ருர். ஈழத் தமிழரும் இவரின் பேச்சுக்களைக் கேட்கும் அரிய வாய்ப்பினை 1929ம் ஆண்டிற் பெற்றனர்.

### இலக்கியப் பணி

சுந்தரனர் தாம் அறிந்தவற்றைப் பிறரும் அறிய வேண்டுமென்னும் தொல்லாணை நல்லாசிரியர் மரபிற்ருேன்றியவர். ஈழத்துப் பல்கலைக் குரிசில் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் வெசுலிக் கல்லூரித் தமிழாசிரியராயிருந்த பொழுது அவரின் நன்மாணுக்கருள் இவர் விளங்கினர். திரு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் பல நூல்களை யியற்றியும் பழைய நூல்களுக்குத் தெளிவான விருத்தியுரைகள், அரும்பதவுரைகள முதலியன வெழுதியும் சைவ சமயக்கோட்பாடுகளை விளக்கிச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியும் சுந்தரனர்க்கு வழிகாட்டினர். சுந்தரனரின் தமிழ்ப்பணிக்குப் பிள்ளையவர்களே வித்திட்டவர்.

சுந்தரனர் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், இந்தியாவும் விடுதலையும், என் கடன் பணி செய்து கிடப்பதே, முருகன் அல்லது அழகு, பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி, ஆலமும் அமுதமும், நினைப்பவர் மனம், நாயன்மார் திறம், சைவத்தின் சமரசம், தமிழ் நூல்களிற் பௌத்தம், இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம், தமிழ் நாடும் நம்மாழ்வாரும், சித்தி மார்க்கம், நாயன்மார் வரலாறு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, உள்ளொளி முதலிய தலைப்புக்களைப் பெற்ற வுரைநடை நூல்களை எழுதினர். அவற்றுட் சில அவர் பல்வேறு காலத்திற் பல்வேறிடங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகளாவன.

திரு. வி. க. 'வாழ்க்கைக் குறிப்புக்கள்'என்ற பெயரில் தம் வாழ்க்கை வரலாற்றினைச் சுவைபட எழுதியுள்ளார். இவரின் நூல்கள் சிரிய செந்தமிழ் நடைக்கு எடுத்துக்காட்டுகளாகமிளிர்கின்றன. இவர் உடலோம்புதல் பற்றி மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் என்னும் நூலில் வருமாறு கூறுகிருர்: 'நல்வாழ்விற்கும் நல்லறம் ஓம்புதற்கும் வேறு பல நற்ருெண்டிற்கும் நல்லுடல் தேவை. உடலையோம்பாது வாழ்பவன் இயற்கை இன்பத்தையாதல் இறை இன்பத்தையாதல் நுகர்வோனுகான். 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்று பாடிக் கண்டதைத் தின்று கள்ளுண்டு பொருட் பெண்டிர் இன்பந்துய்த்து உடலில் ஒன்றரை அங்குல அழுக்கேறி ஊறத் திரிபவன் ஆண்டவன் அன்பனுகான். மனிதன் உடல் கடவுளின் இயற்கைக்கோயில் என்று உலகிற்ருேன்றிய பேரறிஞர் பலருங் கூறியுள்ளனர். உடல் கடவுளால் உயிர் விளக்கத்துக்கெனக் கொடுக்கப்பட்ட ஒரு பெரும் உடைமை. உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை என்னென்று கூறுவது! உயிர் நலம் உடல் நலத்தைப் பொறுத்து நிற்பது. உடலைப் பல தீய வழியில் உழற்றி நோய்வாய்ப்படுவோனுக்கு அறிவு விளக்க முருது ஒன்றை ஊன்றி உன்னலும் அவனுல் இயலாது.' இப்பகுதிற் கையாளப்பட்ட சொற்கள் யாவும் எளிய தூய தமிழ்ச் சொற்கள். அவை கதிர்த்துக் கம்பீரமாக வியங்குகின்றன. பொருள்நயமும் ஓசை நயமும் செறிந்த சொற்ருெடர்களாக விளங்குகின்றன. பிறமொழிச் சொற்களின் செல்வாக்கினையோ அவை மெருகூட்டும் செயற்கை நடையினையோ நாம் இங்கு காண விழைதல் பேதமை.


சுந்தரனர் செந்தமிழ்ப் பாவலராகவுந் திகழ்ந்தார். உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல், திருமால் அருள்வேட்டல், பொதுமை வேட்டல், கிறித்துவின் அருள் வேட்டல், புதுமை வேட்டல், சிவனருள் வேட்டல் முதலிய தலைப்புக்களிற் பல பாக்களைப் பாடித் தமிழை வளம்படுத்தினர்.

இத்தகைய நற்பணியாற்றிய தமிழ்த் தொண்டர் திரு. வி. கலியாணசுந்தரனரை ஈழத் தமிழராகிய நாம் என்றும் நினைவு கொள்வோமாக. வாழ்க நற்றமிழ்! வாழ்க நற்றமிழ்ப்பணி!!


தையலர் விரும்பும்
தையல் மெஷின்

மினேர்வா

சிறப்பும் வனப்புமிக்க
தையல் மெஷின்
இப்பொழுது வெகு சுலபமான
மாதாந்த கட்டுப் பணத்திற்கு
உங்களுக்குக் கிடைக்கும்



126

நுண்ணிய தயாரிப்பு, நாசூக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும் அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

3 லாச்சிகள் கொண்ட கெபினட்
வழக்கமான விலை ரூபா 540/-

புதிய வரி விதித்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

இப்பொழுது விற்கப்படும் விலை ரூபா 420/-

சோல் ஏஜெண்டுகள்:

செண்ற். அந்தனீஸ்
ஹார்ட்வெயர்
ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கினர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 4261-2, 3.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




அறிவுரை: 2

# ஆசை

ஆசைகள் இல்லாத மனிதன் இந்தஉலகில் ஒருவனும் இல்லை.

ஆசைகளை ஒதுக்கிவிட்டு வாழ வேண்டும் என்று கூறுவது நடைமுறைவாழ்வுக்கு ஒவ்வாத ஒன்றாகும்.

மனிதன் இவ்வுலகில் தோன்றிய கணமே, தனது தாயின் மீது பற்றுதல் வைக்கிறான்.

ஆசையுடன் பிறந்த மனிதன், ஆசையுடனேயே சாகிறான்.

ஆசை இல்லாவிடில், முயற்சி இல்லை. முயற்சி இல்லாவிடில், வாழ்க்கையே இல்லை. இதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்.

ஆசைப்படுவது குற்றமெனில், நாம் இவ்வுலகில் பிறந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை.

ஆசை இருக்கக்கூடாது என்று சொல்வது தவறு.

ஆனால்......

ஆசைக்கு ஒரு எல்லை வகுக்க வேண்டும் என்று சொன்னால், அது தவறில்லை. ஏற்கவேண்டிய நியாயம்.

சந்தர்ப்ப, சூழ்நிலை காரணமாகவும், பால்யப் பருவத்து நிகழ்ச்சிகள், தாய் தந்தையர் விருப்பு வெறுப்புக்கள், உணர்ச்சிகள் இவற்றின் தொடர்பினாலும், ஒரு மனிதனுக்குத் தெரியாமலே சில ஆசைகள் அவனுடன் வளர்ந்து விடுவதுமுண்டு.

அந்த ஆசைகள் அவனுக விரும்பும் ஆசைகளல்ல என்பதை, அவன் என்று உணருகின்றானோ, அன்றே அவற்றுக்கு முடிவு கட்ட அவன் முயலத் தொடங்குவான்.

ஆனால், அவன் தானாகவே தனக்கென ஏற்படுத்தும் ஆசைகளும் உண்டல்லவா?

அவற்றை அவன் தன் நிலைமைக்கும், திறமைக்கும், சந்தர்ப்பத்துக்கும் ஏற்ற வகையில் வகுத்துக் கொள்ளவேண்டும்.

ஆசை மனிதனை ஆட்கொள்ளக் கூடாது, மனிதன் ஆசையை ஆட்கொள்ளவேண்டும்.

தொடர் கதை

# அதிசயத்தீவில் கலிவர்

—மாஸ்டர் சிவலிங்கம்—

தனது கருத்தை அவர்களுக்குப் புரியவைப்பதற்குள் கலிவருக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. சிறிது நேரத்தில் தளபதியின் வேண்டுகோட்படி தாக்குதல் நிறுத்தப்பட்டது. திரண்டிருந்த சிப்பாய்க் கூட்டத்தை நோக்கித் தளபதி ஏதோ உத்தர விட்டான். கலிவருக்கு ஒன்றுமே புரியவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் நூற்றுக் கணக்கானவர்கள் உணவுப் பண்டங்களைச் சுமந்து வந்து அரை அடி உயரமான அந்த மேடையிலே குவித்தனர்.

அந்தஉணவுக் குவியலில்... ...நமது நாட்டு எலி அளவிலான அவிக்கப்பட்ட ஆடுகளும் கிடந்தன. அகோர பசியால் பீடிக்கப்பட்டுக் கிடந்த கலிவர் அந்த உணவுக் குவியலைச் சிறிது நேரத்தில் முடித்துவிட்டார். அந்த அதிசயக் காட்சியைக் கண்ணுற்ற அத் தீவுக் குட்டி மனிதர்கள், ஆச்சரிய மிகுதியில் பலத்த கோஷம் கிளப்பினர். உலகிலேயே மிகப் பெரிய ராட்சதன் கலிவர் தான் என்று அவர்கள்முடிவு கட்டினர்.

உணவை முடித்தபின்பு குடிப்பதற்குத் தண்ணீருக்குப் பதிலாக 'உவைன்' என்னும் மதுவையே கலிவருக்குக் கொடுத்தனர். பல நாட்களுக்குப் பின்பு 'உவைன்' கிடைக்கிறதே என்ற எண்ணத்தில் கலிவர் மிகவும் தாராளமாகக் குடித்தார். ஒருசில நிமிடங்களில்......! கலிவர் மது மயக்கத்தில் ஆழ்ந்து தூங்க ஆரம்பித்து விட்டார். பல மனிதர்கள் கலிவரின் மார்பிலே ஏறி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்துகொண்டே நடனமாட ஆரம்பித்துவிட்டனர்.

ஆறு அங்குல மனிதர்கள் வாழும் அந்த 'லிலிப்புட்' தீவின் அரசர், கலிவரின் செய்தியை அறிந்ததும், எப்படியாவது கலிவரை அரண்மனைக்குப் பக்கத்தில்கொண்டுவந்து சேர்க்கும்படி கட்டளையிட்டார்.

ஆயிரம் தச்சர்கள் சேர்ந்து இடைவிடாது பல மணி நேரங்கள் வேலைசெய்து ஏழு அடி நீளமும், ஒரு அடி அகல முமுடைய வண்டியொன்று தயாரித்தனர். அந்த வண்டியில் இருபத்திரெண்டு சக்கரங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

மது மயக்கத்திலே கிடந்த கலிவரைச் சுமார் இரண்டாயிரம் சிப்பாய்கள் வெகு சிரமப்பட்டு அந்த வண்டியிலே ஏற்றிப் பிணைத்தனர். அந்த வண்டியில் ஆயிரத்து ஐந்நூறு உயர்சாதிக் குதிரைகள் பூட்டப்பட்டன. வண்டியின் இரு மருங்கிலும் நூற்றுக்கணக்கான வில்வீரர்கள் அணிவகுத்துச் செல்ல வண்டி நகர்ந்துகொண்டிருந்தது, கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அரண்மனையை நெருங்கியதும்...வண்டி நிறுத்தப்பட்டது.

மந்திரி, பிரதானிகள் புடைசூழ அத்தீவின் அரசர் கலிவரைப் பார்ப்பதற்குப் பீடு நடையுடன் வந்து கொண்டிருந்தார். அத் தீவு மக்களைவிட அரசர் ஒரு அங்குலம்உயர்ந்தவராக—அதாவது ஏழு அங்குல உயரமுள்ளவராகக் காட்சியளித்தார். கலிவரைக் கண்ணுற்ற அரசர்...! 'வீல்' என்று குரல் கிளப்பியபடி, வாய் பிளந்து நின்றார்.

(தொடரும்)

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில், சிரேஷ்ட பிரிவில் முதற் பரிசு பெற்ற, திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஜெயகுமாரி சண்முகநாதனைப் படத்தில் காண்க. கிளிநொச்சியில் நடைபெற்ற பெரும் போட்டியில் இவர் இரண்டாவது பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



மாணவர் சிறுகதை:

# தபாற்காரன்

நவாலியூர் த. பரமலிங்கம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

காலம்-போய்க் கொண்டு தான் இருந்தது. அதுபோல் அழகனின் வாழ்க்கையிலும், புதுப் புதுச் சம்பவங்கள் வந்தும், போய்க் கொண்டுமிருந்தன. இந்தக் காலச் சுழற்சியிலே ......அழகனின் தாய் தந்தை மறைந்தது மட்டுமன்றி, அவர்கள் தேடி வைத்த செல்வங்களும், அற்று விடுகின்றன.

இந்த நிலையில் தான்—அழகனின் சிந்தனை, சரியான வழியில் செல்ல ஆரம்பிக்கிறது. வேலையற்று—தங்குவதற்கு நல்ல இடமற்று—பணமுமற்றிருக்கும் அழகனுக்கு, அந்தச் சிந்தனைகள் தோன்றித்தான் என்ன பலன்?

அவனின்—'செருக்'கெல்லாம் அடங்குவதற்குக் காலம் வட்டியும், குட்டியுமாகப் பழிவாங்கி விட்டது. அதில் நலிந்து விட்ட அழகனால், ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை.

ஊராரின்—'வேலை வெட்டியில்லாத வீணன்......' என்ற இழிப் பேச்சைத் தவிர, அவன் சம்பாதித்ததை என்று கூறுவதற்கு—வேறொன்றுமேயில்லை!

இப்படிக் காலம் கழிந்து கொண்டிருந்த போதுதான், அழகனின் தந்தைக்கு நெருங்கிய நண்பரான ஒரு பெரிய மனிதரின், உதவி அவனுக்குக் கிட்டியது. அவரும்—'இனியாகிலும் திருந்தி நடப்பான்...' என்று தபால் கந்தோரில் ஒரு (பியூன்) 'தபாற்காரன்', வேலை பெற்றுக் கொடுத்தார்.

ஆகவே—தனது இலட்சியமாகக் கொண்டு, அழகன்—தன்னுவியன்ற பணியைத் 'தபாற்காரனு'க தனது கிராமத்துக்கே, [illegible] ஆரம்பித்துவிட்டான்.

[யாவும் கற்பனை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் அமுத வாக்கு

### தமிழ்

தமிழ் இந்நாட்டில் ஆட்சி மொழியாவது ஆட்சியாளர் கையில் இல்லை. தமிழ் பேசும் மக்கள் கையில்தான் தங்கியுள்ளது.

### உரிமை

நாம் நமது உரிமைகளுக்காக உணர்ச்சிக் குரல் எழுப்புவதைப் பலர் வகுப்புவாதம் என்கிறார்கள். அப்படிக் கூறப்படுவதால் நாம் நமது போராட்டத்தை நிறுத்திவிடத்தயாராக இல்லை. உரிமைகளுக்காகப் போராடுவது வகுப்புவாதமென்றால் அந்த வகுப்புவாதத்தினை நாம் முழுமனதோடு வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம்.

### மாணவரும் அரசியலும்

நமது போராட்டத் தொண்டர் படையில் மாணவர்களும் சேர வேண்டும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா கூட மாணவர்களைப் பயன் படுத்தியுள்ளார். மாணவர்களுஞ் சேர்ந்து போராடி, தம் மொழி உரிமையையும் கலாச்சாரத்தினையும் நாட்டினையும் காப்பாற்றும்படி வேண்டுகிறேன்.

### அடக்குமுறை

ஒரு சிலரை அடித்து வீழ்த்துவதாலும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுவதாலும் இராணுவத்தை முரட்டுத்தனமாக உபயோகிப்பதாலும் தமிழரின் விடுதலை இயக்கத்தினை நசுக்கிவிடலாமென நினைத்தால், அது இந்த அரசாங்கம் செய்யும் முட்டாள் தனமான முடிவாகவே இருக்கப் போகிறது.

### போராட்டம்

மற்றொரு மொழிக்கு கேடு பயக்காது சிங்கள மொழியோடு தமிழ் மொழிக்கும் சம உரிமை வேண்டுமென்று போராடுவது தேசத் துரோகமானால், தூக்குக் கயிற்றிலும் தொங்கத் தயார்.

### சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகம் என்றுமே தோல்வி கண்டிராத ஓர் உன்னத ஆயுதமாகும்.

—தொகுத்தவர்:
'தாமரைவாண்'
ஏழாலை.

# புதுமைகள் பாரீர் பாரினிலே - (18)

—அன்ரனி பெர்னண்டோ, கிரிலப்பனை—

## சிரிப்பும் நெருப்பானதேனோ?

தனது வீட்டு வாசலில் அமர்ந்திருந்த ஒரு கிழவர் மெள்ளச் சிரித்தார். பிறகு சற்றுப் பலமாகச் சிரித்தார். பின்னர் இன்னும் உரத்துச் சிரித்தார். வர வர அவர் சிரிப்பொலி கூடிக் கொண்டே வந்தது. கிழவர் சிரித்தார்!... சிரித்தார்... ஓகோ!... ஓகோ!... என்று விடாது பலத்த சத்தமாகச் சிரித்துக் கொண்டே இருந்தார். கண்களால் கண்ணீர் வடியுமளவிற்கு அவர் வேகமாகவும் உரத்தும் சிரித்துக் கொண்டே இருப்பதைக் கண்டு அயலவர்கள் பிரமிப்படைந்தனர்.

சற்று நேரத்தில் ஒரு குழந்தையும் சிரிக்கத் தொடங்கியது. அடுத்து அங்கிருந்த ஒரு பெண்ணும் சிரிக்கவாரம்பித்தாள். ஓர் இளைஞனும் அவர்களோடு சேர்ந்து சிரி சிரி யென்று சிரிக்கலானான். விரைவில் நூற்றுக் கணக்கானோர் சேர்ந்து ஓயாது குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கலானார்கள். வயிறு குலுங்கச் சிரித்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். தரையில் உருண்டு உருண்டு சிரித்தனர். அடி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தனர். எல்லோரும் சிரித்துக்கொண்டே இருந்தனர்.

இவர்கள் எதற்காகச் சிரிக்க வேண்டும்? ஏதாவது நகைச் சுவை நிகழ்ச்சியைக் கண்டா? அல்லது யாராவது அவிழ்த்துவிட்ட விகடத் துணுக்கைக் கேட்டா? அப்படி ஒன்றுமே இல்லை. இவர்கள் எவ்வித காரணமும் இல்லாமல் இருந்த வாக்கில் இப்படிச் சிரிக்கத் தொடங்கியதுதான் எல்லோருக்கும் பெருந் திகைப்பை உண்டாக்கியது.

இந்தச் சம்பவம் தங்கனிக்காவில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் நடந்தது. அவர்கள் 'சிரிக்கும் வியாதி'யால் பீடிக்கப்பட்டே சிரித்தார்கள் என்பது பின்னர் தெரியவந்தது. இது ஒரு பொல்லாத வியாதி. இதற்குச் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பும் இந்தச் 'சிரிக்கும் வியாதி' பரவியதால் இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் ஏககாலத்தில் சிரிக்கத்தொடங்கினர். கிராமத்திற்குக் கிராமம் தோற்றிப் பரவும் இந்த நோய் வைத்திய நிபுணர்களைக் கூட வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. பள்ளிப் பருவத்தினரான பாலர்களையே இந்த வியாதி எளிதில் பற்றிக்கொள்ளுகிறதென்று அவர்கள் சொல்கின்றனர்.

மனக்கவலைகளைப் போக்கி மனிதர்களின் ஆயுளை அதிகரிக்கும் சிறந்த மருந்தென்று பல பெரியார்களின் புகழ் மொழிக்குப் பாத்திரமானது சிரிப்பு. இந்தச் சிரிப்பு இப்போது 'சிரிக்கும் வியாதி'யாக உருவெடுத்து நெருப்பாகச் சுடுவதற்கு ஆரம்பித்திருப்பது பெரிய புதுமையாகவே இருக்கிறது.

# கலைஞர் கருணாநிதியின் தொகுதியில்

# 'சுதந்திரனைக் கண்டோம்'

## திருச்சி மலைக்கோட்டை வாயலில்

## பிள்ளையாரின் ஆசிர்வாதம் கிடைத்தது

### காவேரியின் வனப்பு கண்கொளாக் காட்சி

பேரூரில் மொழிஆராய்ச்சியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, குவித்துக் குவித்து வைத்திருந்த கொய்யாக்கனிகளிலும் கனிசமான ஒரு பகுதியைத் தீர்த்துக் கட்டிக்கொண்டு கோயம்புத்தூர் மீளுகின்ருேம் நாம்.

**எஸ். டி. எஸ். சும் காருகுறிச்சியும்**

நாம் தங்கியிருந்த 'நஞ்சப்ப முதலி' சத்திரத்துக்கு அண்மையில் இருந்த ஆலயத்தில் அன்று சினிமா நடிகை எஸ். டி. சுப்புலட்சுமியின் கதாகாலக்ஷேபம் இருக்கவே பேசாமல் ஆலயத்துள் நுழைகின்ருேம் நாம். 'வள்ளி திருமணம்' பற்றி அன்று மிக அழகாகக் கதாகாலக்ஷேபம் செய்கின்ருர் எஸ். டி. எஸ்! 'அடடே! இவர் வெறும் நடிகைமட்டுமல்ல; கதாகாலக்ஷேபத்திலும் வெளுத்துக் கட்டுகின்ருரே!' என்று எஸ். டி. சுப்புலட்சுமிக்கு ஒரு பாராட்டைத் தெரிவித்துவிட்டு வெளியேறுகின்ருேம் நாம். அப்படி வெளியேறிய நம்மிடம் ஒரு சிறுவன் ஓடிவந்து ஒரு 'நோட்டீஸை'த் திணித்துவிட்டுச் செல்கின்ருன்.

என்ன என்று பார்க்கின்ருேம்.

'நாளை இரவு இதே ஆலய முன்றலில் நாதஸ்வரமேதை காருகுறிச்சி அருணாசலம் நாதஸ்வரம் வாசிக்கின்ருர்கள்!' என்று விளம்பரத்தில் கண்டிருக்கின்றது.

இந்த விளம்பரத்தைப் பார்த்த மூன்று மாதத்துள் நம் காருகுறிச்சி அவர்கள் நம்மைவிட்டுப் பிரிவார் என்ற ஜோசியம் நமக்கு அப்போது தெரிந்திருந்தால், அன்று கோவையில் நிகழ்த்திய அவருடைய கச்சேரியைத் தவறவிட்டிருக்கமாட்டோம்! கோயம்புத்தூர்ச் சுவர்களில் காருகுறிச்சியின் கச்சேரி பற்றி ஒட்டப்பட்டிருந்த விளம்பரங்கள் முற்றுகக் கிழிபட்டுக்கூட இருந்திராது. அதற்குள் அந்த இசைமேதை அமரராகிவிட்டார்.

அடுத்த நாள் இரவு நிகழ இருந்த காருகுறிச்சியின் நாதஸ்வர இசையைப் பருகும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. அடுத்த நாட் காலையே திருச்சிக்கு நாம் புறப்படவேண்டியிருந்ததால் கிடைத்தற்கரிய அந்த இசைவிருந்தைப் பறிகொடுக்கும்படியாயிற்று!

**மீண்டும் திருச்சியா?**

சத்திரத்தைக்காலிசெய்துவிட்டு, மூட்டை முடிச்சுசகிதம் கோயம்புத்தூர் ரெயில் நிலையத்துக்கு வருகின்ருேம் நாம்.

'ம்; வந்து......?'

'அட, அப்புறம் நடந்த விபரத்தைத்தான் நாம் ஏற்கனவேயே பார்த்துவிட்டோமே! திருச்சி 'லோக்கல்' ரெயிலில் நம் பிரயாணக் கோஷ்டியினரைத் திணித்துவிட்டது; நான் மட்டும், இந்தப் பிரயாணக் கட்டுரையின் விறு விறுப்பு-வேகம் ஆகியவற்றை உத்தேசித்து திருச்சிக்கு ஸ்டேட் 'எக்ஸ்பிரஸ்' பஸ்ஸில், சவுகரியமாய்ப் பிரயாணம் செய்தது, 'மூடு' வரவழைத்தது; பஸ்ஸில் வழித்துணையாகவும், பேச்சுத் துணையாகவும் ஸ்வீடன் நாட்டைச்சேர்ந்த ஒரு மூதாட்டி கிடைத்தது ஆகிய விபரங்களெல்லாவற்றையும்தான் நாம் இக்கட்டுரைத் தொடரின் ஆரம்ப அத்தியாயத்திலேயே பார்த்துவிட்டோமே!......

**பழைய நிகழ்ச்சி**

'ஸார்! இப்படியா ஒருத்தர் இந்த வெட்ட வெளியில் இருந்து கொண்டு தூங்கிவழிவார்கள்!'

திடுக்கிட்டுக் கண்விழித்த நாம் கண்களைச் சுழல விடுகின்ருேம். வெயில் 'சுள்' என்றுஅடிக்கின்றது. திருச்சி ஸ்டேஷன் அந்தக் காலை வெயிலில் கூதல் காய்ந்து கொண்டு நிற்பதும் தெரிகின்றது. முந்திய இரவு நமக்கு நேர்ந்த நிகழ்ச்சியும் ஞாபகத்துக்கு வருகின்றது. ஸ்டேஷனில் பெண்களுக்குரிய 'ரூமில்' அந்த அன்புள்ளம்கொண்ட பொலீஸ்காரர் நம்மைத் தூங்கச் சொன்னது; 'மைனர்' மகாலிங்கம்தலைமையில் 'மதுரை முனியாண்டி' ஓட்டலில் நாம் ஒரு 'பிடி' பிடித்தது; அந்தப் பொலீஸ்காரர் சொல்லியபடி, அந்தப்பெண்கள் 'ரூமில்' துயின்றது; அப்புறம் ஓர் எமகாதகப் பொலீஸ்புலி வந்து குறைத் தூக்கத்தில் நம்மை எழுப்பி வெளியே போகச்சொன்னது; வெளியேவந்த நாம் காபி சாப்பிட்டது; ஸிகரட் பிடித்தது, 'ஹாயாக' ஓரிடத்திலிருந்து நம் பிரயாண அநுபவத்தை இரை மீட்டது......மீட்டது......அப்புறம்? அப்படியே தூங்கிப்போனது, இதோ எழும்பியிருப்பது எல்லாமே ஞாபகம் வருகின்றது.

கொண்ட நாம், மலைக்கோட்டையில் 'பாசறை' அமைத்துத் திருச்சி நகரைக் கண்காணித்துவரும் களிறுமுகத்தானை வணங்குதற்காக மலைக்கோட்டை வாசலுக்கு வருகின்ருேம். அப்படிவந்த நம்மை மலைவாசலிலேயே

**நவம்**

வைத்து வரவேற்கின்ருர் உலகத் தலைவனுன உச்சிப் பிள்ளையார்!

**'பிள்ளையார் ஆசிர்வாதம்'**

உண்மையில் பிள்ளையாரே நேரில் வந்து தம் துதிக்கையை உயர்த்தி எம்மை ஆசிர்வதித்தார்! அதற்குக் கூலியாக 25 பைசா உபயமும் பெற்ருர் மனுஷர்!


விஷயம் வேருென்றுமல்ல; மலைவாசலில் ஒருத்தன் ஒரு யானையோடு நிற்கின்ருன். மலை ஏற வரும் பக்தர்களிடம், அவன் கூறுகின்ருன், 'இந்த யானையின் துதிக்கையில் 25 பைசா வையுங்கள்; உங்கள் தலையைத் தொட்டு அது உங்களை ஆசிர்வதிக்குப்!' என்று. வம்புக்கு அதன் துதிக்கையில் 5 பைசா நாணயத்தைக் கொடுத்தால், அதை வாங்க மறுப்பதுடன், தலையை அப்படியும், இப்படியும் ஆட்டி ஆசீர்வதிக்க மறுப்பும் தெரிவிக்கின்றது! நாணயம் தெரிந்த யானை! பிழைப்பில்தான் எத்தனை ரகம் பாருங்கள்?'

திருச்சி டவுனை ஒருதரம் சுற்றிப் பார்த்துக்கொண்டு, நேரே பஸ் ஏறுகின்ருேம், தஞ்சைக்கு!

**கருணாநிதியின் தொகுதி**

தி. மு .க. எம்.எல்.ஏ. திரு. மு. கருணாநிதியின் தொகுதியான தஞ்சாவூரில் நாம் பார்ப்பதற்கு எத்தனையோ இருக்கின்றன.

தஞ்சை பஸ் நிலையம் மிக அழகாக இருக்கின்றது. பஸ் நிலையத்தில் நாம் இறங்கியதும் நம்மைக் கவர்ந்த அதிசய வஸ்து அங்கு விற்பனைக்கு அடுக்கி வைத்திருந்த கொய்யாக் கனிகள்! பேரூரில் பார்த்த கொய்யாக் கனிகளுக்கும், இங்கு அடுக்கி வைத்திருக்கும் கொய்யாக் கனிகளுக்கும் எத்தனை வேறுபாடு? தஞ்சையில் நாம் கண்ட கொய்யாக் கனிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விளாம்பழம் பருமனைக் காட்சியளித்தன. இங்கோ, கண்டவர் காமுறும் வண்ணம் எலுமிச்சம்பழ நிறத்தில் புத்தம்புதுசாக இருந்த அவை உண்பதற்கும் உருசியாக இருந்தன! ஒவ்வொன்றும் என்ன விலை என்கிறீர்கள்? 9 பைசா; 10 பைசா!




**வரலாறு கண்ட காவேரி**

இரவு நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகள் எதுவும் தெரியாமல் அடித்துப்போட்ட மாதிரி இன்னமும் தூங்கிக்கொண்டிருக்கும் நம் பிரயாணக் கோஷ்டியினரைத் தட்டி எழுப்பி, ஸ்டேஷனுக்கு எதிரே நின்ற டவுண் பஸ்ஸில் அவர்களையெல்லாம் அள்ளிப் போட்டுக்கொண்டு திருச்சி 'சிந்தாமணி'த் தெருவில் உள்ள சின்னச்சாமி சத்திரத்துக்கு வந்து சேருகின்ருேம் நாம்!

அப்புறம் எல்லாமே 'மளமள' வென்று நடைபெறுகின்றன......

அகண்ட காவேரியில் அசதியும், அலுப்பும் தீர நீராடுகின்ருேம். காவேரி தண்ணீர் பட்டால் கன்னியர் மேனி மட்டும் தங்கமாகவில்லை; காளையர் மேனியும் தங்க நிறம் பெறுகின்றது! கன்னித் தமிழகத்தின் வரலாறு பல கண்ட காவேரித் தாயின் இளமையும், செழிப்பும், மதிலுயிரம் கழிப்பும் [illegible] களிப்புக்குள்ளாக்குகின்றன. குளிப்பை முடித்துக்

(22)

**உச்சிமலைக் கோட்டை**

மலை உச்சியை அடைந்த நாம் ஆனைமுகனைக் கரங் குவித்து வணங்கிவிட்டு அங்கிருந்த படியே திருச்சி நகரையும், காவேரி ஆற்றையும் கொள்ளிடத்தையும் பார்த்துவிட்டுக் கீழிறங்குகின்ருேம்.

உடனடியாக ஸ்ரீ ரங்கம் பஸ்ஸில் ஏறி திருச்சியிலிருந்துமூன்று நான்கு மைல்களுக்கப்பாலுள்ள ஸ்ரீரங்கம் சென்று, ஸ்ரீரங்கநாதனையும் (ஐயர்மாரின் 'பிடுங்கல்' இங்கு ஜாஸ்தி) இப்பாலுள்ள திருவானைக்கா ஜலமூர்த்தியையும் (தண்ணீருக்குள் இருக்கின்றது) இங்குள்ள [illegible] சேவித்துவிட்டு திருச்சிக்கு வருகின்ருேம்.

**தஞ்சைப் பெருங் கோயில்**

ராஜராஜ சோழன் எடுப்பித்த தஞ்சை பெருங் கோயிலையும், அதிலுள்ள நிழல் சாயாத கோபுரத்தையும், புகழ்பெற்ற தஞ்சைப் பெரு நந்தியையும் கருங்கல்லில் செதுக்கியிருக்கும் அற்புத வேலைப் பாடுகளையும் கண்டு வியந்து கொண்டு, தஞ்சை சரபோஜி மன்னனின் சிற்பக் கூடத்துக்கு வருகின்ருேம்.

சிற்பக் கூடத்தில் தேவர்கள் உயிர் பெற்று எழுந்திருக்கிருர்கள். கணபதி, மன்மதன், ரதி, பராசக்தி, நடராஜர் என்று எத்தனையோ சிலைகள் உயிர் பெற்று நிற்கின்றன. நடராஜர் விக்ரகங்களில்தான் எத்தனை ரசம்! கருங்கல்லிலும், உலோகச் சேர்க்கையிலும் உலக நாயகனை வடித்து வைத்திருக்கும் சிற்பியின் திறனை என்ன என்று வர்ணிப்பது? மணிக்கணக்கில் நின்று பார்த்து ரசிக்கத்தக்க அத்தனை மணிச் சிலைகளையும் தாண்டி அப்பால், நூல் நிலையத்துள் நுழைகின்ருேம்.

**வன்னியர் வாய்மொழிகள்**

ஒரு சிலரை அடித்து வீழ்த்துவதாலும், அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுவதாலும், இராணுவத்தை முரட்டுத்தனமாக உபயோகிப்பதாலும் தமிழரின் விடுதலை இயக்கத்தை நசுக்கி விடலாம் என்று நினைத்தால், அது இந்த அரசாங்கம் செய்யும் முட்டாள் தனமான முடிவாகவே இருக்கப் போகிறது.

ஃ

பணம் கொடுக்கிற விடயம் ஒன்று தான் இலஞ்சம் என்று சொல்ல முடியாது. பதவி கொடுப்பதும் பறிப்பதும் கூட இலஞ்ச ஊழல் தான். பிரதமர் தமது பதவியைப் பலப்படுத்துவதற்காக நம்பிக்கை, நாணயம் அற்றவர்களுக்கும் பதவிகள் வழங்குகிருர். இதற்காக இலஞ்ச விசாரணைக் குழு முன்னிலையில் முதலில் நிறுத்தப்படவேண்டியவர் பிரதமரே.

—1959

**சுதந்திரனைக் கண்டோம்**

என்ன விந்தை! அந்த நூல் நிலையத்தில் அந்த வாரத்தைய நமது 'சுதந்திரன்' காட்சியளித்தது! அடங்கா ஆர்வத்துடன் அதை எடுத்துக் கண்குளிரப் பார்க்கின்ருேம். ஏன் நமக்கு இப்படிக் கண் குளிர்ந்த தென்ருல், தமிழ் நாட்டில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்து நமது இலங்கையைப் பற்றிய செய்தி எதுவுமே நமக்குத் தெரியவில்லை. இலங்கை ஷேமமாக அப்படியே இருக்கின்றதா? அல்லது கடலுள் அமிழ்ந்து விட்டதா? என்ற எந்த விபரமும் இலங்கையைப் பற்றித் தெரியாமலேயே இருந்தோம் நாம்! இந்தியாவிலிருந்து நூற்றுக் கணக்கில் தினுசு தினுசான நாள், வார, மாதப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் நம் நாட்டில் வந்து விற்பனையாகும்போது நம் இலங்கையிலிருந்து வெளிவரும் தரமான தமிழ்த் தினசரிகள்—வார இதழ்களில் ஒன்ருவது தமிழ் நாட்டுப் பத்திரிகைக் கடைகளில் விற்பனையாகக் காணேம்!

**கொலையா?**

இந்த நிலையில், பொன்னியின் செல்வன் ஆட்சி புரிந்த இந்தத் தஞ்சை மாநகரில் நமது 'சுதந்திர'னைக் கண்டதும், இறக்கை கட்டிக்கொண்டு திடீரென்று பறந்து சென்று நம் இலங்கையில் குதித்தமாதிரி அல்லது இலங்கையே இடம் பெயர்ந்து நம் முன் வந்து குதித்த மாதிரியான ஓர் உணர்வு பிறந்தது!

நமது நேரத்தில் ஒரு கணிசமான பகுதியை அங்கு கிடந்த, 'சுதந்திரன்' விழுங்கியது! நூல் நிலையத்திலிருந்து அப்பால் சென்ருல் ஓர் அரச தர்பார் நம்மை வரவேற்றது.

நம்மை அழைத்துச் சென்ற வழிகாட்டியிடம், 'இது எந்த அரசருடைய தர்பார்?' என்று நாம் கேட்கவும் அவன் சொன்ன பதில் நம்மைத் தூக்கி வாரிப் போடுகின்றது!

'தர்பாரா ஸார் இது? இந்த இடத்தில் தான் ஸார் சில மாதங்களுக்கு முன் பெரிய 'ஸூட்டிங்கே' நடந்தது!'

'ஆ! ஸூட்டிங்கா?' என்று அலறி விடுகின்ருேம் நாம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25ந் தேதி வெள்ளி முதல்!

கிங்ஸ்லி பிளாஸா

நவா

மற்றும் 5 திரைகளில்!

எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி—அசோகன்
நாகேஷ்—மணிமாலா—புஷ்பலாதா
நடிக்கும்

ஆர். ஆர். பிக்சர்ஸ்

# பணக்காரக் குடும்பம்

கதை வசனம்: சக்தி கிருஷ்ணசாமி—பாடல்கள்: கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி—டைரக்ஷன்: ராமண்ணா
ஸ்டுடியோ : விஜயா—வாகினி

9வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
விஜிதா (அட்டன்)
நியூ சினிமா (குருநாகல்)
லக்ஷ்மி (கரவெட்டி)



லட்சக்கணக்கான ரசிகர்களின் அமோக பாராட்டைப் பெற்று ஈழத்தின் தலை சிறந்த களிப்பூட்டும் சித்திரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!

சித்ராலயா அளிக்கும்...
ஸ்ரீதரின்

# காதலிக்க நேரமில்லை

(ஈஸ்ட்மென் கலர்)

இணையற்ற 8வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை)

மற்றும் 7 திரைகளில்!



சிவாஜி கணேசன்,
சாவித்திரி,
ராஜசுலோசனா,
ராதா, பாலாஜி,
கண்ணாம்பா
தோன்றும்



# படித்தால் மட்டும் போதுமா

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விசுவநாதன்-ராமமூர்த்தி டைரக்ஷன் : பீம்சிங்

கேபிட்டல் (கொட்டாஞ்சேனை)

ஜனத்திரள் நிறைந்த திரைகளில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

இந்தியாவின் பல நகரங்களிலும்
25 வாரங்களுக்கு மேலாக ஓடிய
சிறந்த இந்திப் படம்!

பினு ராய்-ஆஷா பரேக்-பிரதீப் குமார்
பாரத்பூஷன்-ஆகா-ஹெலன்
மினு மும்தாஜ்
நடிக்கும்

ஜெமினியின்

# கங்குத்

இசையமைப்பு : ரவி

வியாழன் 24 முதல்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

மற்றும் பல திரைகளில்!



ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி, தங்கவேலு,
அசோகன்
தோன்றும்

# வாழ்க்கை வாழ்வதற்கே



பாடல்கள் : கண்ணதாசன் இசையமைப்பு : விஸ்வநாதன்-ராமமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டார நாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.